# பிரசண்டவிகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்."

மலர் 22 1955௵ மார்ச்௴ 1௳ இதழ் 23

உள்ளுறை

**அரசியல்**

*தமிழை ஆட்சி மொழி ஆக்குக! (தலையங்கம்)* .... 2
*காலச் சக்கரம்* .... 5
*'திப்பு'வின் சரடுகள்* .... 5

**இலக்கியம்**

*தமிழுக்கு நல்ல எதிர்காலம்* .... 10
*மீட்சி தந்த பெரியார்* .... 13
*தமிழர் மணமும் தாலியும்* .... 28

**கவிதை**

*அமரன் அம்பிகாபதி (காவியம்)* .... 33

**சிறு கதைகள்**

*வெள்ளிக் கோப்பை* .... 17
*ஏமாந்த கமலா* .... 23
*கொழு கொம்பு* .... 37

**நாவல்கள்**

*கடிதம் விடு தூது* .... 7
*ஹோட்டல் கொலை* .... 40

**விமர்சனம்**

*வள்ளியின் செல்வன்* .... 14
*ஒரு சிறந்த குழந்தைப் படம்* .... 15
*அமரகவி பாரதி நாடகம்* .... 31

**சோதிடம்** *எதிர்கால பலன்* .... 46

"விகட"னில் வெளியாகும் கதை, கவிதை, கட்டுரைகளில் காணப்படும்
பெயர்களும், சம்பவங்களும் முற்றும் கற்பனையாகும்.

# தமிழை ஆட்சி மொழி ஆக்குக!

ஆட்சி மொழியாக, தமிழை நம் தமிழ் நாட்டில் ஆக்க வேண்டுமென்று நீண்ட காலமாகவே, தாய் மொழிப் பற்றும் இனப் பற்றும் உடைய பேரறிஞர்கள், அரசியல் தலைவர்கள் வற்புறுத்திக் கூறி வருகிறார்கள். ஆந்திரர்கள் சென்னை ராஜ்யத்தை விட்டுப் பிரிந்து போய்த் தங்களுக்கெனத் தனி ராஜ்யம் ஏற்படுத்திக் கொண்ட பின்னர், இக்கிளர்ச்சி இன்னும் அதிகமாகி யிருக்கிறது. இரு வாரங்களுக்கு முன், சென்னைமா நகரில் நடந்த தமிழ் எழுத்தாளர் மாநாட்டில், 'தமிழை ஆட்சி மொழியாக்க முடியுமா?' என்பது குறித்து ஒரு விவாதம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய அறிஞர்கள், எழுத்தாளர்கள் பெரும்பாலோர், 'தமிழை ஆட்சி மொழியாக்க முடியும்; கூடிய சீக்கிரம் அரசியலார் தமிழை ஆட்சி மொழியாக்கியே தீரவேண்டும்' என்ற கருத்தை அழுத்தந் திருத்தமாக வெளியிட்டார்கள். இவ் விவாதத்தின் பயனாக, தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் செய்யப்பட்ட பல தீர்மானங்களில், 'தமிழை ஆட்சி மொழியாக்க ஏற்பாடு செய்யுமாறு ராஜ்ய, மத்திய அரசாங்கங்களைக் கேட்டுக் கொள்ளும்' தீர்மானமொன்று முக்கியமாக நிறைவேற்றப் பட்டது. அத்துடன், 'அதற்கான திட்டம் ஒன்று வகுத்து, சென்னை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்காக முக்கியஸ்தர்கள் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட் டிருக்கிறது. இவ்விதம் தமிழை ஆட்சி மொழியாக்கும் விஷயத்தில் தமிழ் எழுத்தாளர் மாநாட்டினர் பெரிதுங் கவனஞ் செலுத்தி அதற்கான நடவடிக்கையைத் தொடங்கி யிருப்பது பாராட்டத் தக்கதாகும். இதற்கு முக்கிய காரணம், மொழிப் பற்றும் இனப் பற்றுங் கொண்டு, 'தமிழை அரசு மொழியாக்கியே தீரவேண்டும்; ஆட்சி பீடத்தில் தமிழ் ஒன்றே தெரிந்த தமிழன் அமர்ந்து ஆட்சி செலுத்த வேண்டும்' என்று வெகு காலமாகப் பெரும் முழக்கஞ் செய்து அரும் பெருந் தொண்டு ஆற்றி வரும் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் தமிழ் எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கியது தான். அவருடைய தலைமைப் பேருரையில், 'தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுவது முன்னைவிடத் தற்போது மிக மிக அவசியம்; அதை எளிதாகவும் செய்ய முடியும்; சிரமமொன்றும் இல்லை' என்று தெளிவுபடுத்தி யிருக்கிறார்.

இவ்விதம் தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று எழுப்பிய முழக்கம், இன்று எங்கணும் எதிரொலி செய்து கொண்டிருக்கிறது என்பதை அறியும் போது, நமக்குப் பெரு மகிழ்ச்சியே யுண்டாகிறது.

தமிழ் எழுத்தாளர் மாநாட்டை அடுத்து, தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், பரிசளிப்பு விழா வொன்று நடைபெற்றது. கல்வி யமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவ் விழாவில் பேசுகையில் தமிழ் எழுத்தாளர்கள் கூடிச் செய்த ஆட்சி மொழித் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில், "சட்டசபைகளில் தமிழில் பேசி விடுவதாலேயே தமிழுக்கு ஆக்கம் ஏற்பட்டு விடும் என அரசியல்வாதிகள் சிலர் கூறுவது தவறு. உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் போதனை மொழி யாகுங் காலத்தில் தான் உண்மையாகத் தமிழ்மொழி வளர்ச்சி பெறும். இதற்கான நடவடிக்கைகளைப் பல்கலைக் கழக நிர்வாகிகள் தான் தக்க விதமாக எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று ஆணித்தரமாகத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் அத்துடன் பேசி நிறுத்தி விட்டிருந்தால், இப் பேச்சை நாமோ மற்றவர்களோ விசேஷமாகக் குறிப்பிட்டிருக்க மாட்டோம். அரசாங்கத் தலைவர்களும் கல்வித் துறையில் உள்ள அறிஞர்களும் வழக்கமாகக் கூறும் யோசனைகளில் இதுவும் ஒன்று என்றுதான் எண்ணி விட்டிருப்போம். ஆனால், கல்வி யமைச்சர் மேலும் ஒரு படி போய் "பல்கலைக் கழக நிர்வாகிகள் தமி

ழைப் போதனுமொழி யாக்குவதற்கான திட்டத்தை வகுத்து நடவடிக்கை யெடுத்துக் கொள்ளவில்லையானல், அரசாங்கம் தலையிட்டுக் காரியம் செய்யவேண்டியிருக்கும்' என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்ததுதான் பலருடைய கவனங்களையும் கவர்ந்திருக்கிறது. பெரும் பாராட்டைப் பெற்றிருக்கிறது. தமிழ்ப் புத்தாண்டு தொடக்க நாளன்று நடந்த தமிழ்க்கலைக் களஞ்சியம் வெளியீட்டு விழாவின் போது கூட, கனம் சுப்பிரமணியம் மொழி வழி அரசு குறித்தும், தமிழ் ஆட்சி மொழி ஆவது குறித்தும் ஆணித்தரமாக அபிப்பிராயந் தெரிவித்ததையும், தமிழ் ராஜ்யம் ஏற்படுவதற்குத் தடையாய் இருக்கும் கன்னடர், தெலுங்கர், மலையாளிகளுக்கு அறைகூவல் விடுத்ததையும் நாம் மறந்து விடவில்லை. கனம் காமராஜ் மந்திரி சபையில் அங்கம் வகிக்கத் தொடங்கியதிலிருந்தே அவருடைய கருத்தில் தீவிரமும் தெளிவும் இருப்பது குறிப்பிடத் தக்கது. நிற்க, கல்வி மந்திரி கோடிட்டுக் கூறியபடி இவ் விஷயத்தில் சர்க்கார் துணிந்து செய்தால் நாட்டு மக்களுடைய பரிபூரண ஆதரவு நிச்சயம் இருக்கும் என்று நாம் உறுதி கூறுகிறோம். இவரும் இதைத் தெரிந்துதான் கூறியிருக்கிறார். நாட்டு மக்களும், கல்வி யமைச்சரின் இக் கருத்துக்குத் தங்களுடைய பரிபூரண ஆதரவு உண்டு என்பதை நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வெளிப்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசளிப்பு விழாவிலேயே, கல்வி யமைச்சரைத் தொடர்ந்து பேசிய பேரறிஞர்கள் அனைவரும், அவருடைய கருத்தை மனப்பூர்வமாக ஆமோதிக்கும் வகையிலேயே பேசியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். தாய்மொழிப் பற்று உடையயாரும் கல்வி யமைச்சர் வெளியிட்ட கருத்துக்கு மாறுன அபிப்பிராயத்தை எவ்வகையிலும் வெளியிட மாட்டார்கள் என்பது திண்ணம். தமிழைப் பள்ளிகளில், கல்லூரிகளில் போதனு மொழி ஆக்குவதுடன் அல்லாமல் அரசாட்சி மொழியாகவும் ஆக்கவே அவர்கள் விரும்புவர். பின், தமிழ் அரசாட்சி மொழியாக வருவதற்கு முதலில் பள்ளிகளில், கல்லூரிகளில் அது போதனு மொழியாவது இன்றியமையாததாகும். தமிழ் உடனடியாக ஆட்சிமொழி யாவதற்குப் பள்ளி போதனு மொழியாவது முதற்படி யாகும் என்று நாம் கூற விரும்புகிறோம்.

தமிழ் பள்ளி போதனு மொழியாவதை—ஆட்சி மொழியாவதை ஒரு சிறு கூட்டத்தார் சிறிதும் விரும்பவில்லை. இவ்வித அபிப்பிராயங்களைக் கேட்பதையே அவர்களால் தாங்க முடியவில்லை என்பது அவர்கள் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டு வரும் அபிப்பிராயங்களிலிருந்து தெரிகிறது. இக்கூட்டத்தார் நமக்கு முற்றும் அன்னிய மொழியான ஆங்கிலம் நீண்ட காலமாக எல்லா இடங்களிலும் ஆதிக்கஞ் செலுத்தி வந்ததை—வருவதைச் சகித்து வருகிறார்கள். வட இந்திய மொழியான இந்தி ஆட்சி மொழியாவதை மனமுவந்து வரவேற்று வருகின்றனர். தாய் மொழியான தமிழ் ஆட்சிமொழியாவதை மட்டும் அவர்கள் அறவே விரும்பவில்லை என்பதை யறிகையில் ஆச்சரியமும் ஆற்றுமையுமே யுண்டாகிறது. இதிலிருந்து இவர்கள் தமிழ் மொழியைத் தங்களுடைய தாய் மொழியாகவே கருதவில்லை என்ற அபிப்பிராயத்துக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. இச்சிறு கூட்டத்தார் தமிழ் மொழிக்கு ஆக்கமுண்டாகும் செயலை விரும்பவில்லையென்ருல், இதற்கு இவர்களுடைய சுயநலம்தான் காரணம் என்றே நாம் கருதுகிறோம். ஏனென்ருல், ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டங்களைப் பெற்று, அரசாங்க கேந்திர ஸ்தானங்களி லெல்லாம் அதிகாரம் வகித்து, ஏகபோகமாக அதிக சம்பளமும் பல வகையான அனுகூலங்களும் அடைந்து வருவதால், அந்த விதமான தங்களுடைய சௌகரிய நிலைக்கு ஆபத்து வந்துவிடுமென்றே அவர்கள் அஞ்சுகிருர்கள் என்று தெரிகிறது. இதைத் தவிர, அவர்களுடைய ஆட்சேபத்துக்கு வேறு காரணம் இருப்பதற்கில்லை.

'தமிழை நினைத்தவுடனே பள்ளி போதனை மொழியாக்கிவிட முடியாது, அரசாட்சி மொழியாக்கிவிட முடியாது' என்று நொண்டிச் சமாதானங்கள் பல கூறி இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் தள்ளிப் போட்டுக்கொண்டு போக, இச் சுயநலக் கூட்டத்தார் எண்ணியிருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. எவ் விஷயத்தையும் எத் திட்டத்தையும் முதலில் அமல் நடத்தத் தொடங்குகையில் அசௌகரியம் இருக்கத்தான் செய்யும். நிர்வாகச் சங்கடம் ஓரளவு இருக்கத்தான் செய்யும். நிறைவேற்றியாக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், அதற்கான வழிவகைகள் தானாக ஏற்பட்டு நாளடைவில் காரியங்கள் எளிதாக நடக்கத் தொடங்கிவிடும். இதைவிட்டு, பரீட்சார்த்த முறைகள் முன்னேற்பாடுகள் செய்து கொண்டு பின் அமல் நடத்தலாம் என இக்கூட்டத்தார் கூறுவது அலை ஓய்ந்த பின் கடலில் மூழ்கலாம் என்று நினைக்கும் அப்பாவியின் கதையைத்தான் ஞாபகப்படுத்துகிறது.

ஆங்கிலத்துக்குப் பதிலாகத் தமிழை எல்லா விஷயங்களிலும் வழங்க வேண்டும் என்று சொல்வது அரசியல் நோக்கத்துக்காக என்றும், பிரதேச விரோதத்தைக் கருதியது என்றும், சுயநலக் கூட்டத்தார் விஷமத்தனமாக வியாக்கியானஞ் செய்து விஷத்தைக் கக்குகிறார்கள். இக் கூட்டத்தாருடைய மொழிப் பற்றையும் இனப் பற்றையும் நாட்டுப் பற்றையும் நம்மைப் போன்றோர் சந்தேகிப்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

இந்நிலையில், ச. இராஜகோபாலாசாரியார், 'தமிழை ஆட்சிமொழி யாக்குவதில் நிதானமும் தீர்க்கதரிசனமும் வேண்டும்' என்று சமீபத்தில் பேசியிருப்பது மேற்குறித்த சுயநலக் கூட்டத்தாருடைய போலிக் கூற்றுக்கு ஒரு விதத்தில் மறைமுகமாக ஆதரவு கொடுப்பதாக இருக்கிறது என்றே நாம் கருதுகிறோம்.

தமிழை ஆட்சிமொழி ஆக்க வேண்டும், பள்ளி போதனைமொழி ஆக்கவேண்டும் என்று கூறும் கல்வி யமைச்சர் முதலிய அறிஞர்கள்; அதற்காகப் பாடுபடும் தலைவர்கள் நிதானமில்லாமல் காரியத்தை நிறைவேற்ற முயல்வதற்குச் சிறு பிள்ளைகளல்லர்; தீர்க்கதரிசன மில்லாமல் செயல் புரிவதற்கு ஞான சூன்யர்களல்லர் என்பதை ஆச்சாரியார் அறியவேண்டும். முன்னாள் முதல் அமைச்சராயிருந்த இவருடைய மந்திரிசபையில், கல்வி, நிதி ஆகிய இரு பெரும் பொறுப்புகளை ஏற்று நடத்துமாறு ஒப்படைத்த இவரே, திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு தமிழைப் போதனை மொழியாகப் பல்கலைக் கழகம் ஆக்காவிடில், சர்க்காரே அக்காரியத்தை மேற்கொள்ள வேண்டி யிருக்கும் என்று சொன்னதற்காக, 'நிதானம் வேண்டும்; தீர்க்க தரிசனம் வேண்டும்' என்று அறிவுறுத்த முயல்வது சிறிதும் அழகல்ல என்றே நாம் கூற விரும்புகிறோம். தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்பது போன்ற நல்ல விஷயங்களில் இது போன்று எதிர்பாராத இடங்களிலிருந்தும் ஆட்சேபமும் எதிர்ப்பும் வரத்தான் செய்யும். அதற்காக, கல்வியமைச்சர் போன்றோர் பின்வாங்கக் கூடாது. பரிசளிப்பு விழாவில் அவர் பேசியபடி, பல்கலைக் கழகம் தன் கடமையைச் செய்யத் தயங்கினால், சர்க்கார் சார்பில் இவர் உடனடியாகத் தக்க நடவடிக்கையெடுத்துக் கொண்டு, பள்ளி போதனை மொழியாக மட்டுமல்லாமல், அரசாட்சி மொழியாகவும் ஆக்க ஆவன செய்யவேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். சென்னை சர்க்காரின் பட்ஜெட்டைத் தமிழிலும் வெளியிடப் போவது நிதி மந்திரி எடுத்துக் கொண்டுள்ள முதல் நடவடிக்கை என்றே நாம் கருதுகிறோம். இதுபோன்ற இவருடைய நன் முயற்சிகளுக்கு இவர் நம்புவதுபோல் நாட்டு மக்களின் பரிபூரண ஆதரவு திண்ணமாகக் கிடைக்கும் என்று நாம் மீண்டும் உறுதி கூறுகின்றோம்.

# ஜனாதிபதி பிரசங்கம்

அரசாங்க வரவு செலவு இனங்களை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டிய மாதங்களல்லவா இவை? இவ்வாரத்தில் மத்திய அரசாங்கம் சமர்ப்பிக்கப்போகும் வரவு செலவு இனப் பரிசீலனை (பட்ஜெட்) கூட்டத்தை இந்தியப் பாராளு மன்றம் தொடங்கி விட்டது. அடுத்து நமது சென்னை சட்ட சபைகளும் ராஜ்ய சர்க்கார் சமர்ப்பிக்க விருக்கும் வரவு செலவு இன விவரத்தை ஆராய ஆயத்தஞ் செய்து கொண்டிருக்கின்றன. பாராளு மன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தைச் சம்பிரதாயப்படி நமது ஜனாதிபதி இராஜேந்திர பிரஸாத் ஆரம்பித்து வைத்து அருமையான பிரசங்கமொன்று செய்திருக்கிறார். இப் பேச்சில் அவர் முக்கியமாக உலக சமாதானத்தை வற்புறுத்தி, பொதுவாக, மக்களுக்குச் சுக வாழ்வு ஏற்படுவதற்கான வழி வகைகளையும் தெரிவித்திருக்கிறார். அமெரிக்கா, ருஷ்யா போன்ற வல்லரசுகளின் பலப் பரீட்சையால், உலகம் அனுபவித்து வரும் அல்லல்களையும் அபாய நிலையையும் அவர் நன்கு விவரித்திருக்கிறார். உலகை ஒவ்வொரு கணமும் பயமுறுத்தி வரும் யுத்தப் பீதியிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிக்க நம் இந்தியா செய்து வரும் அரும் பெரும் சேவைகளையும் சாதனைகளையும் அவர் குறிப்பிட்டுப் பேசியது கவனிக்கத் தக்கது. இந்தோ சீனப் போரை நிறுத்தக் கையாண்ட சமாதான முறைகளையே, பார்மோஸா தீவு விஷயத்திலும், வல்லரசுத் தலைவர்கள் கையாள வேண்டும் என்று அவர் பீகிங் சர்க்காருக்கு யோசனை கூறுவதின் மூலம் அறிவுறுத்தி யிருக்கிறார். அதே சமயத்தில் ஐ. நா. சபையில் சீனாவின் உண்மையான சர்க்காருக்கு இடந்தர வேண்டிய நியாயத்தை அமெரிக்காவுக்கு எடுத்துக்காட்டி யிருக்கிறார். அணுகுண்டுகளை மட்டுமின்றி, யுத்தத்துக்குரிய ஆயத்தங்களைச் செய்வதையும் வல்லரசுகள் அடியோடு நிறுத்தினாலன்றி, உலகம் சர்வ நாசத்திலிருந்து தப்ப முடியாது என்று அவர் எச்சரித்திருக்கிறார். இவ் வகையில் இந்தியப் பிரதமர் பண்டித நேரு உலக நாடுகளுடன் நேச உறவு பூண்டு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ஏற்படுத்தி வரும் சமாதான முயற்சிக்கு அவர் பரிபூரண ஆசி வழங்கியிருக்கிறார்.

வல்லரசுகள் பல வகையில் உண்டு பண்ணி வரும் நெருக்கடிகளால் பல முக்கிய பொருள்களின் உற்பத்தி, மக்கள் வாழ்க்கைத் தர உயர்வு, பொருளாதார வளர்ச்சி முதலியன பாதிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் அவர் உணர்த்தத் தவறவில்லை. விளை பொருள்களின் அமித உற்பத்தியால் சில பண்டங்களுக்கு விலை வாசி வெகுவாகக் குறைந்து வருவதைத் தடுக்கவும், சர்க்கார் நடவடிக்கையெடுக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். இந்நிலையிலும் ஐந்தாண்டுத் திட்டங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய நல விஸ்தரிப்புத் திட்டங்களைத் தக்க முறையில் அமல் நடத்தி மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளைச் செய்து தர, அரசாங்கம் புரிந்து வரும் வேலைகளையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. ஜனாதிபதியின் பிரசங்கத்தை அடுத்து முதலாவதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ரயில்வே பட்ஜெட் விவரங்களைப் பார்த்தால், மக்களுடைய வசதிகளை கூடுமானவரை மனத்திற்கொண்டே மதி மந்திரிகள் பட்ஜெட்டைத் தயாரிக்க முற்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. மத்திய, மாகாணப் பட்ஜெட்களைப் பற்றி அடுத்த இதழில் விவரமாக ஆராய்வோம்.

---

# 'திப்பு'வின் சரடுகள்

1. இந்தியாவில் மே தினத்தைச் சம்பளத்துடன் கூடிய பொது விடுமுறை தினமாகச் சர்க்கார் அறிவித்தால், அதற்கு மாற்றாக ரஷியாவில் ஜனவரி 30தேதி சர்வோதய தியாகிகள் தினத்தை பொது விடுமுறை தினமாக அறிவிக்குமாறு செய்ய முடியுமென்று கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை வெளியாகும்.

2. இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட குரங்குகளை வைத்து அணுகுண்டு ஆராய்ச்சி செய்யப்படுவதை ஆட்சேபித்து பலத்த கண்டனங்கள் எழுந்திருப்பதால், இனி செய்யப்படும் ஆராய்ச்சிகளின்போது குரங்குகளுக்குப் பதில் மெக்கார்த்தி, சியாங்கே ஷேக், சிங்மென்ரீ முதலியவர்களை வைத்துச் செய்யப்படுமாம்.

3. பிரான்சில் மெண்டஸ் பிரான்ஸ் மந்திரிசபை வீழ்ச்சி யடைந்த பிறகு, யாரும் மந்திரிசபை அமைக்க முடியாமலிருப்பதால், மெஜாரிட்டி இல்லாமலே மந்திரிசபையை நிலை பெறச் செய்வதெப்படி என்றும், விஷயத்தைக் கற்றுக்கொண்டு போக, பிரான்சின் பல அவியல் கட்சி தலைவர்களும் திருவாங்கூர் வந்து பட்டத்தையும் பனம் பள்ளியையும் சந்தித்துத் தெரிந்து கொள்வார்களாம்.

4. ஐக்ய நாடுகள் சபைக் கூட்டத்திற்கு ஒரு பிரதிநிதியை அனுப்ப இப்போது செஞ்சீனா சம்மதித்து விட்டது. அதற்குக் காரணம் பார்மோசா யுத்த நெருக்கடி இப்போது தணிந்துவிட்ட படியால், இனி அடுத்தபடியாக சியாங்கேய் ஷேக்கை கௌரவமாகப் புதைப்பதற்கு வேண்டிய வழி துறைகளை மாத்திரம் அச் சபை கவனிக்கும் என்று கூறியது தான் விஷயமாம்.

5. விதவைகள் வெள்ளைப் புடவைகள் அணியாமல் கலர்ப் புடவைகளை அணிந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென்று செங்குந்தர் மகா நாட்டில் தீர்மானிக்கப்பட்டதையொட்டி, மனைவியை இழந்த விதவன்கள் எந்தெந்த கலர் வேட்டி அணிவது என்பதைப் பற்றி தீர்மானிக்காததற்கு வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.



# கடிதம் விடு தூது

ஜீவா

'இதெல்லாம் சரிதான்; இளமை யுணர்ச்சி வயப்படாமல் ஐம்புலன் அடக்கங் கொண்டுள்ள இவ் விளைஞன் நமக்குக் கடிதம் எழுத எப்படித் துணிந்தான்? எவ்விதத் தன்மை வாய்ந்த கடிதமாயிருந்தால்தான் என்ன? உள்ளத் துடிதுடிப்பு இல்லாமல் எந்த விதமான கடிதத்தையும் எழுத உந்துதல் ஏற்பட்டிராது அல்லவா! அவனையும் மீறிய நிலையில்—அவனுடைய அடக்க உணர்ச்சியையும் மீறிய நிலையில்—அவன் நமக்குக் கடிதம் எழுதத் துணிந்தான் என்றால், அதற்கு ஏதோ சரியான காரணம் இருக்கவேண்டும்? உணர்ச்சி உவட்டெழுவதற்குரிய ஊற்று ஏதாவது இருக்கவேண்டும். அது என்ன? கடிதத்தின் தொடக்கத்தில், அவன் தான் கடிதம் எழுத முற்பட்டதற்குரிய காரணத்தை ஓரளவு குறிப்பிட்டிருக்கிறான்; ஆனாலும், முழுதும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆதலால், கடிதத்தின் மற்றப் பகுதிகளையும் படித்து முடித்தால்தான் அவன் தனக்குக் கடிதம் எழுதியதற்கான காரணத்தை நன்கு அறிய முடியும்' என்ற தீர்மானத்துக்கு கோகிலா வந்தாள். எனவே, அவள் அக்கடிதத்தை யெடுத்து மீண்டும் படிக்க முற்பட்டாள். தன்னுடைய கோகில கானத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொடுத்துள்ள ஆத்மநாதன் மேலும் என்னதான் எழுதியிருக்கிறான்; பார்ப்போம் என்ற ஆவலில், கோகிலா சோர்வை யெல்லாம் உதறி எறிந்து விட்டுக் கடிதக் கற்றையை எடுத்து முன் நிறுத்திவிட்டிருந்த இடத்திலிருந்து வாசிக்கத் தொடங்கினாள்.

* * *

"இப்பயப் பிராந்தியால் நான் திக்பிரமை கொண்டு அவ்விடத்திலேயே அசையாமல் நின்றிருந்தேன். அவ்விதம் எவ்வளவு நேரம் நின்றிருப்பேன் என்று எனக்கே தெரியாது. குளிர் தென்றல் மாறி வீசத் தொடங்கிய வாடைக் காற்றை என்னால் தாங்க முடியவில்லை. அத்துடன், கால்களும் மரத்துப் போய் வலிக்கலாயின. ஆனாலும், கீழே இறங்கிப் போக எனக்குப் பயமாயிருந்தது. ஏமாற்றத்துடன் வேகமாகப் போன கோமளம் கீழே என்ன களேபரம் பண்ணி வைத்திருக்கிறாளோ! தன் தாயிடமோ மற்றவர்களிடமோ என்னைப் பற்றி ஏதாவது அபாண்டமாகச் சொல்லிவைத்திருந்தால் என்ன செய்வது? என்று பல விதமாக எண்ணி மனங் குழம்பினேன். எனினும் சிறிது நேரத்தில் நான் என்

மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். 'நாம் ஒரு பாவத்தையும் செய்தறியாத போது, எதற்காகப் பயப்படவேண்டும்? கோமளம் வீண் பழி ஏதாவது சுமத்தி என்னைப் பற்றிப் பிறரிடம் அபவாதஞ் சொல்லியிருந்தால், நாம் நடந்த நிகழ்ச்சியைத் தெரிவித்து நிரபராதி என்பதை நிரூபிப்போம்!' என்று நானாகவே எனக்குத் தேறுதல் சொல்லிக் கொள்ளலானேன். கேவலம் நான் குற்றத்தினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக, பாவம்! பேதைப் பெண்ணொருத்தியைக் காட்டிக் கொடுப்பதா? என்ற இரக்க உணர்ச்சியும் என் இதயத்தில் உண்டாகாமலில்லை.



கடைசியாக, நான் துணிந்து மெல்லக் கீழே இறங்கிப் போகலானேன். யாரும் விழித்திருப்பதான சூழ்நிலை தென்படவில்லை. கரிய இருட்டுடன் மரண அமைதிதான் நிலவியிருந்தது. நான் ஓசை படாமல் அடிமேலடி யெடுத்து வைத்து மெல்ல நடந்து என் அறைக்குப் போகலானேன். வழியில் யாராயினும் படுத்திருப்பார்களோ என்ற அச்சம் வேறு என்னைப் பிடுங்கித் தின்றது. நல்ல வேளையாக யார் மீதினும் என் கால்கள் இடறவில்லை. என் அறைக்குள் புகுமுன், கோமளத்தின் அறையை என் கண்கள் கவனிக்கத் தவறவில்லை. அது நன்கு சாத்தப்பட்டிருந்தது. ஆனால், உள்ளே விளக்கொளி சிறிதாக இருப்பது போல் எனக்குப் புலப்பட்டது. அவர்கள் வீட்டில் விளக்கு எறிய வைத்து நான் இதுவரை பார்த்ததில்லை. ஒரு வேளை பிரமையாயிருக்கலாமோ! தற்போதைய மனக் குழப்பத்தில் கண்கள் தான் என்னை ஏமாற்றுகின்றனவோ! இவ்வித நினைப்பில் தடுமாறிக் கொண்டிருந்த என்னை அறைக்கதவின் முகப்பு தலையில் இடித்து உணர்வு கொள்ள வைத்தது. என்னை எதிர்பார்த்து அம்மா வாசற்படியண்டையே படுத்திருந் திருக்கிறார்கள். நேரம் அதிகமாகவே அப்படியே உறங்கிப் போயிருக்கிறார்கள். அவர்கள் வழக்கம்போல் என் தம்பிமாருடன் கூடத்து ஓரத்தில் படுத்திருப்பார்கள் என்று எண்ணியிருந்ததால், அவர்கள் படுத்திருப்பது தெரியாமல் மிதித்துவிட்டேன். அவர்கள் துள்ளி யெழுந்து 'யார் அது?' என்று கேட்டார்கள். இதற்குள், இடறிப் போய்க் கதவின்மீது மோதிக்கொண்ட வலியையும் பொறுத்துக்கொண்டு, "நான்தான், அம்மா! ஒன்றுக்குப் போய்விட்டு வருகிறேன்" என்று சமயோசிதமாக நான் பொய் சொன்னேன்.

"ஆமாம்; எப்ப வந்து படுத்தே, தம்பி!" என்று அம்மா கேட்டார்கள்.

"அப்போதே வந்து விட்டேனே!"

கதவு மோதிய சப்தமும் எங்கள் பேச்சும் அறையினுள் தூங்கிக்கொண்டிருந்த தங்கையை விழித்தெழச் செய்திருக்கவேண்டும்.

"அண்ணாவா?" என்று அவள் கேட்டாள்.

"ஆமாம்; அம்மா!" என்று கூறியவாறே நான் என் படுக்கையில் போய்ப் படுத்தேன். அவ்விதம் படுக்குமுன், எனக்காக எரிந்து கொண்டிருந்த விளக்கை நிறுத்திவிட்டேன். இதற்குள் சகோதரி தூங்கிவிட்டிருந்தாள். ஆனால், எனக்குத் தூக்கம் வரவில்லை. கணத்தில் விழித்துக் கணத்தில் தூங்கும் தங்கைக்குள்ளது போன்ற குழந்தை யுள்ளம் எனக்கு இல்லையே! பளிங்கு உள்ளத்தில் பலவிதமான பருவக் கறைகள் அல்லவா படிந்திருக்கின்றன? என்னைக் குறித்து நானே கழிவிரக்கங்கொண்டு சிந்தனையில் மூழ்கியிருந்த நான் கடைசியாக எப்படியோ தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன்.

நான் மீண்டும் கண் விழித்துப் பார்த்தபோது, ஜன்னல் வழியாக என் மீது சூரிய கிரணம் படர்ந்திருந்ததை யுணர்ந்தேன்.

"டே! போய்த் தொந்திரவு செய்யாதே! அண்ணன் தானுகவே எழுந்திருக்கட்டும்" என்று அம்மா கடைக் குட்டித் தம்பியை நோக்கி மெல்லச் சொல்வது என் செவிகளில் விழுந்தது. பொழுது விடிந்து வெகு நேரமாகியும் நான் எழுந்திருக்காதிருப்பதைப் பார்த்து என்னை எழுப்ப அப் பொடிப் பயல் ஏதோ விஷமஞ் செய்ய வந்திருக்கிறுன் போலும்!

செஞ்ஞாயிறு கிழக்கே எழுந்துவிட்டது என்று உணர்ந்ததும், நான் திடுக்கிட்டு எழுந்தேன். வெளியே காக்கைகள் 'கா கா' எனக் கரைவதும், சிட்டுக் குருவிகள் என் அறைக்குள் பறந்து வந்து சிருகிசுவெனக் கிறீச்சிடுவதும் உதய கீதம் போல் எனக்குத் தோன்றியது.

ஆனால், நான் காலைக்கடனைக் கழிக்க வெளியே போக வெகுவாகக் கூசினேன். அம்மா, தங்கை முதலியோர் முகங்களைக் காணக் கூட அஞ்சினேன். ஆனால், அவர்கள் எப்போதும்போல் சகஜமாகக் காணப்பட்டது எனக்கு ஓரளவு ஆறுத

லளித்தது. கோமளத்தால் இதுவரை ஒன்றும் கோளாறு உண்டாகவில்லை என்று அவர்களை அளவு கோலாகக் கொண்டு நான் ஊகிக்கலானேன் அந்தத் தைரியத்தில் நான் வெளியே போனாலும், கோமளம் என்முன் எதிர்ப்பட்டுவிடக் கூடாதே என்றுதான் மனத்துக்குள் பிரார்த்தித்தேன். இப்போது அவள் இருக்கும் அறைப்பக்கமாகக்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. நல்ல காலம் அவளுடைய தாய்கூட அச்சமயம் என் எதிர்ப்படவில்லை.

நான் குளித்துவிட்டு இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் வெளியே பேசப்பட்ட பேச்சு என் செவிகளை வந்து தாக்கியது.

"எங்கே, கோமளத்தைக் கண்ணிலேயே காணவில்லை, காலையிலேயிருந்து."

இது என் அம்மாவின் கேள்வி. நானும் கூடத்தான் இக் கேள்வியைப் பல முறை என்னையே கேட்டுக் கொண்டேன். அதற்குப் பதிலை நானே சொல்லிக் கொண்டேன், கண்ணில் படாததற்குக் காரணம் தெரியுமாதலால். ஏனென்றால், அவள் தூங்கி எழுந்திருக்கவேண்டியதுதான். எங்கள் வீட்டில் வந்து கண்களைத் துடைப்பாள். அவள் வீட்டு வேலைகளைவிட எங்கள் வீட்டுக் காரியங்களைத்தான் விழுந்து விழுந்து செய்வாள். அப்பேர்ப்பட்டவள் இன்று இவ்வளவு நேரங் கழித்தும் காணப் படவில்லையென்றால், அம்மாவுக்கு என்ன, யாருக்கும்தான் ஆச்சரியமாயிருக்கும்?

"உங்களுக்குத் தெரியாதா? கோமளத்துக்கு உடம்பு நல்ல யில்லை. தலையைத் தூக்கமாட்டேனென்கிறாள். இராத்திரியெல்லாம் ஒரே வயிற்று வலியாம்...."

"தலை முழுக வேண்டிய காலமாயிருக்கலாம்."

அம்மா மெல்லச் சொன்னதும், "இருபது நாள் கூட ஆகவில்லையே" என அவள் தாய் சொன்னதும் எனக்குக் கேட்காமல் போகவில்லை. 'கண்ணொன்று நோக்க, செவியொன்று கேட்க, மனம் ஒன்று எண்ண' என்று பட்டினத்தார் பாடி யிருப்பது போல், பூசனை செய்து கொண்டிருந்த நான் கோமளத்தைப் பற்றிய பேச்சு என்றதும் வழிபாட்டை மறந்து கவனத்தை இதில் பதிய விட்டேன்.

அப்பாவிகளான இரு அன்னைமாரின் பேச்சும் எனக்குச் சிரிப்பை வருவித்தது. கோமளம் குப்புறப் படுத்துக்கொண்டு வெளியே வராமலிருப்பதற்குக் காரணம் எனக்கல்லவா தெரியும்?

என்ன இருந்தாலும் கோமளம் குணசாலி; அவள் நான் பயந்தது போல், எக் காரணங்கொண்டும் என்னைக் காட்டிக்கொடுக்க மாட்டாள் என்ற தைரியம் எனக்கு முடிவாக ஏற்பட்டது.

என்னைப் போலவே, அவளும் என் விஷயத்தில் பயந்து கொண்டிருந்தாள் என்பது பின்னால் தெரியலாயிற்று. அவள் என்னிடம் வலிய வந்து தன் விருப்பத்தைத் தெரிவித்து, தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டதை நான் எங்கு என் அன்னை முதலியோரிடம் சொல்லி விடுவேனோ அல்லது அவள் தாயிடங் கூறிக் கண்டிக்கச் சொல்லுவேனோ என்று கோமளம் கருதிப் பயந்து வயிற்று வலி எனக் கூறிக் கொண்டு வெகு நேரம் வெளிவராமல் இருந்திருக்கிறாள். காலை நேரம் ஆக ஆகத்தான்—அவள் எதிர்பார்த்தபடி ஒன்றும் அமளி நடக்கவில்லை என அறிந்த பிற்பாடுதான்—கோமளம் படுக்கையை விட்டு எழுந்து வெளிவந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு எங்கள் வீட்டுப் பக்கம் வரலானாள்.

"அம்மா, சும்மா என்னமோ பயப்படுகிறார்கள். எனக்கு ஒன்றும் இல்லை, அத்தை! விடியற் காலையில் வயிறு லேசாக வலித்தது. அவ்வளவுதான். இப்போ எல்லாம் சரியாய்ப் போய் விட்டது" என்று புன்முறுவலுடன் சொல்லிக்கொண்டே வந்த அவள் என் தங்கையுடன் அளவளாவலானாள். அவளுடைய சமயோசித புத்தியையும் சாந்த குணத்தையும் நான் எனக்குள் வியக்கலானேன். இரவு அவள் என்னை நாடி வந்தது பருவங் காரணமாக ஏற்பட்ட அறிவு மயக்கமே யொழிய, வேறல்ல. மற்றப்படி

# தமிழுக்கு நல்ல எதிர்காலம்

### தமிழ்த்தும்பி

★

**பி**ரபல ஆங்கிலக் கட்டுரையாளரான கோல்டுஸ்மித் தாம் வாழ்ந்த காலத்து எழுத்தாளர் சங்க நடவடிக்கைகளைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். தமிழ் எழுத்தாளர் மாநாடு என்றதுமே, எனக்கு அக் கட்டுரை நினைவுக்கு வந்தது. எழுத்தாளர்கள் கூட்டம் கூடினால் ஒன்றுமேயில்லாத விஷயத்துக்கு எல்லாம் எப்படிப்பட்ட விவகாரங்கள்—முதலும், முடிவும் அற்ற விவகாரங்கள்—இல்லாத சிக்கல்களை யெல்லாம் உண்டுபண்ணி விடும் வாதங்கள்—எல்லாம் எழக்கூடும் என்ற அருமையான நடைச் சித்திரத்தை நகைச்சுவை ததும்ப தீட்டியிருக்கிறார் மேற்படிக் கட்டுரையாசிரியர். பாரபட்சமின்றிப் படிக்கும் எவரும் எழுத்தாளர் உலகின் அவல நிலையை அதில் கண்டு இரக்கமும் ஏளன நகைப்பும் கொள்வர். சென்னையில் சமீபத்தில் வெற்றிகரமாக நடந்து முடிந்த தமிழ் எழுத்தாளர் மாநாடு கோல்ட்ஸ்மித் விவரித்த காட்சிக்கு முற்றும் மாறாக அமைந்து எழுத்தாளர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பொறுப்பினையும், ஆக்க வேலைகளையும் அறுதியிட்டுச் சொன்னது நமக்கு மாபெரும் மகிழ்ச்சியை ஊட்டுகிறது.

சென்ற பிப்ரவரி மாதம் 12,13 தேதிகளில் முறையே சுந்தரேஸ்வரர் ஹாலிலும், மஹாஜன சபை ஹாலிலும் மூன்றாவது தமிழ் எழுத்தாளர் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மதிப்பிற்குரிய சென்னை கவர்னர் திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தமிழின் தொன்மையைப் பற்றியும், தமிழ் மொழியின் தனித் தன்மையைப் பற்றியும், சில ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்தாலும், தமிழ்மொழி தன் தாய்மைத் தன்மை இழக்காது என்றென்றும் இளமையுடன் திகழும் திறனைப்பற்றியும் அழுத்தமாக மொழிந்தார். உயர் தனிச் செம்மொழியான தமிழின் பெருமை அன்று சுந்தரேஸ்வரர் ஹாலில் பெருக்கெடுத்து ஓடிற்று. தமிழ் மொழியின் அருமைகளை வடநாட்டவர்கள் உள்ளது உள்ளபடி உணர்ந்து மகிழ வேண்டும் என்ற தம் அவாவினைச் சென்னை கவர்னர் வெளியிட்டார். "சர்க்காரின் தலையீட்டினால் மட்டும் மொழி வளர்ந்துவிட முடியாது; மொழியை மக்களுடைய மனதில் ஆரிமாக ஊன்றச் செய்ய வேண்டிய பணி கவிஞர், கதாசிரியர், கட்டுரையாளர், விமர்சகர்

---

அவள் நல்லொழுக்கமுடைய பெண்ணே என்ற தீர்மானத்துக்கு வந்தேன். இந்த என் முடிவை உறுதிப் படுத்தும் முறையில்தான் அவளுடைய பின்னைய நடவடிக்கைகள் இருந்தன.

பூசை முடிந்ததும், உணவருந்தி விட்டு நான் பாங்குக்குப் போகத் தயாரானேன். என் அறையில் சட்டையை எடுத்து நான் போட்டுக்கொண்டிருந்தேன். சிறிதும் எதிர்பாராத விதமாக, கோமளம் திடீரென உள்ளே வந்து ஒரு கடிதத்தை என் கையில் திணித்து விட்டு, கதவண்டை போய் நின்று, "மறக்காமல் வாங்கி வருகிறீர்களா, மாமா!" என்று எதையோ என்னை வாங்கி வரச் சொல்லும் பாவனையாகக் கூடத்தில் பேசிக்கொண்டிருக்கும் அம்மா முதலியவர்கள் செவிகளில் விழும் படியாகச் சொன்னாள். இந்தப் பெண்களுக்குத்தான் என்ன சாதுரியம்! என்று கருதி நான் திக்பிரமை கொண்டு அப்படியே நின்று விட்டேன். ஆனால், என் கரம் மட்டும் அக் கடிதத்தைச் சட்டைப் பைக்குள் சீக்கிரமாக வைத்து மறைத்து விட்டது. ஒருவேளை தங்கை, தம்பி யாராயினும் வந்தால் பார்த்து விடக்கூடும் என்ற அச்சத்தால் என்னை யறியாமலே இக் காரியம் நடந்து விட்டது.

நான் அம்மாவிடம் சொல்லிவிட்டு ஆபீஸுக்குப் புறப்படும் தருணத்தில், மாமா வீட்டிலிருந்து வேலைக்காரி யொருத்தி வந்து, "அம்மா, எங்கள் வீட்டுப் பெரியம்மா உங்க பெரிய பிள்ளையாண்டானை ஆபீஸுக்குப் போறப்பவோ திரும்பி வரப்பவோ தன்னை வந்து பார்த்துட்டுப் போகச் சொன்னாங்க" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

"சரி" எனத் தலையாட்டியவாறே நான் வெளியே போகலானேன்.

(தொடரும்.)

போன்ற எழுத்தாளர்களையே முக்கால் வாசிக்கும் மேல் சேரும்.'' என்று அவர் கூறினர். நாடு விடுதலை பெற்றபின் எழுத்தாளர்களின் பொறுப்பு மேலும் அதிகரித்துள்ளது என்றும், பொறுப்பற்று எழுதும் ஆசிரியர்கள் அபாயத்தின் வித்துக்கள் என்றும், இந்திய இன ஒற்றுமைக்காக எழுத்தாளர்கள் பாடுபடவேண்டும் என்றும் அவர் சொன்னர். மொழி இலக்கியத் தரத்தினை உயர்த்துபவர்கள் நாட்டுக்குப் பெருமை தேடித் தருபவர்களாவார்கள் என்று அவர் கூறி முடித்தார்.

தமிழ்மொழிச் சிறப்புக்காகச் சேவை செய்து வந்துள்ள திரு. மு. இராகவய்யங்கார் அவர்களுக்கும், திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுக்கும் அன்னர்கள் செய்துவந்த பெருந் தொண்டினைப் பாராட்டி எழுத்தாளர் சங்கத்தின் சார்பாகச் சென்னை கவர்னர் அவர்கள் வெள்ளிக் கேடயங்களை வழங்கினர். பாராட்டுப் பெற்ற அறிஞர்களின் இலக்கியத் தொண்டினைப்பற்றி திருவாளர்கள் தெ. பொ. மீனாட்சி சுந்தரனர், ரா. பி. சேதுப்பிள்ளை, கி. வா. ஜகந்நாதன், பெ. நா. அப்புசாமி முதலியோர் நன்றி தெரிவித்தபின், ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள கலைக்குழுவினரைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி பலத்த ஆரவாரத்துக்கிடையே வரவேற்றார். ரஷ்ய நாட்டுக் கலைக் குழுத் தலைவர் தமது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்தார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இவ்வாண்டுத் தலைவரான திரு. ம. பொ. சிவஞானம் தமது தலைமையுரையில் எழுத்தாளர்களின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசினர். தமிழ் மொழியின் உண்மையான வளர்ச்சி உலகில் பரவவேண்டுமானல் பிரிவினை மனப்பான்மையும், ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளும் மனப்பான்மையும் கூடாது என்று அவர் சொன்னர். தனி எழுத்தாளனின் எண்ணத்தைச் சிந்தனை தரும் எண்ணத்தால் போரிடுவது அழகே தவிர, இனவாரியாகப் பிரித்து இனத்தை வீணாகத் தாக்குவது நேர்மையல்ல என்று அவர் கூறினர். மாறுபட்ட எண்ணங் கொண்டவர்கள் ஆணித்தரமாகத் தமது கொள்கைகளைச் சொல்லி, வாதித்து முடிவு கட்டவேண்டுமே யொழிய மாறுபாட்டினை வெளிக்குக் காட்டாது வளர்த்து வேற்றுமையை வளரவிடுவது நல்லதல்ல என்று அவர் சொன்னது வரவேற்கத் தக்கது. பிரதேசத் தணிக்கை போர்டு, பல்கலைக் கழகப் புத்தகத் தேர்வுக் குழு, நமது நாட்டிலிருந்து அந்நிய நாடு செல்லும் கலைக் குழுக்கள், மத்திய நூல் நிலையக் குழு போன்ற முக்கியமான இடங்களில் தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதிகள் இருக்கவேண்டிய உரிமையையும், அவசியத்தையும் அவர் ஆணித்தரமாக வெளியிட்டார். தமிழ் மொழி மேலும் மேன்மையடைவதற்கான திட்டங்களை அவர் சமர்ப்பித்தார். பிப்ரவரி 13-ந் தேதி ஞாயிறு காலை மகாஜன சபை ஹாலில் பட்டி மன்றம் அழகான முறையில் நடந்தது. உயர் திரு மீனாட்சி சுந்தரனர் அவர்கள் தலைமையில் "தமிழை ஆட்சி மொழி ஆக்கும் திட்டத்தை"ப் பற்றிய விவாதத்தைத் திரு. வேங்கடாச்சாரியார் தொடங்கி வைத்தார். விவாதத்தில் பல எழுத்தாள நண்பர்கள் பங்கு கொண்டனர். சர்க்கார் நிர்வாகத்திற்குத் தேவைப்படும் சொற்கள் வரிசை (GLOSSARY)யைத் தயாரிக்க தலைவர், திருவாளர்கள் ஏ. ஜி. வேங்கடாச்சாரி, ப. ஜீவானந்தம், நாரண—துரைக்கண்ணன், டாக்டர் திரிபுரசுந்தரி, முதலியோரைக் கொண்ட ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. இந்த அருமையான விவாதத்தை நடத்தும் யோசனையைச் சமர்ப்பித்தோரை உள்ளன்புடன் பாராட்ட வேண்டும்.

விஜயா புரொடக்ஷன்ஸாரின் கூட்டு அதிபரான ஸ்ரீ நாகி ரெட்டி எழுத்தாளர்களுக்காகக் காஸினோ தியேட்டரில் ஒரு காட்சியை ('மிஸ்ஸியம்மா' படம்) ஏற்பாடு செய்திருந்தார். சிந்தனை மிக்க காலை விவாதத்துக்குப் பின் ஒரு உல்லாசப் படத்தைப் பார்ப்பது இன்பமாக இருந்தது. ஸ்ரீ நாகி ரெட்டிக்குச் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

பிப்ரவரி 13-ந் தேதி மாலை திரு. ஸி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் 'கல்கி'யின் காலஞ்சென்ற ஆசிரியரான கிருஷ்ணமூர்த்தியின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். கல்கி ரா. கிருஷ்ணமூர்த்திக்கு ஞாபகச் சின்னம் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்ற தீர்மானங் குறித்து, வெ. சாமிநாத சர்மா, நாரண—துரைக்கண்ணன், பரலி சு. நெல்லையப்பர், எம். எஸ். கமலா ஆகியோர் பேசினர். மற்றும் பலமுக்கிய தீர்மானங்கள் நிறைவேறிய பின் விருந்துடன் மூன்ருவது தமிழ் எழுத்தாளர் மாநாடு சிறப்புற முடிந்தது.

தமிழ் எழுத்தாளர் ஒற்றுமைக்காக ம. பொ. சி. கூறிய யோசனைகளும், சென்னை கவர்னர் தமிழ் மொழியின் தனிப் பெருஞ் சிறப்பைப் பற்றி சொன்ன கருத்துக்களும் ஆட்சி மொழியாகும் பாதை தமிழ் மொழிக்கு ஒருவாறாக அமைக்கப் பட்டதும், ரஷ்ய நாட்படுகிறது. முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல இதுபோன்ற விழாக்கள் மேலும் மேலும் சிறப்பான புத்தகங்கள் வெளியாக நல்ல தூண்டுதலாக அமையும். கலைக்களஞ்சிய வெளியீட்டையும், தமிழ்நூல் பரிசளிப்பு விழாவையும் நடத்தி வரும் தமிழ்வளர்ச்சிக் கழகம் தமிழ்மொழி முன்னேற்றத்துக்கு வேண்டிய

டுக் கலைக் குழுவினருக்குச் சங்கம் அளித்த ஆரவாரமான வரவேற்பும் சென்னை மாநாட்டின் தனிச் சிறப்புகளாகும்.

* *

எழுத்தாளர் மாநாடு முடிந்து சில நாட்களுக்குள் இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடந்தது. தமிழ் மொழிக்காக நடந்த அந் நிகழ்ச்சி தமிழ் வளர்ச்சிக் கழகம் கொண்டாடிய "தமிழ் நூல் பரிசளிப்பு விழா" வாகும். ஆண்டுதோறும் நடக்கும் தமிழ் விழாவில் மேற்படி பரிசளிப்பு நடைபெறும். அண்ணாமலை நகரில் இவ்வாண்டு கூடவிருந்த அத் தமிழ் விழா, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாக் கொண்டாட்டம் குறுக்கிட்டதால் நடைபெற வில்லை. ஆகையால் பரிசளிப்பு விழாவை மட்டும் அடக்கமாகச் சென்னையில் கொண்டாடினர். இரு விழாக்களுமே தமிழ் நாட்டுக்குப் பெருமை தேடித் தரும் விழாக்க ளாகையால் ஒன்றோடொன்று மோதிக் கொண்டதற்காக நாம் அவ்வளவு கவலைப்பட வேண்டிய தில்லை. எப்படியும் நம்மைச் சாரவேண்டிய பெருமிதம் நமக்குக் கிடைத்துவிட்ட தல்லவா?

தமிழ் நூல் பரிசளிப்பு விழாவிற்கு டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமை தாங்கினர். தமிழில் தமக்குள்ள அளவிடற்கரிய ஆர்வத்தையும், தமிழ் மிகப் பெருமை படைத்த முதல்தர மொழியாகப் போகும் அந் நன்னாளைத் தாம் விருப்பத்தோடு எதிர் பார்ப்பதாகவும், ஜப்பான், சீனம் போன்ற ஆசிய மொழிகளில் விஞ்ஞானம் போற்றத்தக்க முறையில் வந்திருக்கும் போது, ஏன் தமிழ் மொழி மட்டும் பின்னால் இருக்கவேண்டும் என்ற பிரச்னைக்கு தமிழறிஞர்கள் ஒரு நல்ல முடிவைத் தரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இவ்வாண்டுத் தமிழ் விழா காரைக்குடியில் நடக்கவேண்டும் என்ற தமது ஆசையை வெளியிட்டதே டாக்டர் அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப்பற்றுக்குச் சரியான சான்று. தமிழ் உறுதியாக உயர்வு பெற்றே தீரும் என்ற நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

நமது நிதி-கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் பேசுகையில், "நாட்டு மொழியில் சர்க்கார் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்ற திட்டத்துக்கும், தாய்மொழியில் கல்வி கற்கவேண்டும் என்ற திட்டத்துக்கும் எப்போதும், எங்கும் எதிர்ப்பு இருந்ததில்லை. திட்டத்தை நடை முறையில் கொண்டு வருகையில் தான் சிரமம் இருக்கிறது. முதல் திட்டத்தைப் பொறுத்த மட்டும் சர்க்கார் ஆவனசெய்ய முனைந்து விட்டனர்கள். சர்க்கார் கையில் உயர்நிலைப் பள்ளிப்படிப்பு மட்டும்தான் இருக்கிறது. கல்லூரிப் படிப்பு பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் உள்ளது. சர்க்கார் பாடசாலைகளில் தமிழ் கற்கும் மாணவன் கல்லூரி செல்லும் போது திடீரென ஆங்கிலத்தில் கற்கவேண்டிய பளுவான நிலை ஏற்படுகிறது. இந்த அயல்மொழிச் சுமைதான் மாணவனது நேரத்தைக் கைக்கொண்டு அவனது அறிவை அமுக்கி விடுகிறதே தவிர, உண்மையில் அவன் முட்டாள் ஆகி விடுவதில்லை. மாணவர்களது அறிவு நிலை கீழே கீழே போய்க் கொண்டிருக்கிறது என்னும் முறையீடு, இப்பரிதாபச் சூழ் நிலையின் கொடுமையை உணராததால் வருகிறது. இதைத் தவிர்க்க பல்கலைக் கழகம் முனைய வேண்டும். இப்போதெல்லாம் அடிக்கடி பல்கலைக் கழக நடவடிக்கைகளில் சர்க்கார் தலையீடு கூடாது என்று சொல்லப்பட்டு வருகிறது. பொது மக்களின் "தாய் மொழியில் தான் கல்வி வேண்டும்" என்ற கிளர்ச்சி வலுவடைவதற்குள் பல்கலைக் கழகம் ஏதும் செய்யாவிட்டால், மக்களின் சார்பாக மக்கள் சர்க்கார் தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும். "பாட மொழியாகும் தகுதி பெற்ற பின்னரே தமிழ் மொழியில் கல்வி" என்றும், "தமிழ் மொழியில் கல்வி புகட்டத் தொடங்கின பின்தான் பாட மொழியாகும் தகுதி வரும்" என்றும் வாதிக்கப் படுகின்றன. நீரில் இறங்கினபின் நீச்சல் பழகுவதா நீச்சல் பழகியபின் நீரில் இறங்குவதா? தொடக்கத்தில் எந்தச் செயலுக்கும் கஷ்டம் வரத்தான் வரும். எந்தத் தனி மொழியிலும் இன்று நினைத்து நாளை விஞ்ஞான நூல்கள் வளர்ந்ததில்லை. ஒரு துவக்கம் கொடுத்தால், அது தானாகக் காலப் போக்கில் வளர்ந்து கொண்டே இருக்கும். வளர்ச்சிக்கு முடிவே இல்லை. முடிவை யாரும் நிர்ணயிக்க வேண்டாம்" என்று கூறினர்.

நமது முதலமைச்சர் திரு. காமராஜர் அவர்கள் பரிசுகள் வழங்கி, தமிழ்வளர்ச்சிக் கழகம் செய்துவரும் பணிகளைப் பாராட்டிப் பேசினர். "தமிழ்க் கலைக் களஞ்சியம் தயாரிப்பது பிரம்மாண்டமான வேலை. நல்ல தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு இது போன்ற பரிசளிப்பு விழாக்கள் சிறந்த தூண்டுகோல்களாக அமையும்" என்று அவர் சுருக்கமாகப் பேசி முடித்தார்.

மற்றும் பேராசிரியர் சேதுப்பிள்ளை, பாலசுப்பிரமணிய அய்யர் ஆகியோர் பேசினர்கள்.

இந்தியாவிலேயே முதல் கலைக்களஞ்சியம் தமிழ் மொழியில்தான் வெளியானது. இந்த மகத்தான சாதனை தமிழர்களுக் கெல்லாம் பெருமையைத் தரும். பத்துப் பகுதிகளாக வெளிவர இருக்கும் கலைக் களஞ்சியத்தின் முதற்பகுதி சென்ற தமிழ்ப்புத்தாண்டு அன்று வெளியாயிற்று. சர்க்காரின் உதவியைக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் தமிழில் வெளியாகும் சிறந்த நூற்களுக்குப் பரிசு அளிக்கப்

# மீட்சி தந்த பெரியார்

தமிழ் மொழியின் பண்டைக்கால இலக்கியச் செல்வங்களின் அருமை பெருமைகளையும், தெவிட்டாத தேன் சுவையையும், அற்புதமான அழகுத் திரட்டையும் தமிழ்ப் பெருமக்கள் கொஞ்ச காலம் மறந்தார்கள். நாட்டு மண்ணில் அடிமைத்தனம் கோர நடனமிட்டது. மக்கள் மனதில் ஆங்கில மோகம் அளவு கடந்து பரவியது. இதன் பலனாக, ஒரு வாழ்க்கையை வாழ்ந்து விட்டால் போதும் என்ற பரிதாபமான நிலை எங்கணும் ஏற்பட்டது. வாழும் வாழ்க்கை பெருமையுடையதாகத் திகழ வேண்டும் என்ற எண்ணமே அன்றைய ஆட்சியாளர்களால் நாட்டு மண்ணிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டது. அப்போது இலக்கியத்தைப் பற்றி எப்படி பொதுமக்கள் சிந்திக்க முடியும்? கடுமையான உரை நடை வேறு மக்களையும், மக்களது சொத்தான இலக்கியத் தெய்வத்தையும் பலவந்தமாகப் பிரித்து வைத்தது. இதன் விளைவு, மக்கள் மொழியைப் பற்றிய எண்ணத்தை மறந்தார்கள்.

அலை பாயும் கடல் வெளியும், ஓலை தின்னும் கறையான் இனமும், உலகத்தில் வழங்கி வந்த எந்த மொழியை மறந்தாலும், தமிழ் மொழியை மறக்கவில்லை. அடிமைத் தனமும், கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையும் அவைகளைப் பிடிக்கவில்லை. ஏற்கெனவே தமிழ்ச் சுவையைப் பருகிவிட்ட அலை கடல் சென்ற நூற்றாண்டு தமிழுக்கு இரக்கம் காட்டிற்று. உரை நூல்களில் அங்கங்குச் சுட்டிக் காட்டப்படும் பெரும் இலக்கியப் படைப்புகளைப் பல நூற்றாண்டுகளுக்கு முன் உண்டு களித்த பெருங்கடல் சென்ற நூற்றாண்டு தமிழுக்குக் கருணை காட்டியது நமது பெரு நிதியமாகும். ஆனால், கறையான்கள் கடல் செய்த வேலைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு விட்டன! வெறும் ஓலைச் சுவடிகளையும், பனையோலை ஏடுகளையும் புசித்தால் அவற்றுக்கு இனிக்காது; சாப்பிட்ட அமைதி பிறக்காது. தமிழ் எழுதப்பட்ட ஏடுகள் மீதும், சுவடிகள் மீதும்தான் அவைகளுக்கு எப்போதும் கண். தமிழ் மக்களின் மறதி வேறு, கறையான் கூட்டத்துக்கு மாபெரும் துணிச்சலைத் தந்தது. கேள்வி முறையின்றி அவை படையெடுத்து ஊழித்தாண்டவம் புரிந்தன. நல்வாழ்க்கையையே வெளி நாட்டாரிடம் பறி கொடுத்த தமிழர்கள் இந்தப் பேரழிவைப் பற்றி நினைக்கக்கூட இல்லை.

அப்போது ஒரு தமிழ்ப் பெரியார் கறையான் போராடி வெற்றிக் களிப்பில் எக்களித்த களத்தில் இறங்கினார். கறையான்கள் செய்துவிட்ட அழிவு வேலையை நிறுத்திச் செப்பனிட முனைந்தார். கறையான்களின் அழிவுக் களத்தில் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் ஆக்க வேலையில் புகுந்தார். நமது இலக்கியச் செல்வங்கள் பலவற்றின் மீட்சிக்குத் "தமிழ்த் தாத்தா" என்று பேரன்புடன் அழைக்கப் பெறும் டாக்டர் ஐயர் அவர்களே தனிப்பெரும் காரணமாகத் திகழ்ந்தார். நூல் மீட்சியுடன் அவரது பணி முடிந்து விடவில்லை. தமிழறிவு கொண்ட மக்கள் எளிதில் புரிந்து இன்பம் அனுபவிக்கும் முறையில் விளக்கமாக உரை எழுதினார். பழைய இலக்கியங்களுக்கு ஒரு புது நோக்கையும், புது மெருகையும் தந்தார். பழமைக்கும், புதுமைக்கும் அற்புதமான இணைப்பாக விளங்கின. அவர் தமிழ் இலக்கியச் சிறப்பைத் தமிழ்ப் பொது மக்களுக்கு அறிவுறுத்தி, மக்கள் சொத்தை மக்களிடமே ஒப்படைத்தார். மீட்சி, திருத்தம், பாதுகாப்பு ஆகிய அவரது மூன்று கடின வேலைகள் நம் இலக்கியங்களை நம்மிடம் சேர்த்துள்ளன. தமிழ் மொழி அக்காலத்தில் கவனிக்கப்பட்ட நிலையில் டாக்டர் ஐயரின் தமிழ்ப்பணி மேலும் பன்மடங்கு கடுமையையும், உயர்வையும் பெறுகிறது. அத்தகைய தமிழ்ப் பெரியாரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இப்போது அன்னாரின் இலக்கிய மீட்சியை நினைவு கூர்ந்து, அவரது மாபெரும் தமிழ்த்தொண்டினைப் பல்லாயிரம் முறை நினைந்து, அவர் ஒப்படைத்த பெறற்கரிய செல்வங்களை என்றென்றும் பாதுகாக்க உறுதி கூறுவது ஒவ்வொரு தமிழனின் மாறாக் கடமையாகும்.

---

பொறுப்பான செயல்களைச் செய்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அரிய வேலைகளுக்காக நாம் அவர்களைப் பொதுமக்கள் சார்பில் பாராட்டுகிறோம்.

திரைப்பட விமர்சனங்கள் :

# வள்ளியின் செல்வன்

ஈசன்

★

தமிழிலும், இந்தியிலும் ஏற்கெனவே வந்துவிட்ட சில சில படங்களின் காட்சிகள் "வள்ளியின் செல்வனி"ல் காணப் படுவதுதான் அப்படத்தின் முக்கிய குறை. சொல்லப்போனல், "ஔலத்" இந்திப் படத்தை அப்படியே தழுவி உள்ளது. மற்றப்படி, படம் நல்ல முறையில் உருவாகி யிருக்கிறது. காட்சி களில் பின்னணியில் தொங்கும் திரைச்சீலையில் ஓவியம் வரைந்தவர்களின் பெயரைப் பட நிர்மாணர்கள் வரிசையில் காட்டும்போது பின்னணி இசை பாடியவர்களின் பெயரை மட்டும் காட்டாதிருப்பது யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ் கம்பெனியாருக்கு அழகல்ல. வசந்த குமாரியின் குரலையும், ரத்தினத்தின் குரலையும் இன்று ரஸிகர்க ளிடையே மறைத்துவிட முடியாது. இந்த "மறதி"யைப் பிரபல ஸ்டுடி யோக்காரர்களும் கைவிடுவது மிக நல்லது. அதே போல மூலக்கதை எழுதியவரின் பெய ரையும் காட்டுவது நாகரீகமாகும்.

கதை பழக்கமானதுதான். பிள்ளை பெற்றுத் தரவில்லை என்பதற்காகச் சீமான் மறுமணம் செய்ய முனைகிறர். எசமானியின் வாழ்வை வளப்படுத்த தன் குழந்தையைத் தியாகம் செய்கிறன் வீட்டு வேலைக்காரன். அவன் மனைவி பிள்ளைப்பாசம் தாளாது மடி கிருள். காலக்கிரமத்தில் சீமான் மனைவி கருத் தரித்து சொந்தமாகவே குழந்தையைப் பெறு கிருள். சொந்தக் குழந்தையை அடைந்த பின் வளர்ப்புக் குழந்தையிடம் பேதம் பாராட்டு கிருள் சீமாட்டி. குழந்தைகளுக்குள் உள்ள பாசம் அக்குடும்பத்தைப் பிணைத்து வைக் கிறது. எசமானர்கள் வேலைக்காரனிடம் மன்னிப்புக் கோருகின்றனர். இதுதான் கதையின் சாரம். இக் கதையை யொட்டி இலேசாகக் கண்ணோட்டம் செலுத்தவேண்டிய ஒரு துணைக்கதை நகைச்சுவையைச் "சப்ளை" செய்கிறது, படம் பார்க்கும் நமக்கு.

வள்ளியின் குண ஓவியம் அற்புதமான ஒரு தாய்மைச் சித்திரம். தியாகத்தின் சின்ன மான கந்தன், தன் செல்வன் கொடுமைப் படுத்தப்படும்போது கொந்தளித்து திருத்தப் பட்ட உண்மைத் தந்தையின் வடிவத்தைப் பெறுகிறன். இரகசியத்தை அறியாது சீமான் கந்தன் மீது சீறி விழுவதும், உண்மை தெரிந்த பின் அவனிடம் மன்றுடுவதும் அவரது குண மேம்பாட்டினை உணர்த்துகின்றன. தன்ன லத்துக்காக இரவல் குழந்தையை வளர்க்கும் வத்சலா, சொந்தக் குழந்தை பெற்றவுடன் குணம் மாறுவதும் இயற்கையே. ஆனல், அவ்வளவு விரைவில் குணம் மாறுவது இயல் பல்ல. அவள் குணமே மாறி யிராவிட்டால் வள்ளியைவிடச் சிறந்த குணப் படைப்பாக இருந்திருப்பாள். இந்தக் குண நலன்களை அழகாகத் தீட்டி யிருக்கிறர் சுப்பு. ஜெமினி கணேசன், வனஜா, துரைராஜ் ஆகியவர்கள் சிரிப்பு மூட்டவே படைக்கப்பட்டிருப்பதால் ஆராய்ச்சி வேண்டாம்.

இயல்புக்கு மாருத வசனங்களை அள்ளிக் கொடுத்திருக்கிறர் சுப்பு. ஓரிரு இடங்களில் சிறு முரண் இருப்பதாகப் படுகிறது. "நம் கொழந்தைக்குக் கண்ணாலமின்னு" என்று வள்ளி தன் செல்வனின் பிறந்த நாள் விழா வைக் குறிப்பதாக என் ஞாபகம்; "லட்டு இப்போ தின்னு கொழந்தை பொறந்ததும், "லட்டு கொண்டாடி"ன்னு கேட்கும்" என்று வள்ளி கணவனிடம் கூறுகிருள். குழந்தை தாயைக் "கொண்டா, அம்மா" என்றுதான் கேட்கும். மற்றப்படி வசனம் உயிரோடு எழுதப்பட்டுள்ளது.

சிறந்த நடிப்பு சுந்தரிபாயிடம்தான் காணப்படுகிறது. தாய்மையுணர்ச்சியை அவர் அழகான பாவங்களால் வெளிப்படுத்துகிறர். கந்தனக வரும் சுப்பையா ஏறக்குறைய எல்லாக் காட்சிகளிலும், முக்கியமாகப் பின் பாதி படத்தில் உணர்ச்சிகரமாக நடிக்கிறர். கந்தன்—வள்ளி குடும்ப வாழ்க்கை உரை யாடல்கள் சுவையாக உள்ளன. சீமானக வரும் சகஸ்ரநாமம் மிக இயற்கையாக நடித் துள்ளார். லலிதா இப்படத்தில் குறை சொல் வதற்கின்றி நடித்துள்ளார். முகபாவ மாற்றத் தில் சிறிது விரைவு ஏற்பட்டால் நடிப்பில் குறையே சொல்ல முடியாது. ஜெமினி கணேசன், வனஜா, துரைராஜ் ஆகியோர் சரளமாகப் பேசி சிரிப்பு மூட்டுகின்றனர். சிறுவர்கள் இருவரும் கூடிய மட்டும் சிரத்தை யுடன் நடித்திருக்கிறர்கள்.

இசை அமைப்பு தென்னிந்திய பாணியில் உள்ளது. பிரபலம் ஆகுமோ என்ற ஐயம் ஏற்பட்டாலும், குறை சொல்ல முடியாத சங்கீத அமைப்பு. கந்தன் பாடும் ஒரு பாட்டை

டைரெக்டர் தவிர்த்திருக்கலாம். சுந்தரிபாய்க்காக வசந்தகுமாரி பாடியுள்ள பாட்டு இனிமையாகவுள்ளது. ஒரே குரல் இருவருக்கு இரவல் வழங்கப்பட்டுள்ளது. நடனங்கள் பிரமாதமாக இல்லை; ஆனாலும், பாதகமில்லை. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு இவைகளில் குறை இல்லை. நல்ல 'எடிடிங்' படத்துக்கு உணர்ச்சி வேகத்தைப் படிப்படியாக அமைக்கிறது.

குழந்தையைத் தியாகம் செய்யுமாறு மனைவியைக் கந்தன் ஒப்ப வைக்கும் கட்டங்களைச் சுப்பு நாஸுக்காகக் கையாண்டிருக்கிறார். அவர்களது குடும்ப வாழ்க்கை சுவை மிக்க ஓவியம். பிள்ளைக்காக இன்னொருத்தியை மணக்கத்துணியும் சீமான், நீண்டகாலம் கழித்து தன் அன்பு மனைவி பிள்ளைப்பேற்றுக்குப் போகும்போது கடையில் கவலையின்றி அருமந்த மனைவியைப் பிரிந்துவிட்டு இருக்கவே மாட்டார். 'கண்டினியூடி'யில் (CONTINUITY) சில குறைகள் உள்ளன. ராஜு அன்னையின் சமாதியில் அமர்ந்து அலறும்போது கந்தன் அங்கு இல்லை; அடுத்த காட்சியில் ராஜு அழும்போது கந்தன் மரத்தடியில் தூக்கத்திலிருந்து விழிக்கிறான்! மொத்தத்தில் சுப்பு பாராட்டத்தக்க டைரெக்ஷன் செய்துள்ளார் என்பதை மறுக்க முடியாது. மிகை நடிப்பு எங்கும் எவரிடமும் இல்லை.

ஏற்கெனவே, திரையில் நடமாடின படங்களின் சாயலைக் கொண்டிருந்தாலும், யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸ் கம்பெனியாரின் "வள்ளியின் செல்வன்" உணர்ச்சிகரமாக எடுக்கப்பட்டுள்ள ஒரு படமாகும். படாதிபர்கள் தாங்களாகவே ஏற்படுத்தியுள்ள கதைப் பஞ்சத்தின் பரிதாபமான எதிரொலிதான் "வள்ளியின் செல்வன்."

# ஒரு சிறந்த குழந்தைப் படம்

குழந்தைகளுக்காக வென்று எடுக்கப்படும் திரைப்படங்களுக்குள் சிறந்த ஒன்றுக்கு இந்திய சர்க்கார் பரிசு வழங்குவது என்று திட்டமிட்டு, சென்ற ஆண்டு ஒரு மராத்திப்படம் அப்பரிசைத் தட்டிக் கொண்டு சென்றது சினிமா ரஸிகர்களுக்கு நினைவிருக்கலாம். இந்திய சர்க்காரின் இத்திட்டம் படஅதிபர்களிடையே பாராட்டத் தக்க உற்சாகத்தைத் தூண்டியிருப்பது வரவேற்கத் தக்கது. பம்பாயில் சில பிரபல கம்பெனிகள் இவ்வாண்டுப் பரிசைப் பெறும் நோக்கத்துடன் உற்பத்திக் களத்தில் இறங்கி விட்டன. நமது படவுலக மன்னர்களும் குழந்தைகள் படத் தயாரிப்பில் முனையலாம்.குழந்தை நடிகர்களைக் கொண்டு தயாரிக்கத் துணியும் சினிமாப் படத்திற்கு அப்படி யொன்றும் அதிகச் செலவு ஏற்பட்டுவிடாது. இந்த நம் எண்ணத்தை உறுதிப் படுத்துகிறது, சமீபத்தில் 'மினர்வா' டாக்கீஸில் ஓடிய "KIDNAPPERS" என்ற ஆங்கிலப் படம். ஒவ்வொரு காட்சியும் குழந்தை எண்ணத்தின் அற்புதப் படப்பிடிப்பாக உள்ளது.

இரு சிறுவர்கள் அநாதையாகிப் பாட்டன் வீட்டைத் தேடி வருகிறார்கள். அவர்களது தந்தை போரில் கானடா நாட்டு டச்சுக்காரர்களால் கொல்லப்பட்டிருக்கிறார். டச்சுக்காரர் மேல் அவர்கள் பாட்டன் தீராத துவேஷம் கொள்கிறான். விரோத மனப்பான்மையை அவர்களிடையே வளர்க்கிறான். பள்ளி செல்லும் வயது வந்த அண்ணன் பள்ளியில் சேர்க்கப்படுகிறான். அங்குள்ள ஒரு டச்சு மாணவன் மேல் அவன் பகைமை பாராட்டுகிறான். அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டு அடித்துக் கொள்கின்றனர். பள்ளி ஆசிரியர் சண்டையை நிறுத்தி சமாதானமானதற்கு அறிகுறியாக கை குலுக்கச் சொல்கிறார். உள்ளத்தில் வேரூன்றி விட்ட பகைமை எண்ணம் அண்ணனை அவ்வாறு செய்ய விடுவதில்லை. சிறுவர்களின் அத்தை (பாட்டன் மகள்) ஒரு டச்சு டாக்டர் மேல் பாசம் வைக்கிறாள். குழந்தைகள் பிஞ்சு உள்ளத்தைப் பாட்டியும், அத்தையும் எவ்வளவு விளக்கியும் பாட்டன் தன் கெடுபிடித்தனத்தை விடுவதில்லை.

மலைச்சாரலில் அண்ணனும் டச்சு சிறுவனும் கோரமாகப் போரிடுகின்றனர். யாரோ டச்சு ஆட்கள் மறைந்திருப்பதாக எண்ணிப் பாட்டன் சுடுகிறான். பொது அபாயத்தின் பயங்கர ஒலியைக் கேட்டவுடன் சிறுவர்கள் ஒருவரை யொருவர் தழுவி நண்பர்களாகித் தப்பித்துக் கொள்கின்றனர்.

சிறுவர்களுக்கு விளையாட நாய்க்குட்டி ஒன்றின் மேல் அளவிலா ஆசை. குழந்தை மனம் அறியாத பாட்டன் அவர்களைக் கண்டிக்கிறான். விளையாட்டுப் பொருள் ஏதுமின்றி வழியில் கேட்பாரின்றித் தனித்துக் கிடக்கும் குழந்தையை அவர்கள் வளர்க்கின்றனர். பாட்டன் கொடுமைக்குப் பயந்து இவ்விஷயத்தை அவரிடம் மறைக்கிறார்கள். டச்சு டாக்டர் தொடர்பை யறிந்து மகளை கிழவர் வன்மையாகக் கண்டிக்க அவள் அது தாங்காது வீட்டை விட்டு ஓடுகிறாள். அவள் ஒரு விபத்தில் சிக்கிக் காயமடைகிறாள். டச்சு டாக்டரே கவனிக்க நேரிடுகிறது. சிறுவர்கள் "திருடிய" குழந்தை டச்சுக் குடும்ப குழந்தை

யாக இருக்கவே விபரீதம் ஏற்படுகிறது. அண்ணன் மேல் அபாண்டம் சுமத்தப்படு கிறது. ஆராய்ச்சியின் விளைவாக தோழமைப் பொருள் ஒன்றும் கிடைக்காததால் அவ்வாறு ஏற்பட்டதெனத் தெரிகிறது. பாட்டன் தன் தவறை உணருகிறார். பகைமை எண்ணம் அழிந்து விரோதம் பாராட்டின குடும்பங்கள் ஒன்று சேருகின்றன.

பிரிட்டிஷ் கம்பெனி ஒன்று எடுத்துள்ள இக் கதை, "குழந்தைகளின் பிஞ்சு உள்ளங் களில் பகைமை வித்தினை இடக்கூடாது. அதனால் வேண்டாத விபரீதங்கள்—உரிய காலத்தில் தலையிட்டாலன்றி நிவர்த்திக்க முடி யாத அளவு வளர்ந்து விடக்கூடிய விபரீதங் கள் ஏற்படக்கூடும்." என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டது. படத்தில் வரும் "குழந்தைகள் நடமாடு காட்சிகள்" இயற்கைக்கு முரண்படாது இருப்பதை நம் மன்னர்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண் டும். குழந்தை மனோதத்துவம் ஒரு கணம் கூட மீறப்படாது இருப்பது படம் தயாரித்த வர்களின் கூரிய அறிவுக் திறனைக் காட்டு கிறது. பெரியவர்கள் பேசக்கூடிய வார்த்தை களையும், பேச்சுக்களையும் குழந்தைகள் பேசு வதே இல்லை! அதாவது சிறுவன் மூளையில் முதியவன் சிந்தனை பிறப்பதில்லை. வசனம் எழுதிய கதாசிரியர் நமது அரும்பெரும் பாராட்டுக்கு உரியவராகிறார். மூலக்கதை, திரைக்கதை, வசனம் முதலியவற்றை அமைத்த கதாசிரியர் ஓரிடத்திலும் குழந்தை மனநிலையினை மாறுபட்டுக் காட்டுவதில்லை. குழந்தைகள் பாட்டனைக் கேட்கும் கேள்வி கள், பள்ளியில் சிறுவர்களுக்குள் நிகழும் சண்டை, அண்ணனைக் காக்கத் தம்பி துடிக் கும் காட்சி, தம்பிக்கு நாய்க்குட்டி மேலுள்ள அபரிமிதமான விருப்பம், அதற்காக அவன் ஒவ்வொரு சமயம் கேட்கும் கேள்விகள், டாக்டரிடம் அவன் வெளியிடும் கோரிக்கை (டாக்டர் வைத்திருப்பது ஆண் நாய்!), விளை யாட ஒரு பொருளும் அகப்படாமையால் வழி யில் கேட்பாரின்றி கிடக்கும் குழந்தையை அவர்கள் வளர்ப்பது, கைக் குழந்தை பேசா திருப்பதைப் பற்றி, தம்பி வெளியிடும் கருத் துக்கள், பாட்டனின் கெடுபிடி ஆட்சியால் "குழந்தை வளர்க்கும் வேலையை" அண்ணன் அவரிடம் மறைப்பது, பிறகு கோர்ட்டில் அண்ணன் பதில் தரும் காட்சிகள், கடைசியில் பாட்டனின் கெடுபிடி மனம் மாறி அவர் களுக்கு நாய்க்குட்டி வாங்கித்தர ஒப்புதல் ஆகிய யாவும் உணர்ச்சியோடும், இயற்கையா யும் உள்ளன. சிறுவர்கள் இருவரும்—குறிப் பாகத் தம்பியாக நடிப்பவன்—பிரமாதமாக நடித்துள்ளனர்; அல்ல, நடமாடியுள்ளனர். குழந்தைகளுக்கு நடிப்பு ஒத்திகை தந்த அம்மையாரின் தனிப்பெரும் வெற்றி இச்சிறு வர்களின் அற்புத நடிப்பு. பாட்டன், பாட்டி, குழந்தைகளின் அத்தை, டாக்டர், மற்றும் வரும் ஆட்களும் நன்கு நடித்துள்ளனர். மூலக்கதை, திரைக்கதை, வசனம் ஆகிய வற்றை அமைத்தவர், குழந்தைகளை நடிக்கக் கற்றுக் கொடுத்தவர், டைரெக்டர் முதலிய மூவரின் பெருமைப்படத்தக்க வெற்றி "KIDNAPPERS" என்ற பிரிட்டிஷ் படம். 'டெக்னிக்' பகுதியில் குறைசொல்ல ஒன்றுமே இல்லை.

இப்படத்தை முன்மாதிரியாகக் கொண்டு நம் குழந்தைப் படங்கள் தயாரிக்க வேண்டும் என்பது நம் அவா. நமது நடைமுறை வாழ்க் கைக்கு விலகிக் கதை இருத்தல் கூடாது. குழந்தைப் பாத்திரங்களைக் குழந்தைகளாகவே படைக்க வேண்டும். ஓரளவு மழலையோடு நான்கு வயதுக் குழந்தை பேசுவது இயற் கையே. அதற்காக அபரிமிதமான கொச்சை கூடாது. ஆங்கிலக் குழந்தைகளுக்காக 'KIDNAPPERS' எப்படித் தயாரிக்கப் பட்டதோ, அப்படி நம் குழந்தைகளுக்குப் படம் தயாரிப்பது நாம் வரவேற்க வேண்டிய ஒன்று.

## 'திப்பு'வின் சரடுகள்

6. காமன் வெல்த் பிரதமர்கள் மகா நாட்டின்போது, பாக் பிரதமர் முகமதலி நேருஜீயுடன் பாக்—இந்தியா தகராறுகள் பற்றிப் பேசவில்லை என்று சொன்னது உண்மை யென்றே தெரிகிறது. அவர் தம் முடன் அழைத்துப் போன காஷ்மீர் பிரச் சினை கால்வாய் தகராறு அகதிகள் குடி யமைப்பு என்ற மூன்று நாய்களும் குரைத்த தைக் கண்டு எந்த பத்திரிகை நிருபரும் செய்தி அனுப்பவில்லை யல்லவா!

7. யூகோ பிரதமர் டிட்டோவின் இந் திய விஜயத்தை யொட்டி, அவருக்குத் தேசிய சர்வகலாசாலைகள் 'பண்டிட்' பட்டத்தை அளிக்குமென்றும், அதற்கு மாற்றாக யூகோ சர்வகலாசாலைகள் நேருஜிக்கு 'மார்ஷல்' பட் டத்தை அளிக்குமென்றும் தெரிகிறது.

## மேலட்டைச் சித்திரம்

"வெள்ளிக் கோப்பை" என்ற ஒரு சிறு கதையில் வரும் நிகழ்ச்சி யொன்று இவ்விதழ் மேலட்டைச் சித் திரமாகத் திகழ்கிறது.



# வெள்ளிக் கோப்பை

வெங்கடேசன்

"நேஷனல் மாக்னிஸைட் இண்டஸ்ட்ரிஸ்" உரிமையாளர் சிவநேசன் அன்று சென்னை இராஜ்யமே கண்டும் கேட்டுமிராத ஒரு மாபெரும் விருந்து அளித்தார். இருபத்தைந்து ஆண்டு காலமாக அத்தொழிலை மேலும், மேலும் வளர்த்து, சென்னை முழுதும் பிரசித்தி பெற்ற அவருடைய அழைப்பைத் தட்டிக் கழிக்காது சென்னை கவர்னரும், அரசாங்க அமைச்சர்களும், மற்றும் முக்கிய உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களின் பல கட்சித் தலைவர்களும், இன்னும் சக தொழில்களில் ஈடுபட்டு அந்தந்தத் துறையில் முன்னணியில் நின்ற தொழிலதிபர்களும் வந்திருந்தனர். சமூக ஏணியின் பல படிகளிலும் நிற்கும் எல்லாவகையினரும் சமமாகக் கௌரவிக்கப்பட்டனர். இவ்வளவு சிநேக பாவத்தோடு முற்றும் மாறான கருத்துக்களும், அடிப்படைக் கொள்கைகளும் கொண்ட எவரும் எப்போதும் ஒருவரை யொருவர் கண்டு உண்மை அன்போடு அளவளாவியதில்லை. "அன்புச் செல்வர் சிவநேசன் வழியில் தொழிலதிபர் யாவரும் சென்றால் நாட்டில் தொழிலதிபர்—தொழிலாளர் உறவு உறுதிப்படும், இன்னும், இன்னும் வளரும்" என்ற ஒருமுகப்பட்ட அபிப்பிராயம் பல்வேறு கொள்கைகள் கொண்ட பெரியவர்களின் பேச்சில் காணப்பட்டது.

பிரம்மாண்டமான விருந்து முடிந்தபின் ஒவ்வொருவராக ஒரு ஒழுங்கோடு விடை பெற்றனர். சிவநேசன் அன்பே உருவாக எல்லோரையும் கை குலுக்கி வழியனுப்பினார். 'சிவநேசன் வாழ்க, அவர் தம் அன்பு வளர்க' என்று எல்லோரும் ஆசி கூறிச் சென்றனர்.

எல்லாம் முடிந்தபின் சிவநேசன் கொஞ்சம் இளைப்பாறினார். விருந்து நடந்த தோட்டத்து வெளியை வேலைக்காரர்கள் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். இதற்குள் மணி இரவு பத்து ஆகிவிட்டது. சிவநேசன் விருந்துக்காக உடுத்திய ஆடைகளை அகற்றிவிட்டு, படுக்கப் போகும்போது அணியும் உடைகளைப் போட்டுக் கொண்டார். படுக்கையில் 'அக்கடா' என்று சாய்ந்த அவர் கண்களில் படுக்கைக்கருகில் இருந்த ஒரு சிறு மேஜை தென்பட்டது. அதில் ஒரு வெள்ளிக் கோப்பை 'பள பள' வென்று மின்னிக் கொண்டிருந்தது. அதை ஆசையோடு அவர் கையிலெடுத்தார்.

அதற்குள் அவர் மனைவி கற்பகம் அறையில் நுழைந்தாள். அவர் கையில் பிடித்திருந்த அதே வெள்ளிக் கோப்பையை இவள் வெறித்துப் பார்த்தாள். "உங்களோடு ஒரே அக்கப்போராக ஆகிவிட்டதே! அந்த வெள்ளிக் கோப்பை அழகுதான். அதில் உங்கள் கட்டளைப்படி எப்போதும் பிண்ணாக்கு கிடக்கிறதே அதுதான் கண்களை உறுத்துகிறது. அறையின் இன்பத்தையும் சிதைக்கிறது." என்றாள் கற்பகம்.

"கற்பகம்! பிண்ணாக்குகூட சில நேரங்களில் மனிதனுக்குத் தேவையாகிறது. அதை அடிக்கடி நினைவூட்டத்தான் அதை என்றென்றும் இந்த அறையில் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மனிதன் எப்போதும் இன்பமாக இருப்பது சாத்தியப்படாது." என்று அமைதியாகச் சொன்னார் சிவநேசன்.

"உங்கள் வேதாந்தம் எனக்கு ஒன்றுமே புரிவதில்லை; இப்போது நாம் இன்பமாக

இல்லையா? இது நிலைக்காது என்று சொல்கிறீர்கள்?'' என்று வருத்தத்தோடு கேட்டாள் கற்பகம்.

"அப்படியல்ல, கற்பகம்! பாக்கியசாலிகளாக இருப்பதால் நம் இன்பம் என்றும் குலையாது. வாழ்க்கை ஆற்றில் இன்பத் தெப்பத்திலே மிதப்பதால் ஆற்றுக்கு அடியில் துன்பச் சுருக்களும், துயரச் சுழல்களும் இருக்கும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது." என்றார் சிவநேசன்.

"உம், என்னமோ சொல்கிறீர்கள்! அது அறையில் இருப்பது உங்கள் விருப்பமாக இருக்கிறது. உங்கள் ஆசையை நான் அழிக்க ஒருபோதும் விரும்பியதில்லை. உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் அது இருந்துவிட்டுப் போகட்டும்." என்று பேச்சை முடித்துவிட்டு படுக்கையில் விழுந்து கண்ணை மூடினாள் கற்பகம். சிறிது நேரத்தில் அவள் தூங்கிப் போனாள்.

வெள்ளிக் கோப்பையில் போடப்பட்ட பிண்ணைகைச் சிவநேசன் உற்றுப்பார்த்தார். அது எதையோ அவர் நினைவுக்கு கொண்டு வந்தது. அவர் கண்முன் ஒரு காட்சி விரிந்தது. கோப்பைக்குள் பிறந்த குழந்தை அழும் குரல் அவருக்குக் கேட்டது.

* * *

பிறந்தவுடன் எல்லோரையும் போலத்தான் அவனும் உரக்கக் கத்தி அழுதான். அப்போது தானே அவன் உயிரோடு இம் மண்ணுலகத்தில் காலடி எடுத்து வைக்கிறான் என்று பொருள்? பொதுவாகப் பிறந்த குழந்தை அழுதால் அதன் வருகைக்காகக் காத்திருந்தவர்கள் சிரிப்பர், பெற்றுப் பிழைக்கும் ஒரு கண்டம் தாய்க்கு முடிகிறதல்லவா? வேதனை தீர்ந்ததே என்று தாயைவிட அவளைச் சுற்றி நின்று பிரசவத்துக்கு உதவ வந்திருக்கும் உற்றார், உறவினர் தங்கள் மனதில் ஆறுதல் அடைந்தனர் என்பதன் விளக்கம் கலக்கத்துக்கிடையே பூக்கும் அச்சிரிப்பு. ஆனால் அவன் பிறந்ததும், அவன் கூடவே சேர்ந்து எல்லோரும் ஓலமிட்டனர். காரணம் அவன் கூவாது சாக்காடு அடைந்தான் என்பதல்ல. அவன்தான் தன் வருகையை உரக்க அறிவித்து விட்டானே? அவனைப் பெற்ற அந்த அம்மாள் உடம்பு ஜில்விட்டு விட்டதுதான் அவர்கள் ஓலத்துக்குக் காரணம்.

பிரசவ ஜன்னி என்றனர் சிலர். உதிரம் நிறையக் கொட்டிவிட்டது என்றனர் சிலர். அடுத்தடுத்து எத்தனை பிள்ளைகளை அந்தச் சோனி உடம்பால் பெற்றெடுக்க முடியும் என்றனர் சிலர். அவர்களைக் கேட்டுக் கொண்டா பிள்ளை கர்ப்பத்தில் வளருகிறது? எது எப்படியிருப்பினும் அந்த நடுவயதடைந்த அம்மாளின் மூச்சு நின்று விட்டது. கண்கள் தாமாக மூடிக்கொண்டன. ஆனால் வாய்மட்டும் சிரித்தது. அதாவது, அவள் பிள்ளை ஈன்ற மகிழ்ச்சியில் அடைந்த பெருமிதம் அது. அவனுடைய அழுகுரல் அவ்வாறு அவளைக் களிப்பூட்டியது என்பதை அவன் கண்டானோ, என்னவோ? மீண்டும் மீண்டும் உச்ச ஸ்தாயியில் அவன் ஓலமிட்டான்.

சுற்றியிருந்தவர்கள் அவனை வைதனர்; சபித்தனர், வரும்போதே ஆச்சியின் உயிரை விழுங்கின கொடும் பசிக்காரன் என்று கை நொடித்தனர், அவன் என்னத்தைக் கண்டான்? அவனை வரவேற்கிறார்கள் என்று எண்ணி அவன் பாட்டுக்குச் சிரித்தான், தாயைக் கொன்று தாகம் தணித்துக் கொண்டதற்கா சிரிப்பு என்று ஒருத்தி தோளில் இடித்துக் கொண்டாள். அவன் சிரித்தான், சிரித்தான், சிரித்தான்.

எல்லாச் சடங்குகளும் முடிந்தன. எப்படியோ பிறந்தேன், எப்படியோ வளர்கிறேன் என்ற மாதிரி அவன் நான்காவது பிராயத்தை எட்டிப் பார்த்தான். இந்தச் சமூகத்திலேயே அவனுக்கு அறிமுகமான முகங்கள் மூன்று. ஒன்று தாய்; இன்னொன்று தந்தை; அடுத்தது அண்ணன்! தாயைக்கூட அவனுக்கு நினைவில்லை. அண்ணன் முகமும் அப்பா முகமும் நன்கு பரிச்சயம். இரண்டு பேருமாக அதிகாலையில் எங்கோ செல்வார்கள். போகும்போது அவன் வயிற்றுக்குச் சிறிது கூழ் தருவார்கள். பிறகு நன்றாக இருட்டினபின் தான் வருவார்கள். வந்தவுடன் ஏதோ அரை அல்லது முக்கால் இட்டிலி கிடைக்கும். இடை நேரத்தில் பசித்தால் அவனே எப்படியோ சமாளித்துக்கொள்ள வேண்டும். வந்தவுடன் அவனை யெடுத்துக் கொஞ்சுவதற்கு அவர்களுக்குத் தெம்போ, உற்சாகமோ இராது. வந்து தரையில் விழவேண்டியதுதான். இடியே இடித்தாலும் அவர்களுக்கு உணர்வு வராது. சிறுவனுக்கு ஏண்டா இவர்கள் இப்படிக் குறட்டை விடுகிறார்கள் என்று புரியாது, குறட்டை விட்டால் ஒருக்கால் நன்றாகச் சாப்பிட்டு விட்ட இன்ப உணர்ச்சி இருக்குமோ, ஏதோ? அவனும் பகாசுரப் பசிக்கு உணவு தேட குறட்டை விட முயற்சிப்பான். அவன் வயிறுமட்டும் பசியால் அவதிப்படும்.

நிதமும் இதே மாதிரி. அவனுக்கு ஒரு சட்டையோ, நிஜாரோ கிடையாது. மற்றக் குழந்தைகள் எப்படி நறுமணத்தோடு இருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியாது. தண்ணீரைக் குடிப்பதற்கு மட்டும்தான் உபயோகிக்கிறார்கள் என்பது அவனுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. மற்றக் குழந்தைகள் ஏன் தன்னோடு விளையாட வருவதில்லை என்பது அவனுக்கு ஒரு பெரும்புதிர். ஆனாலும்

அவன் கட்டற்றுத் திரிந்தான். கண்ட இடத்துக்குப் போனான். கீழே கிடந்ததைப் பொறுக்கி பசியார உண்டான். இரவு நிச்சயமாக வீட்டுக்கு —அவன் மனதிலே அது வீடுதான். —நாய் கூட தங்க மறுக்கும் ஓட்டைக்குடிசை என்றால் அவன் அறியமாட்டான்—வந்து விடுவான்.

ஒருநாள் அதிகாலையில் அவன் தந்தை அவனை யெழுப்பினார். எழுப்பி தூரத்தே இருந்த ஒரு கோவில் குளத்துக்கு அழைத்துச் சென்றார், அவனைத் தண்ணீரில் நனைத்து எடுத்தார், உடம்பை நன்றாகத் தேய்த்தார். ஒரு வெள்ளைக் கட்டியை உடம்பில் பூசினார். உடம்பிலிருந்த ஈரம் கலந்ததும் எங்கிருந்தோ வெண்மையான நுரை கிளம்பிற்று. அவன் இதுமட்டும் கண்டுபிடிக்கச் சாத்தியப்படாத ஒரு உண்மையைக் கண்டுபிடித்த வெறியில் ஒரே கூத்தடித்தான். அதாவது மற்றக் குழந்தைகள் நறுமணத்தோடு வரும் இரகசியம் இதுதானா? இந்த வெள்ளைக் கட்டியில் எப்படி வாசனையைப் பிடித்து வைத்திருப்பார்கள்?

'படார்' என்று ஓசை கேட்டதும் தன்னை யறியாமல் அவன் முதுகைத் தடவிக்கொண்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. "பொங்கலுக்குக் குளிப்பாட்டலாம் என்றால் குறும்பா செய்கிறாய் அப்படியும் இப்படியும் ஆடி? வழுக்கி விழுந்தால் என்ன ஆவது?" என்று கண்டித்தார் அவன் அப்பா.

"ஓ, இதுதானா குளிப்பது என்பது?" என்று மறுபடி ஒருவிஷயம் தெரிந்து கொண்ட 'குஷி' ஏற்பட்டது அவனுக்கு.

வீட்டுக்கு வந்ததும் ஒரு புது நிஜாரும் புதுச்சட்டையும் அணிவிக்கப்பட்டான். அடடா, புதுத்துணியில் கூட ஒரு நல்ல வாசனை உள்ளதே? அங்கே வெள்ளைக் கட்டியில் வாசனை! இங்கே துணியில் வாசனை! அதிசயம் தான். அன்றைக்குத்தான் அவன் வாழ்க்கையில் முதல் முறையாக நன்றாக, திருப்தியாகச் சாப்பிட்டான்.

"இன்றைக்கு என்னப்பா அதிசயம்?"

"பொங்கல்'டா"

"அப்படி யென்றால் என்னப்பா?"

"சட்! சும்மாயிரு"

குளத்துப் படிக்கட்டில் ஒலித்த 'படார்' சப்தம் அவன் நினைவுக்கு வந்தது. மேலே பேசுவதற்கு நாக்கு அச்சம் கொண்டது.

திருநாள் போல விளங்கிய அன்று அவன் துள்ளித்திரிந்தான், மட்டிலா மகிழ்ச்சியோடு. எங்கும் கொண்டாட்டம்! இனிக்கும் கரும்பு வேறு அவனுக்கு வழியில் எவனோ தந்தான். அடே, நம்மைப் பற்றிக் கவலைப்படக்கூட அப்பா, அண்ணா அல்லாது வேறு யாரோகூட இருக்கிறார்களே என்று அவன் குழந்தையுள்ளம் ஆனந்த நடமிட்டது.



வழக்கம் போல அந்தி சாயும் நேரத்தில் அவன் வீடு சேர்ந்தான். வீட்டில் அநேகர் இருந்தனர். என்னடா, பொங்கல் மிக விசேஷ நாள் போல இருக்கே, இல்லாவிட்டால் இப்போது ஏன் இங்கு வந்தனர்? திடீரென்று எல்லாரும் ஒன்றாக அழுதனர். அவன் ஓடி உள்ளே சென்றான். இதுமட்டும் கண்ணெடுத்துப் பாராத யாரோ சிலர் -சொந்தக்காரர் என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படி யென்றால் கூட்டம் கூடி அழுபவர்கள் என்று அர்த்தம் போலும் - அவனை வேறு கட்டிக்கொண்டு அழுதார்கள். அவன் அப்பா தரையில் தூங்கிக்கொண்டிருந்தார். "பாவம்! மாரடைப்பு!" என்று பச்சாதாபப்பட்டது ஒரு குரல். ஏன் அழுகிறார்கள் என்று

அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எல்லாரும் அழுகிறார்களே, என்று அவனும் அழுதான். அப்பாவின் உடல் காலையில் முழுகின குளத் துத் தண்ணீர் போல 'ஜில்'விட்டு விட்டது.

அப்புறம் கூட்டமாக எங்கோ சென் றார்கள். அவனும் போனான். வழி முழுதும் வாய்விட்டுக் கூவி விளம்பரப்படுத்தி அழு தனர். எருமுட்டைகள்மேல் அப்பாவின் உடம்பு கிடத்தப்பட்டது. மகனை அப்பாவுக்குக் கடைசி தடவையாகக் காட்டினர். ஒரு கொள்ளி அவன் கையில் தரப்பட்டது. அவன் கையைப் பிடித்து யாரோ கொள்ளி வைத்த னர். பிறகு அவன் வீடு சேர்ந்தான்.

அப்பாவை அவனால் மறக்க முடியவில்லை. வெள்ளை சோப்புக் கட்டி, புது நிஜார், புதுச் சட்டை, கோவில் குளம், திருப்தியான சாப் பாடு இவை அவன் மறக்க முடியாக் காட்சிகள், கண்ணீரோடு வந்த அண்ணனிடம் "அப்பா எங்கே? எப்போது வருவார்?" என்று அவன் ஈனமாகக் கேட்டான்.

"அப்பா செத்துவிட்டார்! இனி வரமாட் டார்".

"செத்துப்போதல் என்றால் என்ன அண்ணா?"

அண்ணன் தம்பியைக் கட்டி யணைத்து அழுதான். அவனால் பேச முடியவில்லை.

சில மாதங்கள் சென்றன. ஒவ்வொன்று கச் சில கேள்விகள் கேட்டு சிறுவன் அவன் அண்ணன் 'மில்'லில் வேலை செய்கிறான் என்றும், வேலையில்லாவிட்டால் உணவு கிடைக்காது என்றும், இன்னோரன்ன உலக விஷயங்களைத் தெரிந்து கொண்டான். எக் காரணம் கொண்டும் திருடக்கூடாது. திருடி னால் கொன்றுவிடுவார்கள் என்பதை அவன் உணர்ந்தான்.

ஓராண்டு கழிந்தது. அண்ணன் வேலை போய்விட்டது என்று அவனிடம் சொன்னான். தொழிலாளர் கட்சியைத் தோற்றுவித்து, கூட்டம் நடத்தின ஒரே காரணத்துக்காக அவன் வேலையிலிருந்து தள்ளப்பட்டான். புரட்சிக்காரன் என்ற ஒரு பயங்கர பதம் சிருஷ்டிக்கப்பட்டு அந்த வார்த்தையை விளக்க அவன் உருவம் எல்லோருக்கும் காட்டப் பட்டது. வேறு வேலை அவனுக்குக் கிடைக் காததால் அண்ணன், தம்பி இருவரும் பிண்ணாக்கைச் சாப்பிட்டு வயிறு வளர்த்தனர். மூன்று மாதங்கள் அவ்வாறு சாப்பிட்டு அவர் கள் எப்படித்தான் வாழ்ந்தார்களோ, ஆண்ட வனுக்குத்தான் வெளிச்சம்.

ஒருநாள் சிறுவன் சொன்னான்:

"அண்ணா இனி நானும் வேலை செய் கிறேன், நீ என்னை அனுமதித்துத்தான் ஆக வேண்டும்."

"ஏழு வயது தொடங்கிய நீ என்ன வேலை செய்வாய்? உனக்கு யார் வேலை தருவர்? வேண்டாம்" என்றான் அவனுடைய அருமை அண்ணன். "புண்ணாக்கு சாப்பிட்டு எனக்கு வாந்தி வந்தது. வயிறு குமட்டிற்று. நான் உன்னிடம் சொன்னால் வருத்தப்படுவாய் என்று சொல்லவில்லை. அண்ணா, என்னை மன்னித்துவிடு."

அண்ணனின் விழிகளில் கண்ணீர் மல் கிற்று. அதற்குள் போலீஸார் இருவர் அவனை "ஆட்டு மந்தையை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிய புரட்சிக்காரன் இவன்தான்" என்று சொல்லி கைது செய்தனர். ஏழைக்கு ஒன் றுமே யில்லாததால், தம்பி தன் போக்கிலே செல்லட்டும் என்ற வேதாந்த எண்ணத்தோடு அண்ணன் விடை பெற்றான்.

கால் போன போக்கில் நடந்து வந்த தம்பி ஏதோ ஒரு ரயிலடிக்கு வந்து சேர்ந் தான். எப்படியோ பிளாட்பாரத்துக்குள் வந்து ஒரு ரயிலில் ஏறிக்கொண்டான். அவ னைச் சுற்றி ஒரே இருள்! எவ்வளவோ நேரம் கழித்து அந்த "போகி" (Bogey) யை ஒரு ரயிலில் இணைத்து, ரயில் எங்கோ போய்க் கொண்டிருந்தது, அவன் வாழ்க்கையைப் போல.

தூங்கிக்கொண்டிருந்த அவன் ஒரு டிக் கெட் பரிசோதகரால் எழுப்பப்பட்டான். "திருட்டுநாயே! என்னடா, உங்கப்பன் வீட்டு வண்டியில் தூக்கம், எங்கேடா டிக்கெட்?" அரைத் தூக்கத்தில் விழித்த அவன் ஒன்றும் பேசவில்லை. நாலைந்து அடிகள் அவன் உடம் பில் விழுந்தன. பிறகு அவனை ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறக்கி வெளியே கொண்டுவந்து விட்டுவிட்டனர். அவன் மறுபடி தன் வாழ்க் கைப் பிரயாணத்தைக் காலால் தொடங்கினான்.

வயல் வரப்புகளில் விழுந்தடித்துச் சென் றான். சேற்றிலும், சகதியிலும், அலுப்பாலும், சோர்வாலும் விழுந்து உடம்பில் அங்கங்கு காயம் பட்டு மீண்டும் நடந்தான். தொலை தூரத்தே இருந்த வீட்டிலிருந்து 'சிமினி' புகை தெரிந்தது. அவன் வயிறு திடீரென்று பசித் தது! பயங்கரமாகப் பசித்தது! அவன் ஓடினான். எங்கெங்கோ இருந்து நாய்கள் குலைத்தன. குடி யானவர் கத்தினர். அவன் ஒன்றையும் சட்டை செய்யவில்லை, ஒரே ஓட்டமாக ஓடி அந்த வீட்டை அடைந்தான். அடைந்ததும் சுருண்டு விழுந்தான்.

அவனை அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேலைக்காரர்களை நோக்கி, அவனை விட்டுவிடும்படி வீட்டுக்காரர் கட்டளை பிறப்பித்தார். பிறகு அவனைத் தானே தன் கரங்களால் தூக்கி அவனை விசாரித்தார்.

"பசி, பசி, பசி" என்ற ஒரே வார்த்தையை மீண்டும் மீண்டும் உச்சரித்தான் அவன்.

நன்றாக அவனுக்கு உணவு அளிக்கப் பட்டது. இரண்டே நாட்களில் அவன் உடம்பு தேறினன். அழுக்கு அப்பட்டமாக ஒட்டியிருந்த அவன் தினமும் குளிக்க வசதி செய்யப்பட்டது. கிழிந்த நிஜாரும், சட்டையும் அகற்றப்பட்டு புது வேஷ்டியும், துண்டும் தரப் பட்டது.

மூன்றாம் நாள் அவனை ஓடி வீட்டுக்காரரிடம் முறையிட்டான். "ஐயா, எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள்" என்று.

"உனக்கு எதுக்குடா வேலை" என்று கேட்டார் வீட்டுக்காரர்.

"வேலை கிடைக்காவிட்டால் சாப்பாடு கிடைக்காதுங்க, எசமான்"

"ஏன் இப்போ உனக்குக் கிடைக்கல் லேயா?"

"என்றென்றும் உழைத்து சாப்பிடணமுங்க."

"உனக்கு என்ன வேலை தெரியும்?"

"நீங்க எது சொன்னலும் செய்யறேனுங்க."

"திருடமாட்டியே? திருடின இந்த ஊரிலே வெட்டிடு வானுங்க. மகா முரடனுங்க."

"ஐயா, அந்த ஒரு வேலை எங்க குடும்பத்துக்கே தெரியாதுங்க."

"உனக்கு எந்த ஊர்டா?"

"பன்னீர்க்குளமுங்க."

"அது எங்கேடா இருக்குது?"

பையன் பதில் சொல்ல முடியவில்லை.

"அது எந்த ஜில்லாவில் இருக்குது?"

"ஜில்லா பேர் தெரியாதுங்க."

"அதுக்குப் பக்கத்திலே என்ன ஊர் பிரபலமானது இருக்கு?"

"தெரியாதுங்க!"

"பின்னே எப்படிடா இங்கே வந்தே?"

"ஒதுங்க எங்குமே எடங் கெடைக்காமே ஒதுக்குப் புறமாயிருந்த ஒரு ரயிலிலே போனேனுங்க. ஒரே மயக்கமாயிருந்ததுங்க. தெளிந்து பார்த்தபோது வண்டி எங்கோ ஓடிக்கிட்டிருந்தது. மறுபடி சோர்வாலே தூங்கிப் போனேனுங்க. ரெயில்காரன் நாலஞ்சு அடிகொடுத்து எங்கேயே இறக்கிட்டானுங்க, அப்புறமா வயல் லேயும், வரப்பிலேயும் வுழுந்து இங்கே வந்தேனுங்க."

"உன்னைப் பெத்தவங்க இல்லையாடா?"

"இல்லைங்க. நான் பொறந்ததும் அம்மா செத்துட்டாங்க. ரெண்டு வருசத்துக்கு முந்தி அப்பாவும் ஆச்சியைத் தேடிப் போய்ட்டாருங்க."

"இத்தினி நாள் எப்படிடா இருந்தே?"

"கடலைப் புண்ணக்கு தின்னு உசிரைக் காத்தேனுங்க."

வீட்டுக்காரரின் மனம் பாகாக உருகி விட்டது. மிருதுவான அப்பிஞ்சு நெஞ்சை மேலும் கஷ்டப்படுத்த அவர் விரும்பவில்லை. கண்ணீர் அருவி அவர் கண்களினின்றும் புறப்பட்டது. பையன் புஷ்டியான உணவு இன்மையின் காரணமாகத் தளர்ந்திருந்தாலும் புத்திசாலியாக இருந்தான். பிறப்பிலிருந்தே துக்கத்தையும், துயரத்தையும் கட்டிக் கொண்டு உயிர் வாழ்ந்த அவன் மனேதிடம் அவரை வியப்பில் ஆழ்த்தியது. அவன் குடும்பம் ஒரு நல்ல குடும்பம் என்றும் அவன் குணத்தில் சிறந்தவன் என்றும் அவருக்குப் பட்டது. உடனே அவனுக்குத் தன் வீட்டிலேயே வேலை தந்தார். "இதுபோல நாடோடிப் பயல்கள் ஒரு மாசம் நல்லா சாப்புட்டு, உடம்பு நல்லா தேறிட்டா எங்கே நெலெச்சி நிக்கப் போறுங்க? எதையாவது கெடச்சதைச் சுருட்டிக்கிட்டு ஓடிடுவாங்க." என்ற அந்த வீட்டு வேலைக்காரர்களின் ஒரு முகமான ஹேஷ்யம் பொய்த்து விட்டது.

* * *

பிரமை கொண்டவர் போல் ஆகி சிலை போல் அசையாது அமர்ந்த சிவநேசன், மனைவியின் கரங்கள் தற்செயலாகத் தம் மீது பட்டதால் நினைவு உலகத்துக்கு வந்தார்.

வாழ்க்கையில் தான் கொடுத்து வைத்தவள் என்ற பெருமை கற்பகத்தின் சிரித்த முகத்தில் எழுதியிருந்ததுபோல் அவருக்குப் பட்டது. தூங்கும் அந்த அமைதியான வட்ட நிலவின் ஒளி வீசும் வதனத்தில் திருப்தியும் இன்பமும் தாண்டவமாடின.

கையிலிருந்த வெள்ளிக் கோப்பை வறுமையில் வாடி, வாழ்க்கை தாழ்ந்து உற்றேர் இருந்தும் உதவி கிடைக்காததால் இன்பம் தேய்ந்த அச்சிறுவனை ஞாபகப்படுத்திற்று. அச்சிறுவன் தானே தான் என்பதை அவர் நினைவு ஆணித்தரமாக அறுதியிட்டுப்பேசிற்று. ஆம், அவன் தான் தான்! பிறந்தபோதே அன்னையைச் சாப்பிட்டுவிட்டு, குழந்தைப் பருவத்தில் அப்பனை முழுங்கிவிட்டு, பிள்ளைப் பிராயத்தில் அன்புருவான அண்ணனைச் சிறைக்குப் போகவிட்டு ஓடிவந்து விட்ட பரிதாபப்படத்தக்க ஜீவன் தானேதான். அண்ணன் எங்கு இருக்கிறனே? சிறையில் என்ன செய்தார்களோ? ஒதுங்க இடம் தந்து, தன்னைத் தந்தைபோல பேணி வளர்த்த அந்த வீட்டுக்காரர் தன்னைப் பொறுத்த மட்டும் தெய்வமே தான். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் முயற்சியின் பெருமையையும்,தொழிலின் சிறப்பையும், மேன்மையையும் அவன் புத்தியில் ஆழப்பதியும் படி விளக்கமாகச் சொன்னர். எந்தக் கல்லூரியிலும் இலேசில் கிடைத்து விடாத அந்த அறிவுச் செல்வத்தை வழங்கின அவர்

எவ்வளவு பெரியவர்! அவர் மறைந்தபின்தான் தான் இவ்வளவு முன்னுக்கு வந்தது! ஆஹா, இன்றைய விழாவுக்கு அவர் வந்திருக்க ஆண்டவன் அவரை விட்டு வைத்திருக்கக் கூடாதா? அவர் என்னிடம் ஊட்டிச் சென்ற அன்பையல்லவா நான் மற்றவரிடம் வாரி இறைக்கிறேன்? அள்ள அள்ளக் குறையாத அவ்வளவு அன்பு வெள்ளத்தை அவர் எப்படித் தான் தன்னுள் மறைத்து வைத்துக்கொண்டிருந்தாரோ?

தான் வாழ்வில் அனுபவித்த இன்னல்களையும், இடர்களையும் கற்பகம் அறிந்தால் எவ்வளவு மனம் புண்படுவாள்? இவ்வளவு இளகிய உள்ளம் படைத்த அவள் இவைகளைக் கனவிலும்கூட அறிந்து விடக்கூடாது. ஆனால் தான் இதைக் கனவிலும் கூட மறந்து விடக் கூடாது. மறந்தால் பரம்பரைச் செல்வர்களைப்போல தானும் அன்பு என்ற பண்பை இரக்கமின்றிக் கொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும். "இதை நினைத்துத் தான், கற்பகம்! நான் தூங்கப் போகும் போதும், காலையில் முழித்த உடனேயும் வெள்ளிக் கோப்பையில் இருக்கும் பிண்ணாக்கைப் பார்க்கிறேன். ஆனால் உன் மனதை நோக வைக்கும் முரட்டுத்தனம் என்னிடம் இல்லையே?" என்று எண்ணிக் கொண்டார் சிவநேசன்.


வெளிவருகிறது! வெளிவருகிறது!!

ஆர்டர்களுக்கு முந்துங்கள்!

பஞ்சாங்கங்களில் பெரும் பிரசித்தி பெற்று
தன்னிகரற்று விளங்குவதும்
112-பக்கங்கள் கொண்டதுமான

மன்மத வருஷத்திய

(நேத்திர-ஜீவ-நக்ஷத்திராதி, சாந்திர-சௌரமான) சர்வ முகூர்த்த

"ஆனந்தபோதினி"

சுத்த திருக்கணித பஞ்சாங்கம்

சென்ற 40 ஆண்டுகளாக நமது "ஆனந்தபோதினி" பஞ்சாங்கத்தைக் கணித்து வந்த திருக், சித்த, ஆரிய, சூரிய, சித்தாந்த, வாக்கிய கணிதப் பயிற்சியில் வல்ல நிபுணர்கள் பலரை உதவியாகக்கொண்டு, ஸ்ரீ S. வாஸன் அவர்களால் சுத்தமாக இப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது.

விலை அணா 8. தபால் செலவு 0—10—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

# ஏமாந்த கமலா

## மு. சேகர்

★

"முடிவாகச் சொல்லிவிடு கமலா, நீ கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாயா? வரும் மாப்பிள்ளைகளையெல்லாம் பிடிக்கவில்லை என்றால் முடிவுதான் என்ன?" என்று உண்மையிலேயே கோபமாகக் கேட்டாள் மீனாட்சி.

கமலா இதையெல்லாம் கவனிக்கவில்லை, தன் போக்காக குடையை எடுத்துக்கொண்டு காலில் ஷூவை அணிந்து அழகு பார்த்தபடியே புறப்பட்டு விட்டாள், பள்ளிக்கு. மீனாட்சிக்கு ஆத்திரம் கொதித்தது. ஆனால் அவளால் என்ன செய்ய முடியும் பாவம். 'அடங்காப் பிடாரி' என்று தலையில் அடித்துக்கொண்டு ஈசிச்சேரில் சாய்ந்து விட்டாள்.

மீனாட்சி ஒரு உபாத்தியாயினி. 30 வருடங்களாக வேலை செய்துவிட்டு ரிடையராகி ஒரு வருடமாகிறது. மீனாட்சியின் ஏகபுத்திரி தான் கமலா. அவளும் இண்டர் முடித்துவிட்டு உள்ளூரான திருச்சியிலேயே ஹைஸ்கூல் டீச்சராக வேலை செய்து கொண்டிருக்கிறாள். தன் ஒரே மகளுக்கு மணம் செய்து அவள் சந்தோஷமாக இருப்பதைப் பார்க்க வேண்டுமென்பது மீனாட்சியின் ஆசை! கமலாவின் உள்ளப் போக்கு அவளுக்குப் புரியவில்லை. காலம் கடந்து போவதால் மகளின் பருவ காலம் வீணாகிறதே என்ற கவலை தாய் உள்ளத்திற்கு. ஆனால் கமலாவின் உள்ளக் கனவு?

கமலாவின் மானசீகக் கணவன், அவளைப்போல இரண்டாவது படித்திருக்க வேண்டும்; டிப்டாப்பாக பாண்ட்டும் கோட்டும் அணிவதில் ஆசை யுள்ளவனாக இருக்கவேண்டும்; சாந்தம் பிடிக்காது—சற்று துடுக்குக்காரனாகவும் கிண்டல் பேர்வழியுமாக இருக்கவேண்டும். அவள் பார்க்கும் நாடகங்களிலும் படக் காட்சிகளிலும் வில்லன் பாத்திரத்தையே விருப்பத்தோடு ரசிப்பாள். தனக்கு வாய்க்கும் கணவனும் அப்படித் துடுக்குக் காரனாக இருக்க வேண்டுமென்பது அவள் ஆசை. இதெல்லாம் மீனாட்சிக்கு எப்படித் தெரியும்? படித்தவனாகவும் பண்புள்ளவனாகவும் பார்த்து தன் மகளுக்கு மணம் செய்துவைக்க எண்ணினாள். முயன்றாள்—முற்றும் தோல்வி யுற்றாள். மகளின் வாழ்வில் மகிழ்ச்சி பொங்க வேண்டும், உற்சாகம் கானமிசைக்க வேண்டும் என்று தாயுள்ளம் துடித்தது. கமலா மட்டும் வாழ்வை விரும்பாதவளா? இல்லை. வாழ வழி வகுத்தாள். ஆனால் இருவருடைய பாதையும் வெவ்வேறானது. உள்ளச் சிறப்பைத் தாயுள்ளம் விரும்பியது. புறக் காட்சியை ரசித்தாள் கமலா.

*　　*　　*

கமலா பள்ளியிலிருந்து வீடு திரும்பினாள். தன் தாய் யாருடனோ உரையாடிக் கொண்டிருப்பதைக் கேட்டு தலையில் அடித்துக் கொண்டாள். தன் திருமண விஷயமாக எந்த அப்பாவியோ அளந்து கொண்டிருக்கிறானென்று, கதவைப் பலமாக இடித்துத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

குடும்ப நண்பர் ராமநாதப் பிள்ளை பேசிக் கொண்டிருந்தார். பேச்சோடு பேச்சாக "வாம்மா" என்றார் கமலாவைப் பார்த்து.

"குட் ஈவினிங் தாத்தா!" முறுவலித்துக் கொண்டே வரவேற்றாள் கமலா.

"என்ன கமலா! நீ அம்மா பேச்சைக் கேட்பதே இல்லையாமே."

"அப்படி யென்றால் எனக்குக் காது செவிடு என்கிறீர்களா?"

"பார்த்தீர்களா அவள் பதிலை; கொஞ்சமாவது அடக்க மிருக்கிறதா?"

"அப்பாவைப் போல மகளும்; விளையாட்டுப் பேச்சில் விபரீத மிருப்பதாக நினைக்கக்கூடாது. இந்தக் காலத்துப் பிள்ளைகளின் கேலிப் பேச்சுக்கு எல்லை ஏது?"

"பையன் நோஸ்கட்!"

"உன்னைப் பத்து வயசுப் பாப்பான்னு நினைச்சுக்கிட்டீடாடி?"

"பின்னே என்ன 50 வயதுப் பாட்டினு நினைத்துக் கொள்வேன்!" இவர்களின் பேச்சை இடைமறித்து "கமலா! இந்தப் போட்டோவைப் பார்" என்று ஒரு புகைப் படத்தை நீட்டினார் ராமநாதப் பிள்ளை. அலட்சியமாக வாங்கிப் பார்த்தாள் கமலா.

"பெயர் சோமு. உன்னைப் போலவே இண்டர் முடித்திருக்கிறான். யோக்கியமானவன், வேலையிலும் கெட்டிக்காரன். அழகைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை—உருவப் படந்தான் உன் கையிலே இருக்கிறதே!" அடுக்கிக்கொண்டே இருந்தார் ராமநாதப் பிள்ளை. புகைப்படத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தாள் கமலா. மீனாட்சியின் உள்ளத்தில் மகிழ்ச்சி ரேகை படர்ந்தது. எந்தப் புகைப் படத்தையும் இத்தனை நேரம் பார்த்ததில்லை கமலா. இதுவே மீனாட்சியின் மகிழ்ச்சிக்குக் காரணம். ராமநாதப் பிள்ளை மீண்டும் தொடர்ந்து "ரொம்பச் சாந்தமான பையன்" என்றார்.

"சுத்தச் சோம்பேறியோ?"

"பைத்தியக்காரக் குழந்தையா இருக்கிறியே, அவன் வேலை கிளார்க்கு வேலையம்மா. எப்படிச் சோம்பேறியா இருக்க முடியும்?"

"துணிக்கஷ்டத்தைப் போக்க தன்னுடைய ஆடைகளைக் குறைத்துக் கொள்ளும் அபாரப் புத்திசாலியோ?"

"சாதாரண வேட்டியும் சட்டையும் அணிந்து கொண்டிருப்பதால் கேட்கிறாயா? உன்னுடைய படத்தைப் பார்த்துவிட்டு அவன் என்ன சொன்னான் தெரியுமா?"

"என்ன சொன்னார்?"

"கமலா சாதாரணமாக வீதி வழியே வர முடியாதுபோ லிருக்கிறது. இத்தனை தூரம் ஜவுளிக் கடைகாரர்களின் வரவேற்பு இருக்கும் என்று சொல்லிச் சிரித்தான்."

"இப்படி யெல்லாம் அவர் கேலியாகப் பேசுவாரா!"

கமலாவின் உள்ளத்தை ஓரளவு புரிந்து கொண்டார் ராமநாதப் பிள்ளை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது காரியக்காரனின் புத்திசாலித்தன மல்லவா! ஆரம்பித்துவிட்டார் அடுக்கடுக்காக அவன் குறும்புக்காரன் என்பது பற்றி. கமலாவின் முகமலர்ச்சியிலிருந்து திருமணத்திற்கு இணங்கி விடுவாள் என்ற துணிவுடன் "திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டியதுதானே, கமலா!" என்றார் ராமநாதப்பிள்ளை.

"நான் அவரைப் பார்க்கவேண்டாமா தாத்தா!" பேச்சில் குழைவு நெளிந்தோடியது.

"நாளையே போய்ப் பார்த்துவிட்டு வந்தால் போகிறது" உவகையால் உந்தப்பட்ட மீனாட்சி தன்னை யறியாமல் கூறினாள்.

"சரிதானா பாப்பா!"

"நீங்கள் என்னடான்னா பாப்பா என்கிறீர்கள், அம்மா என்னடான்னா பாட்டி என்கிறார்கள்!"

"நானும் தாத்தாவும் இப்படிச் சொல்லுகிறோம், வரப் போகிற மாப்பிள்ளை எப்படிச் சொல்லுவாரோ!"

"என்ன சொல்லுவான் மான்குட்டி என்பான்!" கமலாவின் ரோஜாக் கன்னங்களின் நாணச் சிவப்பு பளிச்சிட்டது. சிரித்துக் கொண்டே அருகிலிருந்த தன் அறைக்குள் ஓடினாள்.

* * *

வாழ்க்கை ஒப்பந்தம் வையகத்தில் ஒரு இன்பகரமான இணைப்பு விழா. அதை முன்னின்று நடத்தி முடிப்பவனுக்கு பெருமகிழ்வு இருக்கத்தானே செய்யும்! அந்தப் பூரிப்பில் திளைத்துப் போயிருந்தார் ராமநாதப் பிள்ளை. சோமு கமலா திருமணத்தை முடிப்பதற்குள் அப்பப்பா அவர் பட்ட கஷ்டம்! சொன்ன பொய்கள் எத்தனை ஆயிரம்! எத்தனை இக்கட்டுகளில் திக்குமுக்காடி திருமணத்தை முடித்திருக்கிறார் தெரியுமா? இன்று தானே மகிழ்ச்சி கலந்த நிம்மதியோடு பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்.

கட்டை கட்டையான சில புத்தகங்களை அள்ளிக் கொண்டு கமலா கூடத்தின் வழியாகத் தன் கணவனிருக்கும் அறைக்குத் தாவிக் கொண்டிருந்தாள்.

"பாப்பா!" ராமநாதப் பிள்ளை அழைத்தார்.

"அப்புறம் வருகிறேன் தாத்தா!" ஓடிவிட்டாள் கமலா. தாத்தாவுக்குத் தாங்க முடியாத ஆனந்தம். அடுக்களைக் குள்ளிருந்து மீனாட்சியின் சிரிப்பொலியும் கேட்டது.

* * *

"இவைகள் என்ன கமலா!"

"தெரியவில்லை? புக்ஸ்."

"என்ன புத்தகங்கள்?"

"சொல்லுங்களேன், பார்க்கலாம்."

"பெரியார்களுடைய உபதேசப் புத்தகங்களாக இருக்கும்."

"இவ்வுபதேசப் புத்தகங்கள் எதற்கு தம்பதிகளின் தனியறைக்கு வருகிறது?"

"அப்படியானால் இவைகள் என்ன புத்தகங்கள்?"

"ஜாலி வாழ்க்கையை அனுபவிக்க வழி காட்டிய புத்தகங்கள். பாரீஸ் சீமான்களும் சீமாட்டிகளும் தங்கள் வாழ்க்கையில் நிகழ்ந்தவைகளை அப்படியே எழுதியது."

"சரிதான்."

"என்ன சலிப்பாகச் சொல்கிறீர்கள்?"

"அவைகள் தம்பதிகளின் அன்னியோன்னியத் தொடர்பை துண்டிக்குமே தவிர வளப்படுத்தாது. மேலை நாட்டுப் பண்பாடு வேறு, நம் நாட்டுப் பண்பாடு வேறு. அவர்களின் வாழ்க்கை முறையை நாம் பின்பற்றக் கூடாது—முடியாது."

"நீங்கள் உட்கார்ந்திருப்பது சாதாரணச் சேர்தான். உபதேச அரங்கமல்ல."

"தெரிகிறது."

"இணைந்து போகும் மனப் போக்கு வேண்டும்."

"முதலில் நீ என்னைச் சிறிதளவாவது தெரிந்து கொண்டால் நல்லது."

"..............."

"கமலா".

".................."

"கமலா! நீ படித்தவள், தாம்பத்திய வாழ்க்கையில் இது போன்ற பிணக்குகள் நடப்பது சகஜம்."

"இந்த அட்டைப் பெட்டியில் என்ன இருக்கிறது தெரியுமா?"

"என்ன இருக்கிறது?"

"உங்களுக்காக ரெடிமேட் ஷாப்பில் வாங்கி வந்த புத்தாடைகள்."

"எங்கே பார்க்கலாம், அடே! பாண்ட், புஷ்சர்ட், கிலாக்சர்ட்,"

"ஆமாம், இந்த எல்லோக் கலர் பாண்ட் டும், லைட் புளூ கலர் புஷ்சர்ட்டும் உங்களுக்கு ரெம்ப மேச்சா இருக்குமில்லையா!"

"புஞ்சைக் காட்டுப் பக்கம் போயிருக் கிருயா, கமலா."

"உம்."

"அங்கே கட்டி வைத்திருக்கும் சோளக் காட்டுப் பொம்மை போலிருப்பேன், இவை களை அணிந்து கொண்டால்."

"அன்றே நினைத்தேன்."

"என்று? என்ன நினைத்தாய்?"

"உங்கள் போட்டோவைப் பார்த்த அன்றே இவர் 54க்கு லாயக்கற்றவர் என்று நினைத்தேன்."

"இல்லற வாழ்க்கையைப் பொறுத்த வரையில் 2000 ஆண்டுகளுக்குப்பின் சென்ரு லும் சிறந்ததுதான் கமலா."

"வாழ்க்கை வாழ்வதற்கே."

"இல்லை என்று சொல்ல வில்லையே."

"எல்லைக் கோடு போடுவது முட்டாள் தனம்."

"நிறுத்து கமலா, கணவனுடன் உரை யாடும் முறை தெரியவில்லை. வாழ்க்கையைப் பற்றி விவரிக்க வந்து விட்டாய். நிலைக்குத் தகுந்த நினைப்பு வேண்டும். வருமானத்திற் குத் தகுந்த வசதி! வசதிக்குத் தகுந்த வாழ்க்கை நிலை."

"என் மனக்கோட்டை, மணற் கோட்டை யாகச் சரிந்து விட்டதே."

"..............'

"எல்லாம் தாத்தா செய்த சதி."

"தாத்தா என் நண்பரல்ல, அவர் சதி செய்திருந்தால் அது எனக்குத்தான். வாழ் நாள் முழுதும் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வாழ வேண்டிய இளந்தம்பதிகள் நாம். பகட்டு வாழ்வில் இல்லற இன்பங்காண முடியுமா? யோசித்துப் பார்."

"யோசிக்க ஒன்றுமில்லை. பத்திரிகை களுக்கு கட்டுரை எழுதியனுப்புங்கள். பிரசு ரித்தாலும் பிரசுரிப்பார்கள் — வருகிறேன். இல்லை, போகிறேன்."

"கமலா."

"குட்பை."

* * *

'அன்பினால் ஊக்கப் பெறுவது அறிவி னால் நடத்தப் பெறுவது எதுவோ, அதுவே தான் வாழ்க்கை' என்பது ஒரு அறிஞரின் பொன் மொழி. ஆனால் படித்தவர்களான சோமு கமலா தம்பதிகள் ஒரு நாள் வாழ் விலேயே இரு துருவங்களாகி விட்டார்களே. அடடா, இவர்களின் திருமணம் நிறைவேற ராமநாதப் பிள்ளை பட்ட பாடென்ன? ஆனால் நொடிப் பொழுதில் பொடிப் பொடியாகி விட் டதே சோமு கமலா வாழ்க்கை ஒப்பந்தம்.

இப்பொழு தெல்லாம் ராமநாதப் பிள்ளை கமலாவின் வீட்டிற்கு வருவதில்லை. ஏன், மீனாட்சி மரணவஸ்தைப் படும்போதும் எட்டிப் பார்க்கவில்லை. மாண்ட பின்னும் வரவில்லை. சம்பிரதாயத்திற்குக்கூட.

பெற்றோர்களின் இறுதியாசை மக்களின் நல்வாழ்வில் இணைந்து கிடக்கிறது. மீனாட்சி யின் உள்ளத்தில் இந்த ஆசை அலைமோதி யிருக்காதா? துடிதுடித்துப் போய் விட்டாளே மகளுக்கு மணம் செய்து மகிழ, ஐயோ பாவம்! மகள் மணத்திற்குச் சம்மதித்தவுடன் ஏற்பட்ட மகிழ்ச்சி! மகளை மண மேடையில் காணும் பொழுது இரட்டிப்பாகி, 'அப்புறம் வருகிறேன் தாத்தா' என்று கணவனிருக்கும் அறைக்குள் ஓடும்பொழுது வானை முட்டி அடுத்த நிமிஷமே அழிந்து பட்டு, அவளின் உலக பந்தத்தையே ஒழித்து விட்டதே.

கமலா தனிக் காட்டு ராணி! தாயின் கண்டிப்பில்லை, தாத்தாவின் நச்சரிப்புச் சிபாசிசுமில்லை. நினைத்ததே நீதி! நடந்து கொள்வதே ஒழுக்கம்! பள்ளிக்குப் போவாள் —விரும்பியபோது வீட்டுக்கு வருவாள். இருந்தும் உள்ளம் வெதும்ப, வதனம் வாடவே வாழ்ந்தாள். தாயின் துக்கமா? இல்லை. ஆசைக் கனவின் ஏக்கம்! தனிக்காட்டு ராணி தனக்கேற்ற ராஜாவை வரிந்து கொள்ள முடியாதா? முயன்று கொண்டு தானிருக்கிருள் —முற்றுப் பெற்ருல் தானே. ஓராண்டு கால மும் ஓடிவிட்டது.

* * *

வண்டி புறப்பட்டு விட்டது. கதிரேசன் வேகமாக ஓடி வந்து ஏறிக் கொண்டான். அந்தக் காரேஜ் முழுதும் தன் பார்வையைச் செலுத்தினன். அவன் தொடர்ந்து வந்த நங்கையை விடுத்து, இரண்டொரு கிராமத்து ஜனங்களிருந்தார்கள். கதிரேசன் அசைய வில்லை. வண்ணமயிலாளையே வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன் மிஸ்டர் நின்னுக்கிட்டே இருக்கீங்க, சீட் தான் நிறைய இருக்கே?" நாரிமணியின் வாயிலிருந்து வந்த வார்த்தையில் சிறிது கடுமையும் கலந்திருந்தது.

கதிரேசன் இந்தத் தாக்குதலை எதிர்பார்க் கவே இல்லை. இருந்தாலும் இலகுவில் விட்டுடு வானு? "உங்கள் மாதிரிச் சொல்வதற்கு ஒருவரு மில்லையே என்றுதான் நின்று கொண்டிருந் தேன்" என்று கூறிக்கொண்டே எதிர் சீட்டில் அமர்ந்தான்.

"காலேஜில் படிக்கிறவுங்களே இப்படித் தான்."

"எப்படி?"

"உலகமே நம் கைக்குள்தானென்று நினைத்துக் கொள்கிறார்கள்."

"இல்லை, உலகத்தை நாம் தெரிந்து கொண்டோமென்று நினைக்கிறார்கள்—அது உண்மையுங்கூட!" கதிரேசனுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது; அவள்தான் பதில் பேசவில்லையே! பத்திரிகை படிப்பதுபோல முகத்தை மூடிக்கொண்டு பேசாமல் இருந்து விட்டாள். கதிரேசனும் சிகரெட் புகைக்கத் தொடங்கினான். மௌனம் நீடித்தது. இது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை கதிரேசனுக்கு. ஒரு கணைப்புக் கணைத்தான். அவள் முகத்திற்கு நேராகவிருந்த பத்திரிகையை விலக்கினாள். அந்தச் சமயத்தில் கதிரேசன் ஊதிய புகைப் படலம், மதியைக் கார்மேகம் மறைப்பதுபோல அவள் நிலா வதனத்தை நெருங்கி நின்றது. காற்று கார்முகிலைக் கலைத்து ஓட்டுவதுபோல, மங்கை மலர்கரமசைத்துப் புகையைப் போக்கினாள்.

"புகை பிடிக்காதா?"

"இல்லை, பரவாயில்லை."

"என்ன பரவாயில்லை? ஓகோ! உண்மையிலே உங்களுக்குப் பிடிக்காது, எனக்காகப் பிடிக்கும். அப்படித்தானே!"

"ஏன் மிஸ்டர்......என்ன சொன்னீங்க?"

"பிடிக்குமா பிடிக்காதா என்று கேட்டேன்."

"எனக்குப் பிடிக்குமா பிடிக்காதா என்பதில் உங்களுக்கேன் இவ்வளவு சிரத்தை?"

"பிடிக்கவில்லை என்றால் புகையை வேறு பக்கமாக விடலாம்."

"அப்படியே செய்தாலும் நல்லதுதான்." நெருங்கிப் பழகியவர்கள்போல, இருவர்களும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். வண்டி பல ஸ்டேஷன்களில் நின்று நின்று ஓடிக் கொண்டிருந்தது. இவர்களிருந்த காரேஜில் பல பிரயாணிகள் ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் பேச்சை அவர்களால் தடைப்படுத்த முடியுமா?

"மிஸ்டர், நீங்க எந்த ஊர்?"

"திருச்சி"

"திருச்சியா?"

"ஏன்?"

"இல்லை, கேட்டேன்."

"இல்லை கேட்டீர்களா. சரி, நீங்க எந்த ஊர்?"

"நானும் திருச்சிதான்."

"திருச்சியா! அடே ரொம்ப நெருங்கிட்டோமே. இன்னொரு கேள்விக்கும் கோபித்துக் கொள்ளாமல் பதில் சொல்றீங்களா?!'

"என்ன?"

"உங்க நேம் என்னன்னு சொன்னா..."

"கமலம்"

"கமலம்! என் பெயர் கதிரேசன். கதிரேசன்—கமலம். சூரியன்—தாமரை. அம்மாடி எத்தனை பொருத்தம்?" துள்ளிக் குதித்தான் கதிரேசன். கமலா மகிழ்ச்சி வயப்பட்டு என்னமோ போலப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிகரெட் புகைத்துக்கொண்டு, உலாத்திக் கொண்டிருந்த கதிரேசன், அலுத்து விட்டது போல, அவளிருந்த சீட்டில் அமர்ந்தான். கமலாவின் இதயத்தில் சிறு ஷாக் அடித்தது.

"கமலா......"

"உங்க அப்பா அம்மா......"

"அடே, அவுங்க ரொம்ப நல்லவுங்களாச்சே." பிள்ளையின் போக்குத் தெரிந்து ஒரு வருஷத்திற்கு முந்தியே போய்ட்டாங்களே!"

"வேடிக்கையா இருக்கு உங்க பேச்சு!"

"நிஜமாகவா? அப்படி இருக்க வேண்டுமென்பதுதானே என் ஆசை. சரி, உங்க அப்பா அம்மா இருக்காங்களா?"

"உங்க மாதிரிதான் நானும்."

"என் மாதிரியா! அடே பொருத்தம் சுற்றி வளையுதே!"

"ஏன் மிஸ்டர்! பொருத்தம் பொருத்தம் என்கிறீர்களே எந்த வகையில்?"

"ஒரு வகையிலா, பேச்சுப் பொருத்தம், நிலைப் பொருத்தம், நினைப்புப் பொருத்தம் எல்லாமுமே பொருத்தம்!"

"பிற்கால நிலை குறித்து எந்தத் திட்டத்தோடு இருக்கீங்க?"

"கேட்கவேண்டிய கேள்விதான், என் அப்பா இன்சூரன்ஸ் செய்து வைத்திருந்த ஐயாயிரம்தான் நம் இன்ப வாழ்க்கைக்கு உயிர்."

"பின்னால்......?"

"கமலா, மனிதன் அனுபவிக்கத்தான் பிறந்தான்—மூட்டை கட்டி வைப்பதற்கல்ல.

"பொன் மொழிகளைத்தான்!"

"கண்ணே! கமலா......"

"உம்"

"ஒன்றுமில்லை, வந்து......"

"என்ன?"

"ஐயோ! திருச்சி வந்துவிட்டதே."

* * *

நாளொரு ஜாலியும் பொழுது ஒரு நாகரீகமாக வாழ்ந்து வந்தார்கள், புகை வண்டியிலே காதல் கொண்டு, அன்றிரவே கந்தர்வ மணம் முடித்துக்கொண்ட கதிரேசன் கமலா தம்பதிகள். கமலா அகமகிழ்ச்சியால் 20 பௌண்டு இடை கூடி இருந்தாள். பள்ளிக்குச் செல்வது கிடையாது; அன்புக் காதலன் எண்ணத்திற்கு விரோதமாக நடப்பாளா? எண்ணம்போல வாழ்வு கிடைத்ததெனக் களிப்பெய்தினாள். குணச் சித்திரனாகவும், வில்லனாகவும், வேடிக்

கைக்காரனுகவும் கமலாவைக் களிப்புக்கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தான் கதிரேசன். இன்பப் போதையில் உலகையே மறந்திருந் தாள் கமலா. கதிரேசன் இல்லத்தில் இல்லாத நேரம் அரிதாகத்தானிருக்கும். அந்தச் சிறு நேரத்தையும் அவன் எண்ணத்திலேயே போக்குவாள். அவனுடைய துடுக்குச் செயல் அத்தனை தூரம் அவளைக் கவர்ந்திருந்தது.

ஈசிச்சேரில் சாய்ந்திருந்த கமலா, ஒரு நாள் கதிரேசன் நடத்திய கேலிக்கூத்து நினை வுக்கு வரவே சிரித்து விட்டாள். அன்று கதிரேசன் எங்கேயோ போய்விட்டு வீட்டுக்கு வந்தான். கமலா "அத்தான்!" என்று ஓடினுள். கதிரேசன் முகத்தைக் கொடூரமாக்கிக்கொண்டு விலகிச் சென்றான். கமலா மீண்டும் "அத் தான்!" என்று ஆசை ததும்ப அழைத்துக் கொண்டே அவனது திரண்ட தோள்களைத் தீண்டினுள். அவன் வெறுப்போடு அவளது கரங்களை விலக்கிவிட்டு "சண்டாளி! சாகசக் காரி!! இந்தக் கபடக்கூத்து எத்தனை நாளைக்கு வெற்றி யளிக்கும் என்று நினைத்தாய்? அத்தான் அத்தான் என்று என்னைச் செத்தவ னுக்கி விட்டு, எத்தனை காவாலிகளோடு கை குலுக்குகிருய்?" என்றான் இடி முழக்கம் போல.

"ஐயோ! இது அக்கிரமம், மகா பாபம்."

"பாபமல்லடி, உன்னுடைய விபரீத விளை யாட்டின் பட்டியல்! கமலா நேற்று......அடி கள்ளி உண்மையைச் சொல்லிவிடு. அந்த நள்ளிரவில் எங்கே சென்றிருந்தாய்?

"இது அபாண்டம், எந்தக் காலியோ கதை கட்டி இருக்கிறான். என்னைக் கொன்று விடுங்கள் அத்தான்."

"கொல்லத்தான் போகிறேன், உன் போன்ற சதிகாரிகள் நாட்டிலே நடமாடக் கூடாது. ஒழியத்தான் வேண்டும்." ஆவேச மாக அவள் கழுத்தைப் பிடித்து நெரித்தான்; ஆனால் போலியாக. அவள் அலறவில்லை, துள்ளவில்லை—துயரப்படவில்லை. கதிரேசன் பலமாகச் சிரித்து விட்டான். கமலா மிரட்சி யோடு விழித்துப் பார்த்தாள். "பைத்தியக் காரி! உண்மையிலேயே பயந்து விட்டாயே." என்று கூறிக்கொண்டே வாரியணைத்தான்.

இப்படிப் பலப்பல கதிரேசன் நடத்திய கேலிக் கூத்துகள். எண்ணம்போல யாவும் நடக்கும்பொழுது மனிதன் சிந்தனை திறனற் றிருப்பது இயல்பல்லவா? கமலா மட்டும் இதற்கு விதிவிலக்கா? ஐயகோ! கமலாவின் விசித்திர நாகரீக மோகம் அவளை நட்டாற்றில் விட்டுவிட்டதே.

கமலா அன்று குமட்டிக் குமட்டி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள். இதைக் கண்ட கதிரேசன் ஜாலியாகக் கபட நாடகமாட ஆயத்தமானன்.

"என்ன கமலா, என்ன செய்கிறது?"

"ஒன்றுமில்லை, வாந்தி"

"ஒன்றுமில்லாத வாந்தியா? அளவுக்கு மிஞ்சினல் அமிழ்தமும் நஞ்சு என்று சொல்கி றார்களல்லவா. ஈவினிங் டிபனை ஒரு பார்வை பார்த்து விட்டாய் போலிருக்கிறது."

"போங்கள் அத்தான், எப்போது பார்த்தா லும் இந்தக் குறும்புதான்."

"குறும்பு செய்தால்தானே நீ கரும்பாக இனிக்கிருய்?" வார்த்தை முற்றுப் பெறவில்லை, அவள் அவனது அணைப்பிலே துவண்டாள்.

"ஐயோ! விடுங்கள், சார்! இனிமேல் இப்படி இறுக்கமாகப் பிடிக்கக்கூடாது, தெரியுமா?"

"ஏன், தங்கமே!"

"இப்பொழுது நான் ஒருவளல்ல, இருவ ராக இருக்கிறேன்."

"எந்தக் கள்வனுவது உன் உள்ளத்தில் உட்கார்ந்து கொண்டானு?"

"கள்ளனுமில்லை, திருடனுமில்லை, உங்கள் மறு உருவந்தான் வளர்கிறது."

"ஆ!"

"ஆச்சரியமாக இருக்கிறதா?"

"ஆச்சரியமாவது மண்ணுங்கட்டியாவது?"

"இன்பமான செய்தி சொல்லுகிறேன், விசனப் படுகிறீர்களே அத்தான்!"

"விசனமா? விஷத்தைக் குடிப்பது போலி ருக்கிறது."

"அத்தான் நமது அன்பின் திரு உருவம் வளர்வதைக் கண்டு ஏன் ஆத்திரப் படுகிறீர் கள்?"

"அன்பின் திரு உருவம் வளரவில்லை, துன்பம் தொடரும் படலம் ஆரம்பமாகிறது— சைத்தான்!

"சைத்தானு?"

"கமலா, தயாராக இரு. நாளைக் காலையில் ஆஸ்பத்திரிக்குப் போய் சைத்தானுக்கு ஒரு முழுக்குப் போட்டுவிட்டு வந்துவிடுவோம்."

"ஆ! இது மகாப் பாபம், இதற்கு நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன்."

"நானும் இந்தச் சைத்தான் வளருவதற்கு சம்மதிக்க மாட்டேன். கமலா! முடிவாகச் சொல்லிவிடு. நான் வேண்டுமா? இல்லை; இந்தச் சைத்தான் வேண்டுமா?"

"அத்தான்!"

"யார் வேண்டும்?"

"நம் பெயர் சொல்ல ஒரு குழந்தை வேண்டாமா?"

"ஆமாம், விபச்சாரியின் குழந்தை என்று பெயர் எடுத்துக்கொடுக்க ஒரு சைத்தான் வேண்டுந்தானே!"

"விபச்சாரியா......!?"

"நானே கேட்கிறேன், உன் கணவன் யார்?"

# தமிழர் மணமும் தாலியும்

தமிழ்ப்பேராசிரியர் வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார்

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

இனி முதற் செய்யுளிலே (86ம் செய்யுள்) "வதுவை நன் மணம்" என்ற தொடர் காணப்பெறுகின்றது. இச் சொல் பெண் என்ற பொருளிலும், மணப் பெண் என்ற பொருளிலும், புது மணம் புணர்ந்தோர்—ஆணும் பெண்ணும் என்ற பொருளிலும் வழங்கி வருகின்றன.

எனவே வதுவை ஒருத்தியை நன் மணம் செய்து கொள்ளுதல் என்பது அத்தொடரின் பொருளாகும். அல்லது வதுவை ஒருத்தியினது நன் மணம் எனவும் பொருள்படும். எனவே வட மொழியின் தொடர்புடைய சொற்களால் ஆகிய தொடர் கொண்டு கூறும் மணங்கள் எங்ஙனம் தமிழர் மணமாகும் என்பதுதான் எமது ஐயம். 136ம் செய்யுளில் தலைவி தூய உடைகளும் அணிகளும் அணிந்தாள் என்ற மட்டில் கூறப்பெற்றுள்ளது. மண மகன் தூய புத்தாடைகளும் அணிகளும் அணிந்ததாகக் கூறவில்லையே. அங்ஙனமிருக்க, இப்போதைய மணத்தில் தமிழ் மகன் தூய புத்தாடைகளையும் அணிகளையும் அணிந்து கொள்ளுதல் தமிழ் மரபு (சங்க கால மரபு) ஆகாதன்றோ?

இன்னோரன்ன செய்திகளை உடைய இச் செய்யுட்கள் இரண்டும் தமிழருடைய மணத்தைக் கூறுகின்றன என்பது எங்ஙனம் பொருந்தும்? வட நாட்டிலிருந்து வந்த வேளிர் குடிகள் இங்கிருந்தவர்களோடு கலந்து பழந் தமிழர் கூட்டத்தைக் கதம்ப மாக்குவதற்கு முன் அவரது வழக்கிலிருந்த தாலி கட்டும் கற்பு வழக்கம், கதம்பமானவர்களின் களவு மணத்தை வற்புறுத்தும் இப்பாடல்களில் தாலி எப்படி வரும்? மேலும் தாலி கட்டுதல் தலைமகன் செய்தி, பெண்ணை எனக்குக் கொடுத்தார்கள். யான் தாலியும் கட்டினேன் என்று கூற வேண்டிய சந்தர்ப்பமும் இங்கு உண்டாக இல்லை. மேலும் இச்செய்யுட்களில் ஒன்று வாயில் மறுத்த தோழிக்குத் தலைவன் சொல்லியதாகவும், மற்றொன்று உணர்ப்பு வயின் வாராவூடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியதாகவும் வந்துள்ளன. இந்த இடத்தில் பெண்ணுக்கு வேண்டியவர்கள் பெண்ணைத் தனக்குக் கொடுத்த செய்தியைக் கூறுகின்ற இடத்தில், தான் தாலி கட்டிய செய்தியைக் கூறுவதற்கு இடமில்லையே. நிற்கத் தலைவனை நோக்கி நீ மணந்தனையோ என்று அவனைக் கேட்கும் இடம் (மண மறுத்தல்) நேரிட்டிருந்தால் அவன் திடுக்கிட்டு அந்தோ! யான் தாலி கட்டி மணந்துள்ளேனே என்று கூறுவான். அத்தகைய இடம் ஒன்றும் நேராமையாலும், மணம் மறுக்கப்படாமல் வாயில் மறுக்கப்பட்ட இடத்தில் அவன் தாலியைப் பற்றிக் கூற வேண்டிய அவசியமில்லை. அவசிய மிருந்தால் கூறப்பெற்றிருக்கும்.

அருந்ததி காட்டலாகிய ஒன்றை அருந்ததி என்ற வட மொழியாலேயே அதை வடவர் வழக்கு என்று ஒதுக்கும் தமிழர் "திங்கட் சகடம் வேண்டிய" என்ற தொடரிலுள்ள சகடம் என்ற வட சொல்லைக் கொண்டு இது ஆரியருடைய வழக் கென்று கூறுதல் கூடாதா? மேலும் அருந்ததியை உணர்த்தச் "சாலி" என்ற ஒரு தமிழ்ச் சொல்லாகிலும் உண்டு. உரோகிணியை உணர்த்த அதுதானுமில்லை. திங்கள் ரோகிணியைக் கூடுகின்ற நாளைத் தமிழன் கொள்ளலாகுமா?

நிற்க, புறம் 224ம் பாடலில் வரும் "இறந்தோன் தானே அளித்திவ்வுலகம்.........மெல்லியன் மகளிரும் இழை களைந்தனரே" என்ற தொடரைக் கொண்டு தாலி கூறவில்லை என்றும் சிலர் கூறுகின்றார். இத்தொடருக்கு உரையாசிரியர்—கரிகாலன் மனைவியர், "அருங்கல அணி முதலவாகிய அணிகள்" என்று எழுதியிருக்கின்றார். அத்தொடரைக் கூர்ந்து நோக்கினால் அருங்கல அணி முதற்கொண்டு மற்றைய அணிகள் என்று பொருள் படுகின்றதன்றோ? அருங்கலம் என்பதே இழை யணியாகிய தாலியும் சரடுமாகும். அது முதலாக உள்ள மற்றைய அணிகள் என்னும் பொருள்

---

"அத்தான்!"

"நான்தான் உன் புருஷன் என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உண்மையும் அதுதானே?"

"ஆரம்பத்திலிருந்தே சதிச் செயலா? கொஞ்சுங்கள், கொல்லுங்கள்......கைவிடாதீர்கள் அத்தான். அத்தான்! அத்தான்!!"

கண்களைத் திரையிட்டு மறைத்திருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பார்த்தாள். கதிரேசனைக் காணவில்லை. கமலா மூர்ச்சித்து விழுந்தாள், யாருமில்லை. தண்ணீர் தெளித்து மூர்ச்சை தெளிவிக்க. கமலா நினைத்தாள் கதிரவனைப்போல கதிரேசன் தோன்றினன் அன்று. ஆனால் கதிரவனைப்போல மறைந்த கதிரேசன் மீண்டும் தோன்றவே இல்லை.

படவே அங்ஙனம் உரையாசிரியர் தொடரை அமைத்துக் கூறினர்." நக்கீரர் முதலாய புலவர்கள் என்றால், நக்கீரரும் மற்றைய புலவர்களும் என்றல்லவோ பொருள்படும். எனவே அப்பொருளை ஒழித்து வேறு வகையாகப் பொருள் கொள்ளுதல் பொருந்தாது. எனவே இழை யணியாகிய அருங்கல அணியும் மற்றைய அணிகளும் என்பதே அத்தொடரின் பொருளாகும்.

இனி "ஈகையரிய விழைமணி மகளிர்" என்ற புறம் 127ம் செய்யுள் அடிகளுக்கு, கொடுத்தற்கரிய மாங்கலிய சூத்திரம் என்று பொருள் கூறியவர், புறம் 224ம் செய்யுள் "மெல்லியன் மகளிரு மிழை களைந்தனரே" என்ற தொடருக்கு மங்கலிய சூத்திரம் என்று பொருள் கூறாமல் அருங்கலவணி முதலவாகிய அணிகளை யொழித்தார் என்று கூறியதேன் என்று சிலர் ஐயுறுகின்றனர். இங்கும் மங்கலிய சூத்திரம் என்ற பொருளை அருங்கலவணி என்ற தொடரால் கூறுகின்றார். அங்ஙனம் கூறியதற்கும் இன்றியமையாத காரணமுண்டு. புறம் 127ம் செய்யுள் ஏணிச்சேரி முடமோசியாரால் ஆய் அண்டிரனைக் கடைநிலை(கடைநிலை) துறையில், ஆயுடைய கோயில், தாலியாகிய மாங்கல்யம், தவிர வேறு யாதொரு அணிகலன்களின்றி இருந்த மகளிரோடு பொலிவழிந் திருந்தமையைக் கூறுகின்றார். அதாவது ஆய் தன்னிடமிருந்த கரிகள் முதலியவற்றையும், தாலி தவிர மற்றைய அணிகலன்களையும் வறியவர்களுக்கும் மற்றையோர்களுக்கும் கொடுத்து விட்டமையால் பொருளில்லாமல் பொலி விழந்திருப்பினும் முரசு கெழு செல்வர் நகர் பொலிவுடனிருந்தாலும் ஆயின் அரண்மனையை ஒவ்வாது என்று அரண்மனைப் பொலிவின்மையைக் கூறுமுகமாக ஆயினுடைய கொடைச் சிறப்பைக் கூறுகின்றார். இங்கு ஒன்றும் அமங்கலச் செய்தி கூறவில்லை. கருங்குமளவாதனாரால் பாடப்பெற்ற புறம் 224ம் செய்யுளோ—கரிகாலன் இறந்தமை குறித்துப் பாடிய கையறு நிலையாகும்.—இங்குக் கரிகாலன் இறந்தான். அவனது மனைவியர் மங்கலவணி (மங்கல நாண்) முதற் கொண்டு, அடி முதல் முடிவரை அணிந்திருந்த அணிகளை ஒழித்தார் என்பதே ஆசிரியரின் கருத்து என்பது கூர்ந்து காணுவோர்க்குப் புலனாகாமற் போகாது.

ஒரு பெண்ணை என்றும் பிரியாமலிருந்து காப்பேன் இது வாய்மை என்று கூறி மணக்கின்றான். அங்ஙனம் மணத்தற்கு அறிகுறியாக இந்த அணியை அவரவர்களுடைய நிலைகளுக்கேற்றவாறு பொன்னணியிலோ, நூலிலோ கோத்துக் கட்டுவது வழக்கம். மேலும் ஓலையையும், மஞ்சள் கிழங்கையும் நூலிற் பிணித்தும் கட்டுவதுமுண்டு. இது உலக வழக்காற்றில் இன்றும் காணப்பெறுவதாகும். மேலும் மங்கல நாணானது மணமானவருக்கும், மணமாகாதவருக்கும் வேறுபாட்டைக் காட்டியும் வருகிறது, வந்தது. இக்காலத்திலும் ஒருத்தி எவ்வளவு அணிகளை அணிந்திருந்தாலும் தாலி என்ற ஒன்று இல்லையாயின் அவளது அழகு விளங்காமையை அனைவரும் கண்கூடாகக் காணும் செய்தி.

இனிச் சங்க நூற்களில் தாலி என்ற மங்கலியத்தை உணர்த்த வரவில்லை. அதனால் தாலி தமிழனுக்கு இல்லை என்று கூறுவது பொருந்துமா? தேங்காயானது மங்கலம், அமங்கலம் ஆகிய இரு சடங்குகளிலும், உணவு வகையிலும், மருத்துவ வகையிலும் மிகுதியும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இந்தக் காய் தெரியாதவர்கள் இருக்க முடியாது. இந்தக் காயைத் தமிழரது களவு மணத்தைப் பெரிதும் கூறுகின்ற தொல்காப்பியம் கூறுகின்றதா? கூறவில்லையே! இதனை ஏன் தமிழருடையது என்று கொள்ள வேண்டும். மேலும் இக்காய் முதன் முதல் "தாழை" (புறம் 17,27) என வழங்கப் பெற்றுப் பின்னர் "தெங்கு" (புறம் 29, 61) என்று இன்றும் வழங்கி வந்து கொண்டிருக்கின்றது. எனவே, தாழை என்று வழங்கிய சொல்லுக்குத் தெங்கு என்ற சொல்லை ஆண்டு தாழை என்ற சொல்லை விட்டுவிட்டார்கள்; ஆயினும் தாழை என்ற சொல் இப்பொழுது பூவையுடைய ஒரு மடற் செடி வகையை உணர்த்தி வருகின்றது என்பது "மடல் பெரிதும் தாழை" என்று தொடங்கும் செய்யுளாலும், உலக வழக்காலும் தெரியக் கிடக்கின்றது. நிற்க, இதுபோது முன்னிலைப் பன்மைச் சொல்லைக் குறிக்கும் நீர் என்ற சொல் சங்க இலக்கியத்திலுண்டா? இல்லை. ஆனால் சங்கப் பாடல்களில் நீர் என்ற சொல் உண்டு. அச்சொல் நீரைக் குறித்து நிற்கின்றதே ஒழிய முன்னிலைப் பன்மைப் பொருளைக் குறித்து நிற்கவில்லை. எனவே சங்க நூற்கள் கூறாத சொற்களை பிற்கால நூல் கூறுவதையும், பிற்காலத்து நூல் கூறாத சொற்களைச் சங்க நூற்கள் கூறுவதையும் கொண்டும் பழக்க வழக்கங்களைக் கூறுதல் அத்துணைச் சிறந்த ஆராய்ச்சியன்று.

இது நிற்க, கண்ணகியை கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்தவள் என்று பெரும் புலவர்களும், சரித்திர ஆசிரியர்களும் கூறி வருகின்றார்கள். கண்ணகியின் செய்தியைக் குறித்துச் சிலப்பதிகாரம் தவிர, சங்கப் பாடல்கள் ஒன்றேனும் கூறவில்லையே. சந்தர்ப்பம் நேராமையால் புலவர்கள் கூறவில்லை என்பார்கள். வையாவிக் கோப்பெரும் பேகன் என்பவனது மனைவியின் பெயரும் கண்ணகி என்று கூறுகின்றார்கள். கோவலன் கண்ணகியைத் துறந்து பரத்தையோடு வாழ்ந்து

வந்தது போலவே பேகனும் தன் மனைவி கண்ணகியை விடுத்துப் பரத்தை வீட்டில் வாழ்ந்தான். அங்ஙனம் வாழாது, அவனது மனைவி கண்ணகியை ஏற்று வாழுமாறு பரணர், கபிலர், பெருங்குன்றூர் கிழார், அரிசில் கிழார் நால்வரும் ஏழு பாடல்களால் பேகனை வேண்டியிருக்கின்றார்கள் (புறம் 141—147) இது நல்ல இடமில்லையா?—"அந்தோ! கண்ணகி என்ற பெயருடைய எல்லோரும் இப்படித்தான் தங்கள் கணவன்மார்களால் புறக்கணிக்கப்படுகின்றார்கள் போலும்" என்றாகிலும் கூறியிருக்கலாமே. அங்ஙனம் ஒன்றும்கூறிக் குறிக்கவில்லையே! மேலும், மேலே குறித்த புலவர்களுள் ஒருவராகிய பரணர் என்பவர் கண்ணகிக்குக் கோயிலெடுத்த செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்து ஐந்தாம் பகுதியில் பத்துப் பாடல்களால் பாடியிருக்கின்றார்; அவராகிலும் தம் பத்துப் பாடல்களில் எங்கேனும் குறித்துள்ளாரா? இல்லையே. அங்ஙனம் கண்ணகியின் செய்தியைச் சங்கப் பாடல்கள் ஒன்றும் குறிக்காதிருக்க அக்கதையை உண்மைக் கதை யென்று கொள்ளவில்லையா? மேலும் கண்ணகியின் மணத்தை தமிழ் மணம் என்கின்றார்களே. அவள் எப்படித் தமிழ்ப் பெண்ணாவாள்? கோவலன் சைனன் அன்றோ? சைனர்களுடைய வழக்கில் அவ்வழக்கம் இல்லாமலும் இருந்திருக்கும்.— அதைக் கொண்டு வாதிப்பதில் பயன் இல்லை. எங்ஙனமாயினும் சிலப்பதிகார "மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்" என்ற தொடரின் பொருளையும் ஆராய்வோம். அடியார்க்கு நல்லார் எழுதிய உரையெல்லாம் குற்றமற்ற உரையென்று கூறுவதற்கில்லை. அதிலும் வழுக்களுண்டு என்பதற்கு ஒன்று காட்ட விரும்புகின்றேன். கண்ணகி, "மதுரை மூதூர் யாதெனவினவ,ஆறைங்காதம் மகனுட்டும்பர்" [காடு காண் காதை வரி 41–42] என்ற தொடருக்கு, முப்பது என்னும் பொருளை மறைத்துக் காதம் ஆறு, காதம் ஐந்தென்றுள் போலிருத்தற்கு ஆறைங் காதம் என்றாள் என்று பொருள் கொண்டார் அடியார்க்கு நல்லார். உறையூரி லிருந்து மதுரை முப்பது காதமா? அதாவது 300 மைலா இருக்கிறது? 100 மைலுக்கு அதிகமிராது உறையூருக்கும் மதுரைக்கும். இவ்வுரையை நோக்கினல் அவரும் சில இடங்களில் இடர்ப்படுகின்றார் என்று கொள்ள இடமுண்டு.

சிலப்பதிகாரத்துப் பதிகத்தே வருகின்ற "ஆரஞருற்ற வீர பத்தினி" [வரி 42] என்ற தொடரினுள்ள ஆரஞர் என்ற தொடருக்குப் பெரிய வருத்தம் ஆவது கணவனை இழத்தல் "மக்களிழந்த இடும்பையினும் மனையாளிழந்த விடும்பையினும், மிக்க விடும்பை வேல் வேந்தே விதவை யிடும்பை யென விளம்பித் தக்கவதனால் என் கழுத்திற் றாலி நீ தந்தருளென்று, தொக்கமணி நீண் முடியானைத் தொழுது பின்னுமிவை சொல்லும்" என்றதொரு செய்யுளை எடுத்துக் காட்டுகின்றார். ஆதலால் இவருக்கும் தாலி விதவை என்ற இவைகளும் உடன்பாடே என்பது புலனாகாமற் போகாது.

நிற்கச் சிலப்பதிகாரத்தே "மறுவில் மங்கல அணியே அன்றியும் பிறிதணி யணியப் பெற்றதை யெவன் கொல்" (மனையறம்—வரி —63–64) என்ற தொடரிலுள்ள மங்கல வணி என்ற தொடருக்கு, மாங்கலியம் என்பாருமுளர் என்று அடியார்க்கு நல்லார் குறித்துள்ளார். எனவே, சிலப்பதிகாரத் தொடர்களுக்குப் பல உரைகாரர்களால் பல வகையாக உரைகள் கூறப்பெற்றுள்ளன என்பதும் விளங்காமற் போகாது. இனி நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் "மங்கல அணியிற் பிறிதணி யணியாள்" (அந்தி மாலை வரி 50) என்ற தொடருக்கு "மங்கல அணியின் வேறாக அணியை விரும்பாளாய்" என்று பொருள் கூறி மீண்டும், "மங்கல அணி என்ற தொடருக்கு, இயற்கை அழகுமாம்" என்று கூறுகின்றார். எனவே மங்கல அணியென்ற தொடருக்கு மாங்கலியம் என்பதே அவர் கொண்ட பொருள் என்பதை விளக்கவே தான் "இயற்கை அழகுமாம்" என்று அப்பொருளை உம்மையாற் றழுவினர் என்று கூறியுள்ளதைக் கூர்ந்து நோக்குக.

இனி, அணி என்ற சொல்லுக்கு உரையாக "நகை" என்ற ஒரு சொல்லைத் தமிழாசிரியர், வெளியீட்டாசிரியர் முதலிய அனைவரும் ஆண்டு வருகிறார்கள். நகை என்ற சொல் சங்க இலக்கியத்தில் அணியை உணர்த்த வருகின்றதா? இல்லையே. பனிரெண்டாம் நூற்றாண்டிலிருந்த நன்னூலாசிரியருக்கு முற்பட்ட பிங்கலந்தையர் "பல், சிரிப்பு, இன்பம், ஒளி என்ற பொருளில்தான் "நகை" என்ற சொல் வரும் என்னும் பொருள்பட "எயிறு சிரிப்பு மின்பமு மொழி நகையென் கிளவி நவிலப் பெறுமே" என்று சூத்திரித்துள்ளார். அவருக்குப் பிற்பட்டே இச்சொல் நகை என்ற பொருளில் வழங்கி வந்திருக்க வேண்டும். மேலும் பெரும் புலவர்களால் ஆளப்பெற்றால் சாமானிய மக்களும், மற்றையோரும் அணியென்ற சொல்லையே மறந்து நகை என்ற சொல்லையே ஆளுவார்கள். எனவே, அணி வழக்காற்றிலழிந்து நகையாக மாறி வழங்கும். அதுபோலவே சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்து தமிழகத்தே இருந்த நாகரீகத்தே தாலி இருந்து வந்திருக்கிறது. அது முதலில் தாலி ஒன்றையே உணர்த்தி வந்து நாளடைவில் கழுத்தில் தொங்குகின்ற ஐம்படைத் தாலி முதலிய அனைத்துக்கும் பெயராக வழங்கலாயிற்று. கொண்டவன் ஒரு

வன் தான் ஒருத்தியைக் கொண்டதற்கு அடையாளமாகக் கொள்ளப்பட்டவளுடைய கழுத்தில் அணிகின்ற ஒரு மங்கல அணி, மங்கல நாண் என்று தாலியை வழங்கினார்கள். எனவே தாலி என்ற சொல் மங்கல அணியை உணர்த்தும் வழக்காற்றில் குறைந்து "மங்கல அணி" என்ற வழக்காறே நிலவியது. மங்கல அணி எப்பொழுது, எப்படி நுழைந்திருக்கும் என்று ஆராய்வோமானால் ஒன்று புலப்படும். இப்பொழுது யாதாம் ஒன்றுக்குத் தமிழ்ச் சொல்லிருந்தும் அதனை ஆங்கிலத்தாற் கூறினால் மதிப்புண்டு என்று கருதிக் கூறுவது போன்று வட மொழி தமிழகத்தே பரவி உயர்ந்து விளங்கிய காலத்து "மாங்கல்யம்" என்ற வட தொடரை, வட மொழியும் தமிழ் மொழியுமாகக் கலந்த "மங்கல அணி" என்ற தொடரால் வழங்கலாயினர். பின்னர் நூலில் கோத்து அணிந்தது பற்றி மங்கல நாண் என்றும் வழங்கிறார்கள். எனவே தாலி என்ற சொல் சங்க காலத்திலிருந்து பல வகையாக மாறிப் பல பெயரோடு இதுகாறும் வழக்காற்றில் வருகிறதே தாலி என்ற ஒன்று சங்க கால முதல் வழக்காற்றில் இருந்து வந்தது என்பதற்குச் சான்று பகரும்.

நிற்க, உரையாசிரியர் கூறுவதெல்லாம் நமக்குப் பிரமாணம் அன்று. உரையாசிரியர் கூறுவதைக் கவனிப்பதோடு நிற்காமல் நம்முடைய அறிவையும் கொண்டு உண்மைப் பொருள் காணுவதே நன்று.

நிற்க, "தமிழர் திருமண நூல்" என்றதொரு நூலை 16—7—39ல் திருவாளர் வித்துவான்—மா. இராஜமாணிக்கம் பிள்ளை B.O.L. அவர்களால் எழுதப் பெற்று, மறைமலையடிகள், ச. சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், திரு. வி. க. போன்ற முப்பது பெரும் புலவர்களுடைய ஆதரவு உரையோடு "தமிழர் நல்வாழ்க்கைக் கழகத்தார்" வெளியிட்டுள்ளார்கள். அதில் அகம் 86, 126ம் செய்யுட்கள் எடுத்துக்காட்டோடு 16 வகைச் சடங்குகளையும் தமிழருக்கு விதித்துள்ளார்கள். அதில் 10வது சடங்காகக் கூறப்பெற்ற "அறிஞர், தாலியை வாழ்த்தித் தர மணமகன் அதனை மணமகள் கழுத்தில் அணிதல்" என்ற ஒரு கட்டளையும் உளது. இங்ஙனம் பெரும் புலவர்களுடைய ஆமோதிப்போடு விதிக்கப் பெற்றுள்ள தாலி கட்டுதலாகிய கட்டளையைத் தமிழர் மறுத்தல் கூடுமோ! தமிழருக்குத் தாலி இல்லையென்றால் இப்பெரும் புலவர்கள் அனைவரும் ஒருபடித்தாக அவ்வழக்கை வற்புறுத்தி இருக்கமாட்டார்களன்றோ? எனவே தமிழர்களுக்குத் தொன்று தொட்டுத் தாலி உண்டு என்ற முடிவுக்கே நாம் வரவேண்டும்.

---

# அமரகவி பாரதி நாடகம்!

**த**மிழ்மொழியின் இன்றைய மறுமலர்ச்சிக்கும், தமிழ்ப் பெருமக்களின் இன்றைய விழிப்பு நிலைக்கும் தனி மூல காரணமாக விளங்குபவர் மகாகவி பாரதியார். அவருடைய வாழ்க்கை வரலாறு தமிழர் தம் நெஞ்சங்களில் என்றென்றும் புதுமையுடன் ஒளிரவேண்டும் என்பது நம் பேரவா. அவரைத் தேசிய எல்லையிலோ, வேதாந்தச் சிமிழிலோ, பக்திப் பரவசத்திலோ அடைப்பது அவருக்கு நாம் இழைக்கும் மாபெரும் அநீதியாகும். அவர் எல்லோருக்காகவும்—குழந்தைகளுக்காகவும், பெண்களுக்காகவும், தேசிய உணர்ச்சிக்காகவும், காதலுக்காகவும், நீதி நெறிக்காகவும், தமிழுக்காகவும், நேர்மைக்காகவும்—அஞ்சாது பாடினார். அவரது பாடல்கள் அநீதிக்கும், உயர்வு—தாழ்வு மனப்பான்மைக்கும், நடிப்புச் சுதேசிகளுக்கும் சாவோலை போன்றது. இத்தகைய தனிப்பெருங் கவியின் புகழ் உலகெங்கணும் பரவுவது தமிழர்களாகிய நமக்குக் கிடைக்கும் பெறற்கரிய பேறாகும். தமிழ்மொழியை ஆளும் முறைக்கு ஒரு புரட்சிமயமான திருப்பம் தந்த கவிச்சக்ரவர்த்தி பாரதியார் ஒரு புதுமைக்கவி.

அத்தகைய மகாகவியின் முழு வடிவத்தைக் கலைஞர் பெருமக்கள் தமிழ்மக்கள் முன்னிலையில் இதற்குள் சமர்ப்பித்திருக்க வேண்டும். திறமை கொண்டவர்களும், வசதி மிக்கவர்களும், கலையுள்ளம் கொண்ட ரஸிகர்களும், செல்வச்சீமான்களும், அரசாங்கமும் புரட்சியில் பூத்த புதுமைக் கவிஞனின் நினைவு தமிழ் உள்ளங்களில் என்றும் குன்றாது பாதுகாக்க வேண்டும். பாரதியைப்பற்றி இந்நேரம் நாடகங்கள் பன்முறை நடிக்கப்பட்டிருக்கவேண்டும்; அவரது கீதங்கள் தெருவுக்குத் தெரு பாடப்பட்டிருக்க வேண்டும்; பொய் கலவாத வாழ்க்கை நிகழ்ச்சிகள் படக்காட்சியாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். இவை நடவாததற்குக் காரணம் நாம் பாரதியை மறந்ததல்ல; ஒரு சில ரஸிகர்கள் பாரதியாரை வேதாந்த வேலியிலும், தேசீய எல்லையிலும் கட்டுப்படுத்துவது தான்! வ. ரா, அவர்கள் கூறியபடி பாரதி உலக மகாகவி. அவருக்கு

வேலி போட இயலாது. அவ்வாறு செய்ய முயல்வது நாம் மறைந்த மாகவிக்குச் செய்யும் மன்னிக்க முடியாத அக்கிரமம்.

"பாரதியாரின் வாழ்க்கையை நாடக மேடையில் போடவேண்டும்; தமிழர்களின் கவனத்தைப் பாரதி காலத்துக்குக் கொண்டு சென்று அவர்களது கடமையை நினைவூட்ட வேண்டும்" என்ற எண்ணம் நகர மருத்துவ மாணர்களுக்குத்தான் தோன்றிற்று. பாரதி நாடகத்தை முதன்முதலில் தமிழ்நாட்டில் பொதுமக்கள் முன்னிலையில் போட்ட துணிச்சலும், பெருமையும் அவர்களையே முழுதும் சாரும். அமெச்சூர் நடிகர்கள் என்ற அளவிலே அவர்கள் தங்கள் கடமையைச் சிரத்தையுடனும், முழு மனதுடனும் செய்தார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இங்கு குறித்துக் கொள்கிறோம். சென்ற 6-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள கலாமண்டபத்தில் நகர மருத்துவ மாணவர்கள் "அமரகவி பாரதி" என்ற ஒன்றரை மணி நேர நாடகத்தைத் திரளாகக் கூடி அமைதியுடன் ரஸித்த பொது மக்கள் முன்னிலையில் நடத்தினார்கள். நாடகத்தை அமைத்து உதவியர் 'சிவாஜி' ஆசிரியர் ஸ்ரீ திருலோக-சீதாராம் அவர்கள்.

பாரதி விழாவில் கலந்துகொண்டரிடையரான ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், தாம் போலீஸ் இலாகாவில் பணியாற்றியபோது கண்ட பாரதியாரையும், அப்போது பாரதியார் வாழ்க்கையில் நிகழ்ந்தவைகளையும் கூடியிருக்கும் மக்களுக்கு விளக்குகிறார். அவர் விளக்கும் விவரங்களை நாடகக் காட்சியில் காட்டுகிறார்கள் வ. உ. சி., வ. வே. சு. ஐயர், சுரேந்திரநாத் ஆர்யா, பாரதிதாசன் போன்ற பெருமக்கள் நாடகத்தில் நடமாடினர். கனகலிங்கம் என்ற கிழ்ச் சாதி மகனுக்கு பாரதியார் பூணூல் அணிவிக்கும் காட்சி ஒன்று இருந்தது. செல்லம்மா பாரதி வரும் இரண்டு ஸீன்கள் நாடகத்தில் இருந்தன. மற்றும் குள்ளச்சாமி, வேணு முதலி முதலியவர்களும் மேடையில் தோற்றமளித்தனர். பாரதியார் தமது உள்ளொளியுடன் பேசும் காட்சி அழகாகத் தீட்டப்பட்டிருந்தது. போலீஸ் இலாகா பாரதியார் நடமாடின இடங்களை மோப்பம் பிடித்த காட்சிகள் இயற்கையாக வந்துள்ளன.

பாரதி வாழ்வில் நடந்த ஒரு சில காட்சிகளையே ஆசிரியர் நாடகத்தில் விவரித்திருக்கிறார். ஆகையினால் காட்சித் தொடர்ச்சி விட்டுவிட்டு இருக்கிறது. பாரதியாரைப்பற்றி சில உணர்ச்சிகரமான நினைவுகளை எழுப்புவதில் ஆசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார். பாரதியாரின் முழு வடிவத்தை நடந்த விவரங்களை அடிப்படையாக வைத்து அமைப்பது நாம் விரும்பும் ஒரு செயல் என்பதை இங்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.

மாணவர்களின் திறமையைப் பெரிதும் சோதிக்கும் நாடகம் "அமரகவி பாரதி" அமெச்சூர்கள் என்ற அளவில் நகர மருத்துவ மாணவர்கள் வெற்றி கண்டுள்ளனர். பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, செல்லம்மா பாரதி, வ. வே. சு. ஐயர் இவர்களின் வேடப்பொருத்தம் நன்றாக இருந்தது. செல்லம்மாவாக நடித்த கல்யாணி இயற்கையாக நடித்தார். பாரதியாக நடித்த வேங்கடசாமி உணர்ச்சிகரமாகப் பேசினார். பொன்னன், மருதை பாகங்களை ஏற்றவர்கள் மிகமிக இயற்கையாக நடித்தார்கள். போலீஸ் இலாகாவில் சம்பந்தப்பட்ட பாத்திரங்களைத் தாங்கினவர்கள் எல்லோரும் துடிப்புடன் நடித்தனர். வேணுமுதலி, குள்ளச்சாமி வரும் ஸீன் ருசிகரமாக இருந்தது. இடையிடையே பாரதியாரின் பாடல்கள் சில பாடப்பட்டன; சில உணர்ச்சியுடன் பேசப்பட்டன. பாரதியாருக்காகப் பாடின குரல் இன்னும் கம்பீரத்துடன் இருந்திருக்க வேண்டும். பொதுவாக, இசையமைப்பு அவ்வளவு எடுப்பாக அமையவில்லை.

நாடகத்துக்குத் தலைமை தாங்கிய நிதி, கல்வி அமைச்சரான சி. சுப்பிரமணியம் நகர மருத்துவ மாணவர்களின் உற்சாகத்தையும், நடிப்புச் சிறப்பையும் பாராட்டிப் பேசினார். நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை மாணவர்களின் திறமையை வெகுவாகப் புகழ்ந்தார். பாரதியாரை நாடக நாயகனைக் கொண்ட நாடகத்தை முதன்முதலாக மக்கள் முன்னிலையில் ஆடிக்காட்டிய நகர மருத்துவ மாணவர்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.


## "பிரசண்ட விகடன்"

(மாத மிருமுறை
ஹாஸ்யப் பத்திரிகை)

### சந்தா விபரம்

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 4—8—0 |
| ஆறுமாத சந்தா | ரூ. 2—4—0 |

தனிப் பிரதி விலை அணா 3.

### வெளி நாடுகளுக்கு

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 5—8—0 |
| ஆறுமாத சந்தா | ரூ. 3—0—0 |

இராமாயண அரங்கேற்றத்தின் போது, கவிச்சக்ரவர்த்தி கம்பர் பெருமா னின் அருமந்த மகன் அம்பிகாபதி, ஒட்டக்கூத்தர் போன்ற பெரும் புலவர்கள் எழுப்பிய ஆட்சேபங்களுக் கெல்லாம் வாதத்திறமையோடு தக்க சமாதானங் கூறித் தந்தையாருக்குப் பெரு வெற்றி தேடித் தந்த மேதா விலாசத்தைக் கண்டு அரச குமாரி அமராவதி காதல் கொண்டு, அத்தணியாப் பெருங் காதலுக்காக எவ்விதத் தியாகத்தையும் புரியத் தயாரா யிருப்பதும், பாவலர்கோனின் மைந்தனும் முதலில் தன் காதலி அரசிளங்குமரி யாயிற்றே என அஞ்சினலும் அமராவதியின் அஞ்சாமையையும் நிலைகுலையா உறுதியையும் கண்டு தன்னையே அவள் பால் ஒப்படைப்பதும், இருவரும் கட்டுக்கடங்காத காதலுக்குத் தேனும் அமிழ்தும் மதுவும் சுவைக் கரும்பும் இட்டுக் கொடுத்து இசை பெருகச் செய்து போதைப் பெருஞ் சுகத்தில் ஆழ்ந்து, பேரின்ப நிலையில் உலகனைத்தையும் மறந்திருப்பதும் பின், தீது வருமோ? திரு வருமோ? என்று அஞ்சி நோவிருக்கும் நெஞ்சோடு பிரிவதும் கம்பர்பாலும் அம்பிகா பதிபாலும் பொருமை கொண்ட ஒட்டக்கூத்தன் தன்னையொத்த புலவர் களைச் சேர்த்து இவர்களுக்கு எதிராகச் சதிசெய்வதையும் ஆகிய நிகழ்ச்சிகளை முற்பகுதிகளில் விவரித்துவந்த கவிஞர், இப் பகுதியில் ஒட்டன் இட்ட சினத் தீயால் உளங் கருகிய குலோத்துங்கன், 'அந்தச் சழக்கனை வெட்டி வீழ்த்துக' என்று ஆணையிடுவதும், இத் தருணம் பெரும் புலவர் புகழேந்தி அங்கு வந்து, மன்னன் வாயிலாக விஷய முணர்ந்து, 'தமது இன்தமிழ்க் கவியால் மக்கள் உள்ளத்தை ஆட்சி செலுத்தும் கவி வேந்தனின் மகனை நீ ஆராயாது தண்டனை கொடுத்தால் உலகம் தூற்றும்' என்று எச்சரித்து, உண்மை என்ன என்று அறிய ஒரு சோதனை நடத்திப் பார்க்கலாம் என்று யோசனை சொல்லுவதை மிகவும் சுவைபட எழுதி யிருக்கிறார்.

# அமரன் அம்பிகாபதி

சே.ர.குமாரசாமி

## 5. விருந்திடு காதை

"குலம்பெற்ற புகழைக் காக்கும்
குலோத்துங்க சோழ மன்ன!
புலம்பெற்ற தமிழில் வல்ல
புலவர்கள் பலரைப் பெற்று
நலம்பெற்று மிளிரு கின்ற
நற்றமிழ் மணியே! மங்கை
நிலம்பெற்று நின்பால் கூடி
நீடூழி வாழ்க! வாழ்க! 18
மாசிலா நின்றன் கீர்த்தி
மங்காது வாழ்க! இந்தக்
காசினி யெங்கும் தாவிக்
கடும்புலிக் கொடிமே லோங்க!
வீசிடும் பகைமைக் காற்று
விலகுக! புன்மை செய்யக்
கூசிடும் தமிழர் நாட்டில்
குளிர்செங்கோல் நிலவி வாழ்க! 19

நீதிநின் றொளிர்க! வாய்மை
நிலவுக!'' என்று கூத்தன்
ஓதிநின் றிருந்தான் மன்னன்
உளம்மகிழ்ந்து இருக்கை தந்து
ஆதிநின் றுயர்ந்த அன்னோன்
அருமையும் புகழும் பேசி
சேதிநின் பால்வது உண்டோ?
செந்தமிழ்க் கடலே!'' என்றான். 20

"மன்னவ! நின்கு டிக்கு
மாசொன்று நேர்ந்த(த)! ஐயோ!
என்னவென் றுரைப்பேன்? நாவே
எழவில்லை! நெஞ்சத் தாலே
உன்னவும் கூடா ஒன்று
உற்றதே! நெடிது ஆண்ட
முன்னவர் புகழுக் கெல்லாம்
மூண்டதே கேடு'' என்றான். 21

"எடுத்தியம் பிடுவீர்! யாது
எனக்குற்ற கேடோ? வந்து
அடுத்துஎம் முன்னோர் சீர்க்கு
ஆபத்து யாரோ செய்தார்?
தொடுத்தியம் புவதில் வல்லோய்!
தொல்குடி தன்னை மாசு
படுத்திய தீயர் யாரோ?
பகருவீர்!'' என்றான் மன்னன். 22

"நாட்டினை ஆளத் தானே,
நலிபிணம் வேகும் வெய்ய
காட்டினை ஆளத் தானே,
கம்பனார் கவிதா மேதை,
ஏட்டினை யாளும் அந்த
ஏறுதன் மைந்தன் நின்றன்
கூட்டினில் ஆளும் பச்சைக்
கிள்ளையைக் கவர்ந்து விட்டான். 23

உண்டவீட் டிற்குப் பாவி
இரண்டகம் நினைய லாமோ?
கொண்டநாட் டதிப னுக்குக்
கொடுமையும் இயற்ற லாமோ?
அண்டமே ஒப்பு மோ? அவ்
அறமகள் மகிழ வாளோ?
மண்டலம் ஆளும் வேந்தன்
மகளன்றோ? மறந்தான்!'' என்றான். 24

"'ஆ!'வென்றான் மன்னன்! கண்கள்
அனலினைக் கக்கிற்(று)! உள்ளம்
'ஓ'வென்று சீறு கின்ற
ஒலியலை கடலா யிற்று!
"சாவு'' என்றான் "அவனுக்கு'' "அந்தச்
சழக்கனை வெட்டி வீழ்த்தப்

போ"வென்றான் நெஞ்சில் சீற்றப்
பொதிகொண்ட வேந்த ரேறே! 25
"எவரையோ அருள்க!" என்று
எரிவேற்கை வீரன் வேண்டி
நவரத்ன முடியோன் தன்னை
நடுக்கமொ டுசாவி நின்றான்!
விவரமாய் உரைத்துக் கூத்தன்
"விரைக"வென் றான்அப் போது
கவர்தமிழ் வெண்பா வல்ல
கவிபுக ழேந்தி வந்தார்! 26
"மன்னர்பால் காணு கின்றேன்
மாறுபா டேதோ? துன்பம்
என்னவோ? அறிந்து காண
என்னுளம் விருப்ப முற்ற(து)!
இன்னரும் தமிழில் மிக்கோய்!
இயம்புதி" என்றார்! கூத்தன்
வன்னய நாவால் யாவும்
வகைபடத் தொகுத்துச் சொன்னான்! 27
மாறிடும் தன்மை யில்லா
மணிக்கவி புகழேந்தி
சீறிடும் மன்னன் கக்கும்
சினத்தினை அணைக்கும் வண்ணம்
ஆறிடும் மொழிகள் பெய்து
அறமுறை நெறிகள் காட்டிக்
கூறிடத் தொடங்கு கின்றார்
"கூத்தரே! மக்கட் கோவே! 28
வனத்தினில் திரிந்து சென்று
வாழ்வினைக் கடத்து கின்ற
இனத்தினி லன்றோ பொல்லா
நச்சினம் காண்ப தாகும்?
சினத்தினில் புகுந்து விட்டால்
சிந்தனை தகர்ந்து போகும்!
மனத்தினில் பொங்கும் சீற்றம்
மாற்றலே ஆற்ற லன்றோ? 29
நீதியைக் காப்ப தற்கே
நிலத்தினில் தோற்றம் கண்ட
ஆதிநல் விசைமைச் சோழ
அருங்குடி தந்த மன்ன!
சேதியைக் கேட்ட போதே
செம்மையை நீத்து தண்டம்
ஓதிடல் தீமை யன்றோ?
ஓர்ந்திட வேண்டு கின்றேன்! 30
ஆவுக்குத் தன்கல் மைந்தன்
ஆவியை அர்ப்ப ணித்த
கோவர்க்குப் பின்னர் வந்த
கொற்றவ! சினத்தில் நீந்தும்

நாவுக்கு வந்த தெல்லாம்
நவிலுதல் அரசர்க் காமோ ?
மேவிக்கண் கண்ட பின்னே
மிகுசெயல் துணிய வேண்டும்! 31

ஆய்ந்திடல் வேண்டும்! மெய்யை
அறிந்திடல் வேண்டும்! இன்று
காய்ந்திடும் சினம்நி னக்குக்
களங்கத்தை விளைத்தல் கூடும்!
சாய்ந்திடும் கோன்மை கூட!
சரிந்திடும் நிலங்க ளெல்லாம்!
மாய்ந்திடும் குலமே! கம்பன்
மகனவன் நினைவில் கொள்வீர்! 32

தண்டமிழ் புவனம் முற்றும்
தனித்தமிழ் ஆட்சி செய்யும்
மண்டல கவிவேந் தன்தன்
மகனை நீ ஆராயாது
தண்டனைக் கொடுத்தால் இந்தத்
தமிழ்ப்புவி உன்னைத் தூற்றும்!
பண்டளிர் பெருமை சான்ற
பார்த்திப! அறிக மெய்யே!" 33

எனப்புக ழேந்தி நீதி
எடுத்துரை செய்தார்! மன்னன்
சினப்புகை யடங்கி, "என்றன்
செந்தமிழ்ச் செல்வப் பேறே!
வனப்புறு அழகுச் செல்வ
வஞ்சிக்கும் அன்னை னுக்கும்
மனப்பிணைப்(பு) உளதைக் காண
மார்க்கத்தை அருள்க நீரே! 34

ஐயனே!" என்றான் சோழ
அரசனும்! நீங்கா எட்டுக்
கையனும் மொழிந்தான்: "நாட்டுக்
காவல! விருந்து ஒன்று
செய்யவும்! கம்பன் பெற்ற
செம்மலை அழைக்க! நின்றன்
தையலின் கையால் யார்க்கும்
தருக! பின் ஒழுக்கம் தன்னைக், 35

கண்டுதேர் வோம்"என்று இன்பக்
கவிமணி முடித்தான்! பாடும்
வண்டுதேர் மாலை மார்பன்
வகுத்தஅம் முறையை ஏற்றான்!
உண்டுதேர் தன்னி லேறி
உயர்புக ழேந்தி பின்னர்
மண்டுதேன் கவிதைக் கம்பர்
மனையெண்ணி விரைந்து சென்றான். 36

# கொழு கொம்பு

கே. வி. நடராஜன் பி.காம்., பி.டி.

★

பள்ளியிலே மணி அடித்தது. தாறு மாருக ஓடும் தேனீக்கள் போன்று, மாணவர்கள் பள்ளியைவிட்டு ஓடினர். கட்டற்ற பறவைகளை ஒத்திருந்தனர் அவர்கள். தொண்டை வரளக் கத்திய ஆசிரியர் பெருமூச்சு விட்டவாறே, கர்சிப்பால் முகத்தைத் துடைத்தார்.

ஒரே ஒரு மாணவன் மடடும் அவர் பின் நின்ருன். "என்னடா, இன்னுமா நீ வீட்டிற்கு ஓடவில்லே? குஞ்சுகளை நினைத்துப் பதட்டமுறும் பறவைபோல, அன்னை வழி பார்ப்பாளடா!" அவர் வாய் என்றே எங்கேயோ படித்ததை உதிர்த்தது.

"எனக்கு அம்மாவே இல்லே சார்!"

சடீரெனச் சவுக்கடி பட்ட குதிரை திணறுவதுபோல, அவர் திடுக்கிட்டார்; திரும்பினர். எதிரே—

கசங்கிய காக்கி உடை; கையிலே பலகை, புத்தகம்: கண்களில் கோத்துள்ள தளும்பும் நீர்; பசுங்கொடியை நிகர்த்த முகம் வாடித் துவண்ட உடல்!

"உலகைப் போற்றும் அன்னை இருக்கிருளடா! "அட, அழாதே!"

"சார், நாளையிலிருந்து நான் வரமாட்டேன்!"

இவ் விஷயத்தை வெளியிடுவதற்குள் அவன் துக்கம் பீரிட்டு அழுகையிலே கலந்து, திணறியவாறு வார்த்தைகள் மூலம் வந்தது!

அவர் அயர்ந்து போஞர்.

வகுப்பிலே படிக்கும் மாணவன் இவன் தான். மற்றவர்கள், வீட்டிலே தொந்திரவு தராமலிருக்கப் பள்ளியில் அடைபடும் ஆட்டுக் கும்பல்! அவர்களை அடக்குவதற்கு ஆசிரியர்! அவரும் இடையனும் ஒன்று?

"ஏன்டா அப்படி?"

"அப்பா, இனி படிக்க வேண்டாம் என்ருர்! அம்மாவும் 'சரி'ன்னுட்டார்!"

அவன் மனக் குமுறலின் எதிரொலியாகக் கண்ணீர் தாடையிலே வழிந்தது.

"சரி வா, அப்பாவைப் பார்ப்போம்!"

"அவர் தப்பு இல்லே சார், என் சித்திதான் ஸார்! நான் சும்மா சோறு தின்னுட்டுச் சுத்தறேனம்! நான் வேலைக்குப் போகணுமாம்......

"சும்மா வாடா......"

பதறும் சிறுவனின் சில்லிட்ட கரத்தைப் பிடித்தார். ஆறும் கஞ்சிபோல சிறுவன் அடங்க முயன்ருன்.

அவர் பேசாது நடந்தார்.

பையன் வீட்டைக்காட்ட, அவர் கதவைத் தட்டினர்.

"சனியன், பீடை, பள்ளி போனு போனது தான். வா, உதைக்கிறேன்!"—என்ற வரவேற்பு வந்தது!

கதவு 'பட்' எனக் கிடுகிடுத்தது.

"நீங்களா? அந்த 'ஓடுகாலி'யோன்னு பார்த்தேன்."

"அம்மா, ஏன் குழந்தையைத் திட்டணும்? கண்ணுடி நம்மைத்தான் பிரதிபலிக்கும்!

"குழந்தையா?...யார் குழந்தை?...பத்து மாசம் நானு சுமந்தேன்? கோட்டானில்லே அது? அது கெட்ட கேடுக்கு சோறு இடறதே அதிகம்: பழைய ஜன்மப் பீடை! பள்ளி வேறு அது வாழ்வுக்கு!"

"அட கடவுளே! ஆண்களைப் படிக்க வைக்க முயற்சிப்பதற்கு முன், இப்பெண்களைப் படிப்பிக்க வேண்டாமா? ஆண் படித்தால், அவனுடன் படிப்பு சரி; பெண் படித்தால் ஒரு குடும்பத்திலே ஒளி பிறக்கிறது. ஆண்கள் பெண் வயப்பட்டவர்; குழந்தைகளோ அப் பெண்ணிடமே தோன்றுகின்றன. பெண் 'ஒளி' பெற்ருல், உலகம் பிரகாசிக்கும்!" அவர் சிந்தனையிலே ஆழ்ந்தார்.

"ஐயா, உட்காருங்கோ! என்ன, 'அது, படிக்குதுங்களா?" என்ற குரல் அவரை உலுக்கியது.

கத்தை மீசை வளர்த்துள்ள, ஆணுருவின் அமைந்த அசடு எதிரே நின்றது! மீசையுடன் தான் அவன் ஆண்மையோ?

"பையன் தந்தையா? சந்தோஷம்!"

இருவரும் உட்கார்ந்தனர்.

"ஏன் நீங்கள் பையனை நிறுத்த விரும்புகிறீர்கள்?"

"என்னுங்க, அது சும்மா பல்கை, புஸ்தகம் என்று கேக்குதுங்க! என்னுலே!......"

"ஏம்பா, நீ குடியானவன்தானே! ஒரு புடலை செடி போடறே! அது நல்லா வளர்ரதுக்கு எரு இடறே, நீர் விடறே; கொழு கொம்பு வைக்கறே, பந்தல் போடறே-பூச்சி

அரிக்காம இருக்க, மருந்து தூவறே! அப்புறந் தான் காய் அறுக்கறே'

"ஆமாங்க, சாமி!"

"அதுபோல நீ புள்ளே பெற்றிருக்கே!"

"அது, 'சாமி புண்யங்க'!"

"அந்த 'சாமி புண்ணியத்தை' ஏன் 'பாவ' மாக்கிறே? ஓரறிவு உயிரான புடலைச் செடிக் குக் காட்டும் பரிவிலே ஒரு பங்கு உன் மகனுக் குக் காட்டேன்! பிள்ளே பெற்ற பிறகு அதற் குரியவைகளே நீ கொடுக்கணும்! முயற்சியும் செய்யணும். குழந்தையும், தெய்வமும் நாம் கொண்டாடுமிடத்திலே!"

"சாமி, குடும்பம் கட்டி வரலீங்க! போன மாசந்தான் கல்யாணம் கட்டிகிட்டேன்!...... கடன் வேறு!"......

"அட சீ, மனிதனு நீ," என நினைத்தார் அவர்.

"எப்போ முதல் சம்சாரம் தப்பிச்சு?"

"மூணு மாசமாவுதுங்க!"

"அப்பா, அவனுக்குத் தாயும் இல்லே; தந்தையான நீ 'தாயாக' இருக்கணும்!

"அதுக்குத்தானே 'வேறு' கட்டிகிட் டேன்!"

"நீ குறுக்கே பேசாதே! நீ எப்படியோ பிழைச்சுக்கறே!"

"எங்கப்பன் ஒண்ணும் என்னைப் பள்ளி யிலே வைக்கலே!"

"அப்பா, இந்த இரண்டாமவள் 'வயத் திலே' புள்ளே பிறந்தால் படிப்பு வைப்பாயோ? "நீ குருடனுனல், உன் மகனும் குருடனுய் உலகில் வாழ விரும்புகிருயா?"

"இல்லாட்டி, இவ சும்மா இருப்பாளா?"

"அப்போ, இப்பையன் தாயும் இருந்தால் சும்மா விடுவாளா?"

"இருந்தாத்தானே அதுக்கு, பேச்சி? போனவளேப்பற்றி என்னத்துக்குங்க பேச்சி?"

"உன் பொறுப்பிலிருந்து, நீ தவறுகிருய்! பையனே வளர்த்தால் மட்டும் போதாது படிக்க வைச்சு, முன்னுக்கு வரச்செய்யணுங்! இதைச் செய்யல்லே, நீ மனுஷயனில்லே! செடி வைத்த பிறகு நீர் விடாத பாபி ஆவாய்!"......

"பாவ, புண்ணியம் பணக்காரங்களுக்குத் தான்!"......

"பையன் கெட்டிக்காரன். படிச்சு உனக்கு உதவியாய் இருப்பான்"......

"ஆமாங்க, எங்க ஆயா சொல்வாங்க, 'அடே, உன் மவன் படா 'சுடி'டா; உன்னேயே உரிச்சிகிட்டு இருக்குதடா', என்று."

"உலகம்தான் எப்படி புகழுக்குப் பல்லே இளிக்கிறது," என நினைத்தார்.

"பிறவியிலேயே புத்திசாலியானு, படிப்பும் கூட இருந்தால்? நன்ருய் வளரும் செடிக்கு சிறந்த எருவும் இட்டு வளர்த்தால்?

"இல்லீங்க வந்து......" அவன் தலையைச் சொரிந்தான்!

"அப்பா, நீ பேசுவதற்கு முன், இச்சிறுவ னின் முகத்தைப் பார்! இவனு, வேலேக்குத் தகுதி உடையவன்? நன்கு வளராத, சிறகற்ற, உலக சூழ்ச்சிப் புயலே அறியாத, இப்பறவையா திடீரென நன்கு பறக்கும்? நீ உதவி செய்யத் தான் வேண்டும்! இவன் சித்திக்கு அக்கரை யில்லே-அவள் மகனு இவன்? அவள் ஆசையு டன் உன்னே நேசிக்கலாம்! நீயும் நேசிக்கலாம். உன்மகனே நீ அன்புடன் அணைக்கவேண்டும்! கயிற்றை இழுக்கலாம்; அறுக்கக் கூடாது. அதை முடிபோட்டாலும், 'அறுந்த தன்மை' தோன்றும். பிள்ளேப் பாசத்தை அறுக்காதே. ஆறு ஆரம்பகதியிலே சிறியதாக இருந்து, ஆரும் அதைத் தாண்டலாம். என்ருலும் சங்க மத்திலே அதைப் படகின்றி கடக்கமுடியாது. நீ இன்று அவனே வெறுத்தால், நாளே உன்னே அவன் 'தந்தை'என மதிக்கமாட்டான். சுவற்றி லெறிந்த பந்துதான் அன்பு! ஏதோ பெற்றவன் என்பான். 'தந்தை' எனக் கூறமாட்டான். ஏன்? பிள்ளேயைச் 'சான்ருேன்' ஆக்குதல் 'தந்தை'யின் கடமை! உன்னேயும் உன்தந்தை புதுமனைவி மோகத்திலே, போகத்திலே மயங்கி கவனியாது விட்டு விட்டிருந்தால், அவரை, நீ இப்போது மதிப்பாயா? உலக நந்தவனத்திலே தவழும் சிறு மலர்க்கொடியான குழந்தையை நீ வாடவிடாதே!"

"சாமி, அவன் பெரியவனுன பிறகு படிக் கட்டுமே!"

'எப்படி முடியும்? ஐந்தில் வளேயாதது ஐம்பதிலா முடியும்? சிறுமூங்கில் வளேயும்; வாரை வளேயுமா? தாமரைக்குத் தண்ணீர் வேண்டும்; சூரியனும் வேண்டும். ஆனல் அத் தாமரையைப் பிடுங்கி, நீரிலேயோ, கரையி லேயோ போட்டால் வளருமா? அது போலத் தான் நீ கூறுவது. வாழ்வினைச் செப்பனிட்டு செம்மையாய் வளம்பெற வாழ்வினே நடத் தவே 'கல்வி'யப்பா! வாழ்விற்குப்பிறகு எதற் குக் கல்வி? கண் போனபிறகு எதற்கு மூக்குக் கண்ணுடி? அதோபார் அந்த வேல மரத்திலே —இரு காகங்கள்! ஒருகாகம் காவல் கொள்ள, மற்ருென்று தன் அலகால் குஞ்சுகளின் உள் சிவந்த வாயிலே உணவை ஊட்டுவதைப் பார்! பறவைகளே இப்படி தன் குஞ்சுகளுக்கு உதவிசெய்ய, நீ மறுப்பதா? அக் காகம் தன் இனமேயற்ற குயிலின் குஞ்சுகளுக்கும் உணவை ஊட்டி வளர்க்கிறது. அப்படியிருக்க நம் குழந்தைகளே வளர்க்க, ஆறறிவு படைத்த நாமா தயங்குவது? என்ன பெரியதவறு இது? நம் பெயரைப் பெருமையுடன் உலகிலே

சொல்லி வாழத்தானே மக்கள் வேண்டும்? நம்மைத் தூற்றவா, வேண்டும்? மனைவியை அதிகம் கவனித்து, மகனை வாட விடாதே! தந்தைத் தன்மை, கணவன் தன்மைக்குச் சமமானது. உன் முதல் மனைவியிடத்தே தோன்றிய அன்பு மலரடா இது! அன்பு உண்மையானால், அவ்வன்பால் பிணையப்பட்டவர் துன்பம் அடையார். உன் மகனைக் கெடுக்காதே! படிப்பு இருப்பின் அதிக ஊதியம் பெறுவான். உன் நிலையும் உயரும். வெள்ளம் உயர, வாழ்க்கை உயரும். திறமை உயர, பண்பு, மனத்திட்பம் உயரும்; உன் பணத்தின்மீது—கொஞ்சமானாலும்கூட-உன் இளையமனைவிக்கு கண்! உன்மீதல்ல; அல்லாவிடில் உன் மகனை இவ்விதம் வளர்ப்பாளா? உன் குடும்பமே தகர்கிறது-துவேஷம் வளர்கிறது. மனைவியின் மனத்தைத் திருத்தி இருவர் முயற்சி செய்து, மகனை வளர்த்து, இன்பம் பெறுவாய். 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியமடா! வாழ்க்கை வண்டி, நீங்கள் இருவரும் ஒருமித்து இழுத்தால்தான் இன்பபுரிக்குச் செல்லும்; உன் மகனே இவ்வண்டியின் வாடா விளக்கு, தூங்கா மணி விளக்கு! தென்னைக்கு இன்று நீர் விட்டால், இளநீர் நாளையே பெறுவாய்; இன்று அவனை நன்கு கவனித்தால் அவனுன்னைக் காப்பாற்றுவான். என்ன?''

''சாமி, என் கண்களைத் திறந்துவிட்டீங்க'!'

''இல்லை அப்பா நீ உன்கண்களை மூடிக்கிட்டு இருந்தாய். நீயே இப்போது திறந்து கொண்டாய்! தாகமற்ற குதிரையை நீர்நிலைக்குப் பலவந்தமாக இழுத்துச் சென்றாலும், அது குடிக்குமா? உன் மனத்திலே அன்புச் சுடர் மங்கிக் கிடந்தது. அதனை நீ தூண்டிவிட்டாய். இனி உன் வாழ்விலே இரு சுடர்கள் உண்டு-அன்புடை மனைவி, ஆருயிர் மகன். அன்புச் சொல்லாலே அவர்களை அணைத்து, நல்ல காரியத்தாலே அவர் மனத்தை மாற்றி, நீ வளர்த்தால், உன் வீட்டிலே ஒளி என்றும் நடனமிடும். திருவும் அமைவாள்.''!

துவண்டு கீழே விழுந்த வாடிய சிறு கொடிக்குக் கொழு கொம்பு மாதிரி நின்ற இவ்வாசிரியர், ''சிறந்த, மலரும் முல்லைக் கொடிக்குப் பெருந்தேர் அளித்த, வெள்ளருவி வீழும் பறம்பு நாட்டின் கோமான் பாரி'' வழி நின்றவர் அன்றோ?


ஸ்ரீமத் கம்ப ராமாயண

வசன சங்கிரகம் (சப்த காண்டங்களை அடங்கியது)

[நான்காம் பதிப்பு]

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விவரித்துக் கூறும் இந்த இராமாயணம் புண்ணிய மிக்க கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாகும் பயன்கள் அளவிடுதற்கு அரியனவாகும். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலட்சுமி கடாக்ஷமுண்டாகும்.

மிக்க திருத்தங்களோடு கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது.

விலை ரூபா [illegible]. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, சென்னை-1.



# ஹோட்டல் கொலை

எஸ். என். கே. ராஜன்

"ஹெலன் என்ற பெண்ணால்!'

"எதற்காக?"

"கொலை செய்யப்பட்டவர் எந்தக் கண்ணபிரான் என்றறிந்து, பத்திரிகையில் கண்ட செய்தியை ஊர்ஜிதப் படுத்திக்கொள்வதற்காகவும், துப்புத்துலக்குவதற் காகவும்!"

"ஏன்? அதில் அவளுக்கென்ன அக்கறை?"

"கொலை யுண்ட கண்ணபிரானின் மருமகள் என்ற காரணத்திற்காக?"

"விளங்கவில்லையே! ஹெலன் என்பவள் கிறிஸ்துவப்பெண்! ஆனால் கண்ணபிரானோ இந்து!...அப்படி யிருக்க..."

"ஹெலன் கிறிஸ்துவப் பெண் மட்டுமல்ல இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்த ஆங்கிலேயப் பெண்! கண்ணபிரானுக்கு தாமோதரன் என்ற ஒரே மகன் இருக்கிறான்- அவன் இங்கிலாந்து சென்று படித்த பொழுது, அவன் தங்கி யிருந்த ஹோட்டல் முதலாளியின் மகளான ஹெலனைக் காதலித்து மணந்து கொண்டானும். படிப்பு முடிந்து தாமோதரன் தாய்நாடு திரும்பிய பொழுது, அவளையும் அழைத்து வந்து சென்னையில் தங்கி யிருக்க வசதிகள் செய்து கொடுத்துவிட்டு, தான் மட்டும் கோயமுத்தூருக்குச் சென்று விட்டானும்! ஹெலனை அடிக்கடி வந்து பார்த்துவிட்டுப் போவதுடன், அவள் வாழ்க்கைச் செலவுக்குப் பொருளுதவியும் செய்து வருகிறானும். அதனால்..."

"கண்ணபிரான் தனது மாமனார் ஆயிற்றே என்கிற பாசத்தால் இந்த வழக்கில் உம்மை அமர்த்தி யிருக்கிறாளா?"

"அந்தப் பாசத்தோடு மட்டுமல்ல; அவளுடைய மாமனார் கொலை செய்யப்பட்டார். அவரோ கோடீஸ்வரர்! அவருடைய சொத்து முழுவதும் மகன் தாமோதரனை—அவளுடைய கணவனைச் சேரும்! இப்பொழுது தாமோதரன் ஒரு கோடீஸ்வரன்: ஹெலன் கோடீஸ்வரனின் மனைவி! அவளுக்கு அக்கறை இருக்காதா என்ன?"

துப்பறியும் சிவராம் கண்ணபிரானின் கொலையைப்பற்றி ஆதிமுதல் அந்தம் வரை கேட்டறிந்தார். சொக்கலிங்கத்தின் கைவிரல் ரேகைகளை ஆராய்ந்தார். பாரகன் ஹோட்டலுக்குச் சென்று, கொலை நடந்த அறுபத்தேழாவது அறையை ஆராய்ந்து பார்த்தார். பிறகு சூப்ரெண்ட் வேணுகோபாலுடன் தனது பங்களாவுக்குத் திரும்பினார், அங்கே அமர்ந்து பேச்சை ஆரம்பித்தனர்.

"சொக்கலிங்கம் தனது கைவிரல் ரேகைகளைக் கொலை நடந்த இடத்தில் ஜன்னலின் கண்ணாடிக் கதவின் மேலும், ரூல் தடியின் மேலும் கொலை நடந்த நேரத்திற்கு முன்னே பதிய வைத்து விட்டுச் சென்றிருக்கிறான். ஆனால் கண்ணபிரானைக் கொன்றது மட்டும் சொக்கலிங்கம் இல்லை!" என்றார் சிவராம்.

"என்ன? கண்ணபிரானைக் கொன்றது சொக்கலிங்கம் இல்லையா? பின்னே யார்?" என்று கத்திக் கேட்டார் வேணுகோபால்.

"அதைத்தான் கண்டு பிடிக்கவேண்டும்!... இருக்கட்டும். சொக்கலிங்கத்தினிடம் இருந்த ரூபாய் நோட்டுகளும், கண்ணபிரானின் மணி பர்ஸிலிருந்து கொள்ளை யடிக்கப்பட்ட—வேலைக்காரன் ராமன் சில்லரை மாற்றிக் கொடுத்த நோட்டுகளும் ஒன்றேதானா?... உமக்கு நிச்சயமாகத் தெரியுமா?"

"அவை ஒன்றாகத்தான் இருக்கலாம் என்று ராமன் கூறுகிறான்!

"அப்படி இருக்க நியாயமில்லை!"

"எப்படி?"

"ராமன் நூறுரூபாய் நோட்டுக்குச் சில்லரை மாற்றிக் கொண்டுவந்து கண்ணபிரானிடம் கொடுத்திருக்கிறான். அதை அவர் மணிபர்ஸில் வைத்திருக்கிறார். மேலும் கொலை செய்த பிறகே அவைகளைக் கொள்ளை யடித்திருக்கவேண்டும். ஆனால் சொக்கலிங்கத்தை அன்று மாலை நான்கு மணிக்குக் கைது செய்த பொழுது அவனிடம் ரூபாய் நோட்டுகளைக் கண்டெடுத்ததாக மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் கூறுகிறார். அப்படி இருக்க அந்த நோட்டுகள் கண்ணபிரானுடையதாக எப்படி இருக்க முடியும்?"

"இருக்க நியாயமில்லை தான்!"

"சொக்கலிங்கத்தினிட மிருந்த பணம் எப்படிக் கிடைத்ததென்றான்?"

"கிண்டிரேஸில் கிடைத்ததாம்!"

"அதை நான் நம்பவில்லை! கண்ணபிரானின் கொலை முன் ஏற்பாடாக நடத்தப்பட்டிருக்கிறது! அதற்கு சொக்கலிங்கம் உடந்தை!"

"அப்படி யென்றால்?"

"கண்ணபிரானைக் கொலை செய்தவன் கையாண்ட தந்திரம்!"

"ஆச்சரியமாக இருக்கிறதே நீங்கள் கூறுவது!"

"இதில் ஆச்சரியத்திற்கு இடமே இல்லையே?"

"கொலை செய்தவன் தப்பித்துக் கொள்ளும் வகையில்—தான் இதில் சிக்கிக்கொள்ளும் வழியில் தன்னுடைய கைவிரல் ரேகைகளைப் பதியவைத்து விட்டுச் செல்வானா சொக்கலிங்கம்? இதை முழு முட்டாளும் கூடச் செய்யமாட்டானே!" என்றார் இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம்.

துப்பறியும் சிவராம் சோமசுந்தரத்தைப் பார்த்து, "உண்மையான காரணத்தை வெளிப்படுத்தாமல் சொக்கலிங்கத்தைக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதித்திருக்கலா மல்லவா?" என்றார்.

"இருக்கலாம்....ஆனால் கண்ணபிரானின் மண்டையை உடைக்க உபயோகித்த ரூல் தடியின்மேல் சொக்கலிங்கத்தின் கைவிரல் ரேகை மட்டுமே படிந்திருக்கிறது. உமது அனுமானத்தின்படி, சொக்கலிங்கத்தின் கைவிரல் ரேகை படிந்த அந்த ரூல் தடியினால் கண்ணபிரானை வேறொருவன் கொன்றிருந்தால் அதில் கொன்றவனுடைய ரேகை கொஞ்சங் கூடவா படிந்திருக்காது? அல்லது கொலை செய்தவன் தனது ரேகை ரூல் தடியில் பதியாமலிருக்கக் கையுறை அணிந்தோ, அல்லது வெறெந்த உபாயத்தையோ கடைப்பிடித்திருந்தால் அவன் அதைக்கொண்டு மண்டையை உடைக்க உபயோகித்த சக்தியில் ரூல் தடியில் படிந்திருந்த ரேகைகள் அழிந்தல்லவா போயிருக்கும்?" என்றார் வேணுகோபால்.

"கொலை செய்தவன் உபயோகித்தது வேறு ரூல் தடி! மேலும் கண்ணபிரானைக் கொல்ல ரூல் தடியைத்தான் உபயோகித்தான் என்பது என்ன நிச்சயம்?"

"ஆனால் அந்த ரூல் தடியின்மேல் ரத்தக் கறை படிந்திருந்ததே?"

"அதுவும் கொலைகாரனின் சூழ்ச்சிகளில் ஒன்று, கொலை செய்தவன் தான் கொண்டு வந்த ரூல் தடியாலோ அல்லது வேறு கடினமான பொருளாலோ கண்ணபிரானின் மண்டையை உடைத்துக் கொன்றுவிட்டு, ஏற்கனவே சூழ்ச்சியால் சொக்கலிங்கத்தின் ரேகைகள் பதிக்கப்பட்ட கண்ணபிரானின் ரூல் தடியை ரத்தத்தில் தோய்த்து அங்கே போட்டுவிட்டுப் போய்விட்டான்! அப்பொழுது தனது ரேகை அதில் பதியாதவாறு சர்வ ஜாக்கிரதையாக இருந்திருக்கிறார்!......மேலும் அதில் சோக்கலிங்கத்தின் ரேகையைப் பதிய வைத்தவன் தனது மூளையைச் சரியாகப் பயன் படுத்தாமல் பதிய வைக்கும்படி ஏவியிருக்கிறான்?"

"எப்படி?"

"அந்த ரூல் தடியில் இரண்டு முனைகளிலும் ரேகைகள்! அப்படியானால், அந்த இரண்டு முனைகளிலும் இரண்டு கைவிரல் ரேகைகள்! அப்படியானால் அதை இரண்டு கைகளிலும் பிடித்து மண்டையைத் தாக்கிக் கொல்ல முடியுமா என்று யோசித்துப் பாரும்! ஒரு கையில் பிடித்து ஓங்கி அடித்தால் அடி பலமாக விழுமா? அல்லது இரண்டு கைகளாலும் இரு முனைகளையும் பிடித்து ரூல் தடியின் மத்திய பாகத்தில் மண்டையைத் தாக்கினால் அடி பலமாக—கொல்லும் அளவுக்கு—விழுமா என்று யோசியுங்கள்!"

"ஆமாம்...ஆனால் முதலில் இடது கையினால், தான் செய்யப்போகும் காரியத்தை நினைத்துப் பதற்றம் கொண்டு அவசரத்திலும் பயத்திலும் அடித்திருக்கலாம். அடி பலமாக விழாததால் பிறகு வலது கையில் பிடித்து அடித்துக் கொன்றிருக்கலா மல்லவா?"

"யார்? சொக்கலிங்கமா?...அப்படியானால் அவன் போலீஸ் பாதுகாப்பில் இருந்தது பொய்யாகவேண்டும்!"

அதற்குப் பதிலளிக்காமல் மௌனியானார் வேணுகோபால். துப்பறியும் சிவராம் பேச்சைத் தொடர்ந்தார்.

"கண்ணபிரானைக் கொன்றவன் சாதாரணமானவனல்லன்! சூழ்ச்சித் திறன் மிக்க முன் யோசனைக்காரன்! என்னென்ன செய்யவேண்டும், எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்று முன் கூட்டியே வழி வகுத்துக்கொண்டிருக்கிறான்! தன்னைத் தப்புவித்துக் கொள்ளவும், பிறர்மேல் சந்தேகம் கொள்ளப் போலீஸாரைத் தூண்டவும் சொக்கலிங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறான்!"

"நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை! ஆனால் கண்ணபிரானைக் கொன்றதன் நோக்கம் பணத்தைக் கொள்ளை யடிப்பது மட்டுமல்ல; வேறொரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும்"

"ஆம்...அந்த முக்கிய காரணத்தைக் குறிப்பது காணாமற்போன தோல் பையும், கண்ணபிரான் கொல்லப்பட்ட பொழுது எழுதிக் கொண்டிருந்த கடிதமும்! அத்துடன் தோல் பையிலிருந்த முக்கியமான—கண்ணபிரானுக்கு வெறுப்பையும் கோபத்தையும் உண்டாக்கிய மர்மக் கடிதம்!"

"அப்படி அந்தக் கடிதத்தை எழுதினவனே கண்ணபிரானைக் கொன்றிருக்கலாமல்லவா?...அப்படியானால் அவன் யாராயிருக்கக் கூடும்?"

"யாரா யிருந்தாலும் அவன் சொக்கலிங்கத்துக்கு லஞ்சம் கொடுத்து, அவன்தான் கொலை செய்தான் என்று நிரூபிக்க அவனது கைவிரல் ரேகைகளைக் கொலை நடந்த இடத்தில் ஜன்னலின் கண்ணாடிக் கதவின் மேலும், கொலைக்குக் கருவியாக அமைந்த ரூல் தடியின் மேலும் பதிய வைக்கும்படி வழி செய்திருக்கிறான் கொலை நடந்த அன்று பிற்பகல், அதாவது கண்ணபிரான் விஸ்வநாதனைக் காணச் சென்றிருந்தபொழுது, அவன் சொக்கலிங்கத்தை அழைத்து வந்து, கண்ணபிரானின் அறைக் கதவைக் கள்ளச்சாவியால் திறந்து, உள்ளே நுழைந்து, சொக்கலிங்கத்தின் ரேகைகளைச் சந்தேகம் வரும் இடங்களில் பதியும்படி ஏவி யிருக்கிறான். அதற்கு அவன் சொக்கலிங்கத்துக்குக் கொடுத்த தொகை நூறுரூபாய்! அந்தத் தொகையே சொக்கலிங்கத்தைக் கைது செய்தபோது அவனிடம் இருந்தது!"

"ஜன்னலின் கண்ணாடிக் கதவின்மேல் காணப்பட்ட ரேகைகள் எதைக் குறிக்கின்றன? கதவின்மேல் சொக்கலிங்கத்தின் ரேகைகளை ஏன் பதிய வைக்கவில்லை?"

"அவன்—கொலை செய்தவன். அதாவது கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட வழி வகுக்கப்பட்ட சொக்கலிங்கம் ஜன்னலின் வழியாக வந்தான் என்று பொய்ப் போக்குக் காட்டிப் போலீஸாரை நம்பும்படி செய்த சூழ்ச்சி!"

"இப்படி யெல்லாம் முன் யோசனைகள் செய்து, சூழ்ச்சியின் மூலம் பிறனொருவன் மேல் குற்றம் ருசு வாகும்படி வழி வகுத்துக் கொலை புரிந்தவன் எங்கிருந்து வந்திருப்பான்?"

"அவன் பாரகன் ஹோட்டலிலேயே தங்கி யிருந்தவனாகத்தான் இருக்கவேண்டும்! அவன் அதே ஹோட்டலில் வேறொரு அறையில் தங்கி, கண்ணபிரானின் ஒவ்வொரு செயலையும் கவனமாகக் கண்காணித்து வந்திருக்கவேண்டும்! மேலும் கண்ணபிரானைக் கொலை செய்ததற்குக் காரணம் கொள்ளையடித்ததல்ல; அந்த மர்மக் கடிதமே! இல்லாவிட்டால் அந்த மர்மக் கடிதம் மறைத்து வைக்கப்பட்டிருந்த தோல் பையைக் களவாடிச் சென்றிருக்கவேண்டிய காரணம்?"

"அற்புதமான அனுமானம்!......உம்... அப்புறம்?"

"கொலைகாரன் என்று குற்றம் சாட்டப்பட சொக்கலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறான். சொக்கலிங்கத்தின் பாகம் பூர்த்தியானவுடனே அவனுக்கு நூறு ரூபாயைக் கொடுத்திருக்கிறான்...அல்லது முன்பே அவனுக்குப் பணத்தைக் கொடுத்துச் சரி செய்திருக்கவேண்டும்!"

"ஆனால், தான் கொலைக் கேஸில் சிக்கிக் கொள்ளும்படி தனது கைவிரல் ரேகைகளைக் கொலை நடந்த இடத்தில் பதியவைத்துச் செல்ல சொக்கலிங்கம் சுய உணர்வுடன் ஒப்புக் கொண்டிருப்பானா?"

"கொலையின் உண்மையை மறைத்து, வேறு தகுந்த காரணத்தைச் சொல்லியோ அல்லது சொக்கலிங்கம் தான் செய்வது—கை ரேகையைப் பதியவைப்பது—இன்னதென்றும், இதற்காகத்தான் என்றும் தெரிந்து கொள்ளாதபடி காரியத்தை முடித்திருக்கிறான் உண்மைக் கொலைகாரன்! ஆனால் அவனது சாதுரியமான சூழ்ச்சியை வீழ்ச்சி யடையச் செய்துவிட்டான் சொக்கலிங்கம்!"

"எப்படி?"

"தனக்குப் பணம் கிடைத்தவுடன் சொக்கலிங்கம் கொலை நடந்த அன்று மாலை நன்றாகக் குடித்துவிட்டுத் தெருவில் ரகளை செய்திருக்கிறான். அதன் காரணமாக மதுவிலக்குச்சட்டத்தின் கீழ் அவன் கைது செய்யப்பட்டு லாக்கப்பில் அடைக்கப்பட்டு விட்டான். அன்று மாலை நான்கு மணியிலிருந்து மறுநாள் காலை பத்து மணி வரை அவன் லாக்கப்பில் இருந்ததாக நிரூபிக்கப்படுகிறது! இல்லாவிட்டால் துப்பறியும் வக்கணையே இல்லாத சாதாரண மனிதனும் சொக்கலிங்கம் தான் கொலை செய்தவன் என்று கைவிரல் ரேகையின் ஆதாரத்துடன் தீர்மானித்து விடுவான்! ஆனால் சொக்கலிங்

கம் குடித்துக் கும்மாள மடித்து, உண்மைக் கொலைகாரனின் முன் ஏற்பாட்டை நிர்மூல மாக்கியதுடன், இந்த வழக்கில் உண்மைக் குற்றவாளி ஒருவன் இருக்கிறான் என்பதை நமக்கு வெளிச்சமாக்கி விட்டான்!''

''அப்படியானால் அந்த உண்மையான கொலைகாரன் பாரகன் ஹோட்டலில் தான் தங்கி யிருக்கவேண்டும் என்று சொல்லுங்கள்!''

''தங்கி யிருந்தவன் என்பது மட்டும் நிச்சயம். இப்பொழுது தங்கி யிருக்கிறானா என்பது சந்தேகம்!''

''சொக்கலிங்கத்தை அழைத்து வந்து ஹோட்டலில் தங்கி யிருக்கிறானா என்பது சந்தேகம்!''

''காலம் கடந்துவிட்டது! இந்தக் கொலை நடந்த மறுதினமே செய்திருக்க வேண்டும். தனது சூழ்ச்சிக்குப் பலியான கண்ணபிரானின் வழக்கில் போலீஸார் என்னதான் செய்கிறார்கள் பார்ப்போம் என்று எண்ணி இன்னுமா ஹோட்டலில் தங்கி யிருப்பான் அவன்? பறவை பறந்தோடி யல்லவா போயிருக்கும்!... சரி... இப்பொழுது நாம் ஹெலனைச் சந்தித்து மேலும் சில தகவல்களை அறியலாம்! புறப்படுங்கள்!'' என்று கூறித் தன் இருப்பிடத்தை விட்டெழுந்தார் துப்பறியும் சிவராம்.

* * *

அரைமணி நேரத்திற்குப் பிறகு ராயபுரம் வெங்கடாசல முதலித் தெருவில் ஹெலன் குடியிருந்த பங்களாவை அடைந்தனர் துப்பறியும் சிவராம், சூப்ரெண்ட் வேணுகோபால், இன்ஸ்பெக்டர் சோமசுந்தரம் ஆகியோர்.

பங்களாவின் முன் வராந்தாவில் நின்று கொண்டிருந்த ஒரு நடுத்தர வயதான மாதைப் பார்த்து, ''சிவராம், ''மிஸிஸ் ஹெலன் இருக்கிறார்களா?... அவர்களைப் பார்க்கவேண்டும்... துப்பறியும் சிவராம் வந்திருக்கிறார் என்று சொல்லுங்கள்!'' என்றார்.

அம்மாது — ஹெலனுக்குத் துணையாக இருக்கும் வேலைக்காரி—உள்ளே அழைத்துச் சென்று, உட்காரவைத்து உபசரித்தாள். மறு நிமிஷம் ஹெலன் அவர்களை நோக்கி வந்தாள்.

ஹெலனுக்குச் சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும். ஆங்கிலப் பெண்ணிற்கேற்ற உயரமும், கம்பீரமும் அவள் உருவத்திலே உருவெடுத்து நின்றன! கைதேர்ந்த சிற்பியால் கடைந்தெடுக்கப்பட்ட தந்தப் பதுமைபோலக் காட்சி யளித்தாள். நீலநிறக் கண்களிலே கண்டவர் மயங்கும் கவர்ச்சி கவ்விக் கொண்டிருந்தது! 'லிப்ஸ்டிக்' தடவி, செக்க சிவந்திருந்த அதரங்களுக் கப்பால் முத்துப் பல் வரிசை மின்னிற்று! அவள் அணிந்திருந்த பிடிப்பான கௌனின் மூலம் இளமை எழில் தாங்கிய அங்க அவயவங்கள் எடுப்பாகக் காட்சி யளித்தன!



துப்பறியும் சிவராம் முதலியோரை அணுகிய ஹெலன் ஆங்கில முறைப்படி வணக்கம் தெரிவித்து, எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள். அமர்ந்தவள் ஒவ்வொருவரையும் மாறி மாறிக் கண் கொட்டாமல் பார்த்தாள். அவர்களிடையே சிறிது நேரம் மௌனம் நிலவியது.

சிவராம் அம் மௌனத்தைக் கலைத்து, "உங்கள் மாமனார் பாரகன் ஹோட்டலில் கொலை யுண்டதைக் குறித்துச் சில தகவல் உங்களிடம் அறிந்து கொள்ள வந்திருக்கிறோம்!" என்று ஆங்கிலத்தில் கூறி, மற்றிருவரையும் அவளுக்கு அறிமுகப் படுத்தினர்.

"சில தகவல்களா?...எனக்கென்ன தெரியும் அந்தக் கொலையைப்பற்றி? கொலை யுண்டவர் என் மாமனார்தானு? அவர் எப்படிக் கொலை யுண்டார் என்கிற சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளத்தான் நான் உங்களிடம் வந்தேன். அப்படி யிருக்க அந்தக் கொலையைப்பற்றி எனக்கென்ன தெரியும்?" என்ருள் ஹெலன் அச்சமும், ஆச்சரியமும் கலந்த குரலில், ஆங்கிலத்தில். அவளது அகன்ற நீல நிற விழிகள் சில விநாடிகள் சிவராமின் மேல் நிலைத்தன; தனது கீழுதட்டை லாவகமாகப் பற்களால் கடித்துக் கொண்டாள். பிறகு அவளது பார்வை மற்றவர்கள்மேல் பாய்ந்தது!

மீண்டும் அவள் சிவராமைப் பார்த்து, "சரி...உங்களுக்கு என்ன தகவல் தெரிய வேண்டும்?" என்று கேட்டாள்.

"தாமோதரன் உங்களை மணந்து கொண்டதும், நீங்கள் இங்கிலாந்திலிருந்து இங்கு வந்து தங்கி யிருப்பதும் தாமோதரனின் தந்தைக்குத் தெரியுமா?"

"தெரியாது! அதைப்பற்றி அவரிடம் என் கணவர் சொல்லவில்லை!"

"காரணம்?"

"அவர் எங்கள் மணத்தை அங்கீகரிக்க மாட்டார் என்ற பயம்தான்!...நான் ஆங்கிலப் பெண்; அவர் இந்து! இந்த விஷயம் அவருக்குத் தெரிந்தால் தனது வார்சை இழக்கச் செய்து விடுவாரே என்று பயந்தார்!"

"அதைப்பற்றி தாமோதரன் உங்களிடம் சொல்லி யிருக்கிருரா?"

"சொல்லி யிருக்கிருர்!"

"தாமோதரன் ஒரு கோடீஸ்வரனின் மகன், செல்வச்சீமானின் சீமந்தபுத்திரன் என்பதை மணம் நடப்பதற்கு முன்பு நீங்கள் அறிவீர்களா?"

"அதைப்பற்றி நான் அறியேன். பொதுவாக மேல் படிப்பிற்கு இங்கிலாந்துக்கு வர வேண்டுமானல் பணக்காரராகத் தானே இருக்கவேண்டும்? அவருடைய தந்தையைப் பற்றியோ, அவர்களது செல்வத்தைப் பற்றியோ நான் கேட்டுக்கொண்ட தில்லை. எனக்கு வேண்டியது அவருடைய சொத்தல்ல; அவருடைய அன்பும் குணமும்தான்!"

"தெரிகிறது! நீங்கள் உங்கள் தாய் நாட்டையும், பெற்ருேரையும் விட்டுப் பிரிந்து, கடல் கடந்து இவ்வளவுதூரம் வந்திருப்பதிலேயே அது நன்ருகத் தெரிகிறது!...சரி... எப்பொழுது மணம் நடந்தது?"

"1952-ம் வருஷம், மே மாதம், ஏழாம் தேதி!"

"உங்கள் திருமணத்தை உங்கள் பெற்ருேர் அறிவார்களா?"

"திருமணம் ரிஜிஸ்டிரார் ஆபீஸில் ரகசியமாக நடந்தது!"

"நீங்கள் தாமோதரனுடன் இந்தியாவிற்கு வந்ததும் உங்கள் பெற்ருேருக்குத் தெரியாதா?"

"தெரியாது!...இங்கு வந்த பிறகுதான் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன்."

"பதில் கடிதம் வந்ததா?"

"இல்லை!"

"உங்கள் மாமனரைப் பார்த்திருக்கிறீர்களா?"

"பார்த்ததில்லை!"

"உங்கள் மாமனர் இங்கு வருவதைக் குறித்து தாமோதரன் உங்களுக்கு முன் கூட்டியே கடிதம் எழுதிய துண்டா?"

"எங்களிருவருக்கு மிடையே கடிதப் போக்குவரத்தே கிடையாது!"

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"ஆச்சரியப்பட வேண்டிய விஷயம் தான்! ஆனல் அது எங்கள் இருவருக்கு மிடையே இருக்கும் ரகசிய ஒப்பந்தம்!"

"இரகசியத்திற்குக் காரணம் ஒருவேளை உங்கள் கடிதம் உங்கள் ரகசியத் திருமணத்தைச் காட்டிக் கொடுத்துவிடுமே என்ரு?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!"

"கண்ணபிரான் ஒரு கோடீஸ்வரர் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இப்பொழுது அவர் கொல்லப்பட்டார்! அவருடைய சொத்து முழுவதும், பெயர் பெற்ற இரும்புத் தொழிற்சாலையும் இப்பொழுது உங்களது கணவரைச் சேரும்! உங்கள் கணவர் கோடீஸ்வரராகி விட்டார்! நீங்கள் ஒரு கோடீஸ்வரரின் மனைவி!..."

அதைக் கேட்டதும் ஹெலனின் முகம் குப்பென்று சிவந்தது! அதரங்களில் இளம் முறுவல் பூத்தது! சிவராம் அவளையே கண்ணிமைக்காமல் பார்த்தார்.

அவரது அத்தகைய பார்வையைக் கண்டதும் ஹெலனின் புன்முறுவல் சட்டென்று மறைந்தது! உதடுகள் பற்களுக்கிடையே சிக்

குண்டன! நாணத்தால் சிவப்பேறிய வதனத்தில் லேசாக வியர்வைத் துளிகள் அரும்பின! பயங்கலந்த வார்த்தைகள் அவள் வாயிலிருந்து வெளிவந்தன!

"அப்படியானால்... அப்படியானல்... நான் கோடீஸ்வரி யாவேன் என்கிற காரணத்திற்காக என்னுடைய மாமனரைக் கொன்றேன் என்று என்மேல் குற்றம் சாட்டுகிறீர்களா?"

"நான் அப்படி யொன்றும் சொல்லவில்லையே! நீங்களே ஏன் கற்பனை செய்து கொண்டு விட்டீர்கள்......பயப்படாதீர்கள்!" என்றார் சிவராம்.

"அவர் கோடீஸ்வரரோ இல்லையோ, எனக்கு அதைப்பற்றி அக்கரை இல்லை. என் மேல் அன்பு வைத்து, இருக்க இடமும், வேண்டிய சௌகரியங்களும் செய்து கொடுத்து, என்னைக் கவனித்துக் கொள்கிறார். அதுவே எனக்குப் பரமதிருப்தி! மற்றவைகளைப்பற்றி எனக்குக் கவலை இல்லை!" என்றாள் ஹெலன் துடிப்புடன்.

"உங்கள் செலவுக்கு அவர் எவ்வளவு பணம் தருகிறார்?"

"மாதம் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய்க்கு மேல்... ஆனல் இவ்வளவுதான் என்று கணக்கில்லை!"

"நீங்கள் உங்கள் கணவருடன் கோயமுத்தூருக்குப் போனதுண்டா?"

"இல்லை!"

"தாமோதரன் கடைசியாக உங்களைப் பார்க்க எப்பொழுது வந்தார்?"

"இரண்டு வாரங்களுக்கு முன்பு!"

"அவரது தந்தை இறந்த செய்தியைப் பத்திரிகையில் படித்துத் தெரிந்து கொண்டீர்கள் என்று என்னிடம் சொன்னீர்களே, அதைப்பற்றி தாமோதரன் உங்களுக்குத் தந்தி யடிக்கவில்லையா?"

"இல்லை!"

"உங்கள் மாமனர் கொலை யுண்ட பிறகு கூட அவரைச் சென்று பார்க்கவில்லையா?"

"இல்லை!"

"ஏன்?"

"அவரது சுற்றத்தார்கள் வந்திருக்கும் பொழுது நான் அங்கே சென்றால் ரசாபாசம் ஏதாவது நிகழ்ந்திருந்தால் என்ன செய்வது என்கிற அச்சம்தான்!"

"சரி... இவ்வளவு தகவல் கொடுத்ததற்கு நன்றி!......நாங்கள் விடைபெற்றுக் கொள்கிறோம்!"

மறுநிமிஷம் மூவரும் அவ்விடம் விட்டகன்றனர். (தொடரும்.)


வெகு நாட்களாய் நாவல் உலகில் கிடைக்காமல் இருந்த

**ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய**

**கிருஷ்ணவேணி** அல்லது **அதிசய மர்மச் சுரங்கம்**

இந்த நாவலில் துப்பறிவோர் வேலையும், திருடர்களின் சாமர்த்தியமும் அடங்கியிருக்கிறது. இக்கதையில் நேரிடும் சம்பவங்கள் பெரும்பாலும் உரோமாபுரியில் நடக்கின்றன. இதில் நடக்கும் சம்பவங்கள் மிக்க வியப்பையளித்து வாசிப்போர் மனதை முழுமையும் கவர்ந்து கொள்ளும்.

**இதன் விலை ரூ. 2-8-0.** (தபாற் செலவு வேறு.)

**கற்பக சுந்தரி** அல்லது **மூன்று கறைகளின் மர்மம்**

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதரர், சகோதரிகள் அவசியம் படிக்கத் தக்கவை. (இரண்டு பாகங்கள் அடங்கியது)

**இதன் விலை ரூபா 3-0-0.** தபாற் செலவு வேறு.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.




நமது ஜோதிட நிருபர்

## 1955-ம் வருஷம் மார்ச்மீ 1உ முதல் 15உ வரை

### கிரஹங்களின் ஸஞ்சாரம் (நிராயன பூர்வம்)

| | பா-கலை | | பா-கலை | |
|---|---|---|---|---|
| சூரியன்:— | 316-18 | முதல் | 331-17 | வரை |
| சந்திரன்:— | 32-36 | ,, | 231-19 | ,, |
| அங்காரகன்:— | 8-32 | ,, | 18-59 | ,, |
| புதன்:— | 291-47 | ,, | 304-21 | ,, |
| குரு:— | 87-12 | ,, | 86-47 | ,, |
| சுக்கிரன்:— | 272-14 | ,, | 289-35 | ,, |
| சனி:— | 208-05 | ,, | 207-54 | ,, |
| ராகு:— | 249-12 | ,, | 248-25 | ,, |
| கேது:— | 69-12 | ,, | 68-25 | ,, |
| யுரேனஸ்:— | 90-56 | ,, | 90-37 | ,, |
| நெப்டியூன்:— | 184-54 | ,, | 184-37 | ,, |
| ப்ளூட்டோ:— | 122-07 | ,, | 121-48 | ,, |

| | | | |
|---|---|---|---|
| | அங் | சந் | கேது குரு (வ) |
| சூரி | 1-3-1955-ல் சென்னை | | யு (வ) |
| புதன் சுக் | பூஜ்ய மணிக்கு இராசி குண்டலி | | ப்ளூட் (வ) |
| ராகு | | நெ(வ) சனி | |

**சந்திர பலன்:**—சுக்ல பக்ஷ முற்பகுதி 2உ காலை மணி 5-12 வரை; பின் ஷை பிற்பகுதி 8உ இரவு மணி 9-11 வரை; அதன் பின் பகுள பக்ஷ முற்பகுதி.

**பிரவேசங்கள் முதலியன:**–11உ இரவு மணி 2-38க்கு புதன் கும்பத்திற்கும், 14உ மாலை மணி 4-39க்கு சூரியன் மீனத்திற்கும் பிரவேசிக்கின்றன. 1உ சனி வக்ர ஆரம்பம், இப் பக்ஷத்திலும் புத—சுக்ர ஸாமீப்யம் தொடர்ந்து நேரிடுகிறது.

**ஆகாயக் காக்ஷி:**—4உ இரவு மணி 9–39க்கு சசிக்கு வடக்கே பாகை 1-57ல் யுரேனஸ்—சந்திர ஸமாகமம்; 11உ இரவு மணி 2-14க்கு சசிக்கு வடக்கே பாகை 5-51ல் நெப்டியூன் சந்திர ஸமாகமம்; 13உ இரவு மணி 12-35க்கு சசிக்கு வடக்கே பாகை 5-32ல் சனி—சந்திர ஸமாகமம், மேலும் 4உ நிகழும் குரு—சந்திர ஸமாகமம்.

***ஸஞ்சார பலன்:**—"சந்திரன்" 'ரிஷபம்' முதல் "விருச்சிகம்" வரை ஸஞ்சரித்தலால் இப் பக்ஷத்தின் முற்பகுதி சுக்ல பக்ஷ பலமும், பிற்பகுதி கிருஷ்ண பக்ஷ பலமுங் கொண்டு பலன் செய்யும். 'சூரியன்' கும்ப—மீனங்களிலும், "அங்காரகன்" மேஷத்திலும், 'புதன்' மகர—கும்பங்களிலும், 'குரு' மிதுனத்திலும், 'சுக்கிரன்' மகரத்திலும், 'சனி' துலாத்திலுமாக இதர கோள்கள் யாவும் ஸஞ்சரித்து வருகின்றன. இதனால்:—ரிஷபம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை உண்டாகும். மிதுனம், கன்னி, விருச்சிகம் மகரம் இந்த ராசிக்காரர்களுக்கு மத்திய பலன்களும், மேஷம், கடகம், மீனம் இந்த ராசிக்காரர்களுக்குச் சற்று சிரமமான பலன்களுமாக

* குறிப்பு.—இந்தப் பலன் பொதுவானது, தனித்தனி கூறப்படும் உங்கள் சொந்தப் பலன் முக்கியமானது. ஆனால், ஸஞ்சார பலனில் வரும் பொது நலனும் சேர்த்துக் கவனிக்க வேண்டுவதே. ஸஞ்சார பலன் நல்லதாக விருந்து, சொந்த பலன் கெடுதலாக விருந்தால், முன்னையதால் பின்னதன் கெடுதல் சுகமடையும். அந்த விதம் சஞ்சார பலன் கெடுதலாயின், சொந்தப் பலனின் நலத்தை ஓரளவு குறைக்கும். இரண்டும் நல்லதாயின் விசேஷமாகும். இரண்டும் கெடுதலாயின் தீது. இப்படிக் கவனித்துக் கொள்ளவும். சஞ்சாரம் சூரியன் நின்ற ராசிக்கே.

நடைபெறும், இதில் ரிஷப ராசிக்காரர்கள் பிரயாண வகையிலும், சிம்ம ராசிக்காரர்கள் நூதன முயற்சிகளிலும், துலா ராசிக்காரர்கள் காதல் அம்சங்களிலும், தனுசு ராசிக்காரர்கள் சினேக ஆதரவினாலும், கும்ப ராசிக்காரர்கள் ஆதாய வகையினாலும் அனுகூலம் பெறுவார்கள், மற்ற ராசிக்காரர்கள் ஜாக்கிரதையுடன் இருப்பது நலமாம், அதிர்ஷ்ட சித்திகளில், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், கும்பம் இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை உண்டாகும்.

**பருவ நிலை**:—காற்று வேகம் குறைந்து நாளுக்கு நாள் வெய்யில் கடுமையாகி தாபம் அதிகரித்து வரும், பனி நீங்கி வரும், சிற்சில சமயங்களில் மேக ஸஞ்சாரம் ஏற்பட்டு கலைவதாகும்.

**வர்த்தக நிலை**:—விலை வாசிகள் அநேகமாய் குறைந்து வரும். பண்டங்கள் நயக்கும், வியாபாரிகளுக்கும் அனுகூலம் குறையும். தோல், ரப்பர், கொப்பரை சிறிது விலை ஏற்றமாய் வரும், பஞ்சு, மணிலா, பருத்தி—சம விலையாயிருக்கும். சணல், சாயம், சர்க்கரை ஏற்றத் தாழ்வாக இருக்கும்.

**சர்வதேச நிலை**:—உலக ஸமாதானத்திற்கான முயற்சிகளிலும் முன்னேற்றத்திற்கான வகையிலும், பிரதி நாடுகளும், முயற்சிக்கும்; மனப்பான்மையில் பிளவுகள் ஏற்பட்டு வரும்; துஷ்பிரசாரங்களும் கலகமும் அடங்கி வருவதாகும்.

**இந்திய அரசியல்** :— சீர்திருத்தத்திற்கான பல திட்டங்களை வகுத்து வருவதில் பிரசாரங்களும், பிரயத்னங்களும் ஏற்பட்டு வரும், துற்சக்திகளின் வேகம் குறையும் புதிய பல திட்டங்களில் ஈடுபடும்படியாகும்; எதுவும் அமுலுக்கு வராமல் தடைப்பட்டு வருவதாகும்.

### அதிர்ஷ்ட தினங்கள்

| | | |
|---|---|---|
| வர்த்தகம்:— | 1-6-10கா-11-14மா | உ |
| ஒப்பந்தங்கள்:— | 2-5-8கா-10-12மா | ,, |
| விவசாயம்:— | 1-4-9கா-10-14மா | ,, |
| கடிதங்கள்:— | 2-6-10கா-11-12மா | ,, |
| காவியஞ் செய்ய:— | 1-4-6கா-10-12மா | ,, |
| ஓவியந் தீட்ட:— | 4-6-8கா-9-11மா | ,, |
| பயிற்சிகள்:— | 1-5-9கா-10-12மா | , |
| ஆராய்ச்சிகள்:— | 2-4-8கா-9-14மா | , |
| இரஸாயனங்கள்:— | 4-5-9கா-10-12மா | ,, |
| மந்திரார்த்தங்கள்:— | 1-4-11கா-12-14மா | ,, |
| யந்திர முயற்சிகள்:— | 2-5-9கா-10-12மா | ,, |
| சந்திப்புகள்:— | 4-5-10கா-11.18மா | ,, |

**சுப முகூர்த்தங்கள்** :—4உ வெள்ளிக்கிழமை, சுக்ல ஏகாதசி புனர்பூச நக்ஷத்திரம், காலை மணி 6½க்கு மேல் 7-0க்குள் கும்ப லக்னத்தில் விவாகம்.

13உ ஞாயிற்றுக்கிழமை, பஞ்சமி சுவாதி நக்ஷத்திரம் காலை மணி 6-0க்கு மேல் 6½க்குள் கும்ப லக்னத்தில் முகூர்த்தம்.

### உங்கள் சொந்தப் பலன்

அறிய நீங்கள் பிறந்தபொழுது சூரியன் நின்ற இராசியைக் கொண்டு பலனைக் கீழே காணுங்கள்:—

**மேஷம்**:—தொழில் சம்பந்தமாய் புதிய முயற்சிகளும், ஏற்பாடுகளும் உண்டாகும் அன்னியர் சகாயத்தை எதிர்பார்க்கும்படியாகும். இருப்பிடம் மாறும்படியான சிந்தனைகள் உண்டாகும். குடும்ப நடப்பில் சௌகரியக் குறைவு ஏற்பட்டு நிவர்த்தியாவதும், சுப சம்பந்தமான முயற்சிகள் ஏற்படும். பந்து ஜன சேர்க்கை உண்டாவதும், குடும்பச் செலவுகள் அதிகமாவதும், வீண் பிரயாசைகள் ஏற்படுவதும், அன்னியர் சகாயத்தை எதிர் பார்ப்பதும், சிலரிடம் பகை பாராட்டிக்கொள்ளும்படியாவதும், தன நடப்பில் சௌகரியக் குறைவு ஏற்படுவதும். வரும், 1,6,8,10,14 தேதிகள் சுபமானவை.

**ரிஷபம்**:—பிரயத்தன காரியங்கள் கைகூடிவரும். இருப்பிடம் மாறும்படியாகும், அல்லது வெளியூர் போய்வர ஏற்படும், உத்தியோகத்தில் சில அனுகூல மாற்றம் ஏற்படும். பெரிய மனுஷ்யர்கள் ஆதரவு ஏற்படும். கலகச் சேதிகளில் கலந்து கொள்ளும்படியாகும். வியாபார நடப்பில் மந்த வருமானம் ஏற்பட்டு வருவதும், சுபச் சங்கதிகள் கேள்விப்படும்படியாகும். சினேகிதரால் நன்மையும், குடும்பச் சௌகரியமும் ஏற்பட்டுவரும், செய்காரியங்களில் வேகமும், அலைச்சலும் ஏற்பட்டு வருவதாகும். 2,5,9,12,14, தேதிகள் சுகமானவை.

**மிதுனம்**:—பிறர் சகாயத்தின்பேரில் புதிய வகை தொழிலில் மாறும்படியாகும் சத்துரு ஜனங்கள்மூலம் கவலை ஏற்பட்டு நீங்கும். அன்னியர் காரியங்களில் தலையிடும்படியாகும். வியாபார வகையில் புதிய ஏற்பாடுகள் உண்டாகும், குடும்பம், பந்து இவ்வகையில் கிலேசம் ஏற்பட்டு நீங்கும், உத்தியோகத்தில் நன்மையும் சுபகாரியங்களில் ஈடுபடும்படியாவதும் உண்டாகும். விவாத விஷயங்களில் கலந்து கொள்ளும்படியாகும். வெளியூரிலிருந்து நற்சேதி கேள்விப்பட நேரும், சிலரிடம் பகை ஏற்பட்டு நீங்குவதுமாகும். 4,6,8,10,14 தேதிகள் சுத்தமானவை.

**கடகம்**:—உத்தியோகத்தில் சில அனுகூல மாற்றம் ஏற்படும். அதிகாரிகளின் ஆதரவு ஏற்பட்டுவரும், குடும்பத்தில் சௌகரிய நிலைமை உண்டாகும், தன நடப்பிலும் சௌகரியம் ஏற்பட்டுவரும், பந்துக்களிடமிருந்து நற்சேதி கேள்விப் படும்படியாகும். செய் தொழிலில் சிறிது

கலக்கம் ஏற்பட்டு நீங்கும். சுபகாரியங்களில் முயற்சியும், செலவும் ஏற்பட்டு வரும், கொடுக்கல் வாங்கல் வகையில் சௌகரிய நிலைமையும், ஆரோக்ய சம்பந்தமாய்ச் செலவுகள் ஏற்படுவதுமாகும். 1,4,5,9,12 தேதிகள் சுபமானவை.

**சிம்மம்:**—செய் காரியங்களில் ஆலஸ்யம் ஏற்படும். நெருங்கிய பந்துக்களால் கவலை ஏற்படும். உத்தியோக நடப்பில் நன்மையும், பெரிய மனுஷ்யர்கள் ஆதரவும் ஏற்படும். எழுத்து ரெகார்டு இவ்வகையில் நன்மையும், பிறர் சகாயமும் உண்டாகும். தன நடப்பில் சௌகரியமும், கொடுக்கல் வகை நிர்ப்பந்தம் நீங்குவதும், வியாபாரத்தில் புதிய வகை முன்னேற்றங்கள் ஏற்படுவதும், கலகச் சேதிகள் கேள்விப்பட நேருவதும், வீண் வகையில் செலவுசெய்ய நேருவதும், சுபச்சேதி கேள்விப்படும்படி நேருவதுமாகும். 2,5,8,10,14, தேதிகள் சுகிர்தமானவை.

**கன்னி:**—செய் தொழில் விருத்திக்கு வரும். இடம் மாறும்படியான அவசியம் ஏற்படும். இரகசிய சத்துருக்கள் மூலமாய் மனதிற்கு ஆயாசம் ஏற்படும். துர்ஜன சகவாசமும் உண்டாகும். வியாபார நடப்பில் விருத்திக் குரிய அம்சங்கள் ஏற்பட்டு வரும். குடும்ப நடப்பிலும், தன நடப்பிலும் சௌகரியங்கள் ஏற்படும். பந்துக்களிடமிருந்து கிலேசத்திற்குரிய சங்கதிகள் கேள்விப்படுவதன் மூலம் மனதிற்கு ஆயாசம் ஏற்படும். சிலரிடம் பகை ஏற்படும். பிறர் காரியங்களில் தலையிட நேருவதால் வருத்தமும் ஏற்படுவதாகும். 1,5,8,10, 12, தேதிகள் தக்கவை.

**துலாம்:**—தொழில் நடப்பில் சாமான்ய வருமானம் ஏற்பட்டு வரும். சுபச் சங்கதிகளில் கலந்து கொள்ளும்படி யாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய்ச் செலவுகள் ஏற்பட்டு வரும். பந்துக்களால் மனதிற்கு கிலேசமும், சத்துரு கலகமும் ஏற்படும். தன நடப்பில் சௌகரியம் ஏற்பட்டு வரும். இருப்பிடம் மாறும்படியான சிந்தனைகள் உண்டாகும். குடும்ப நடப்பிலும், தன நடப்பிலும் சௌகரியம் ஏற்பட்டு வரும். அன்னியர் சகாயம் ஏற்படும். வியாபார நடப்பில் சௌகரியமும், பெரிய மனுஷ்யர்கள் நேசமும் ஏற்பட்டு வரும். 4,6,9,10,14, தேதிகள் தகுமானவை.

**விருச்சிகம்:**—பழைய நடப்புகள் மூலம் சில சௌகரியமும், எழுத்து மூல்யத்தில் நன்மையும் உண்டாகும். உத்தியோகத்தில் சௌகரியமும், கொடுக்கல் வகை நிர்ப்பந்தம் நீங்குவதும் உண்டாகும். நெருங்கிய பந்துக்களிடமிருந்து கிலேச சங்கதிகள் கேள்விப் படுவதும், குடும்ப நடப்பில் சௌகரியமும், சுப சங்கதிகள் கேள்விப் படுவதும் ஏற்படும். மேலோர் நேசமும், ஆதரவும் உண்டாகும். வியாபார வகையில் சிறிது முன்னேற்ற முண்டாகும். அலைச்சல் காரியங்களில் ஈடுபடும்படி யாவதும் உண்டாகும். 1,5,6,9,12,14, தேதிகள் ஏற்றவை.

**தனுசு:**—இருப்பிடம் மாறும்படியாதல் அல்லது வெளியூர் போய் வருதல் இப்படி ஏற்படும். புதிய வகை சகாயம் ஏற்பட்டு தொழில் முன்னேற்றம் உண்டாகும். பந்துக்களிடமிருந்து கலகச் சேதிகள் கேள்விப்படும்படியாகும். பிறர் காரியங்களில் தலையிடுவதால் நன்மை உண்டாகும். சுப காரியங்களில் கலந்து கொள்ள நேரும். ராஜாங்க மூலமாய் எதிர்பார்க்கும் காரியங்கள் அனுகூலமாகும். சில பொருள் வாங்கும்படியாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய் குடும்பத்தில் செலவும் ஏற்படுவதாகும். 2,6,9,10,12 தேதிகள் தரமானவை.

**மகரம்:**—தொழில் ஸம்பந்தமான புதிய சிந்தனைகள் உண்டாகும். சில பொருள் விற்கும்படியாதல் அல்லது மாற்றிக்கொள்ளும்படியாதல் இப்படி ஏற்படும். தன நடப்பில் சௌகரியக் குறைவு உண்டாகும். சினேகிதர் ஆதரவு ஏற்படும்; பெரிய மனுஷ்யர்கள் சினேகம் ஏற்படும். குடும்ப நடப்பிலும், ஆரோக்ய ஸம்பந்தமாயும் கவலைகள் ஏற்படும். எந்த முயற்சிகளும் தடைப்பட்டு வருவதன் மூலம் மனதிற்கு ஆயாசம் ஏற்பட்டு வரும். வெளியூரிலிருந்து நற்சேதி கேள்விப்பட நேருவதாகும். 4.6,8,10,12 தேதிகள் ஸாரமானவை.

**கும்பம்:**—வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவரும். வெளியூர் பிரயாணம் போய் வரநேரும். தெய்வ காரியங்களில் ஈடுபடுவதும், பந்துக்களால் கிலேசமும் உண்டாகும். பெரிய மனுஷ்யர்கள் சினேகமும் ஆதரவும் ஏற்படும். முயற்சிக்கும் காரியங்கள் அனுகூலமாகும். பழைய சினேகிதரால் வருத்தம் ஏற்பட்டு நீங்கும். வீண் வகையில் செலவு செய்ய நேரும். முக்கியஸ்தர்களின் சந்திப்பு உண்டாகும், சுப காரியங்களிலும், புண்ணிய காரியங்களிலும் செலவு செய்ய நேரும். 1,4,6,9,12 தேதிகள் மேலானவை.

**மீனம்:**—உத்தியோகத்திலும், செய் தொழில் ஸம்பந்தமாயும் சில சிக்கல்கள் ஏற்பட்டுவரும். வரவேண்டியவை தடையாகும். அன்னியர் சகாயத்தை எதிர்பார்க்கும்படியாதலும், இடம் மாறும்படியாதலும் உண்டாகும். ஆரோக்ய ஸம்பந்தமாய் கவலைகள் ஏற்படும், பந்து சினேகிதர் ஆகியவர்களின் சகாயத்தை எதிர்பார்க்கும்படி யாகும். சிலரை நம்பி ஏமாறும்படி யாகும். செலவுகள் மிகுதியாய் வரும். திருப்திக் குறைவான நடைமுறைகள் ஏற்பட்டு வருவதாகும். 2,5,8,10,12,14 தேதிகள் மேன்மையானவை.